Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 20+16 | விலை – 30 ரூபா செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :60 தை 11ஆம் நாள் சனிக்கிழமை 25 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

Jaffna International Trade Fair
JITF 2020
24 25 26 ஜனவரி / January
10.00am - 8.00pm
முற்றவெளி மைதானம்
இன்று இரண்டாம் நாள்

## மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம்

### கிளிநொச்சியில் நேற்றுத் திறப்பு



கிளிநொச்சி, ஜன. 25
கிளிநொச்சியில் முதலாவது மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் இதனைத் திறந்து வைத்தார். 15 ➤

**முச்சந்தி முரளி**



"நீதிபதிக்கே தீர்ப்பு சொல் லூற நாட்டாமைதான் எங்கட ஜனாதிபதி போல...?"

# தீர்வினை தராவிட்டால் சர்வதேசம் தலையிடும்

### சம்பந்தன் மீண்டும் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜனவரி 25
இலங்கை அரசிடம் நாம் கேட்பதெல்லாம் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வையே. உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு மறுக்கப்பட்டால் நாம் வெளியக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வைக் கோர வேண்டிய நிலைமை வரும். அதன்போது சர்வதேசம் நேரில் தலையிடும். நாம் தன்மானத் தமிழர்கள். நாம் இந்த நாட்டின் தனித்துவமான இனத்தவர்கள். 17 ➤

## ஆளுநருடன் சந்திப்பு போராட்டம் முடிவுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 25
நிரந்தர நியமனம் உள்ளிட்ட 4 கோரிக்கைகளை முன்வைத்து பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதாரப் பணியாளர்களின் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.
வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர், செயலர் உட்பட நிர்வாக உறுப்பினர்களுக்கும் வடக்கு 15 ➤

## நீதிபதியின் கைதை நிறுத்தினார் கோத்தா

### விமல்வீரவன்ச தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 25
முன்னைய ஆட்சியில் பொய்யான அரசமைப்புச் சபை மூலமாக நியமிக்கப்பட்ட சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை வைத்துக்கொண்டு தொடர்ந்தும் பயணிக்க முடியாது. ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசி உரையாடலில் தொடர்புபட்ட சில நீதிபதிகள் இருக்கின்ற நிலையில் நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைதுசெய்யக் கூறுவது ஏன் என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய அமைச்சர் விமல் வீரவன்ச நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைதுசெய்ய சட்டமா அதிபர் கூறியபோது கைது செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அவரைக் கைது செய்ய இடமளித்தால் 17 ➤

## ஈஸ்டர் தாக்குதலுக்கு மனோவும் உடந்தையா?

### சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, ஜன. 25
கொழும்பில் வீடுகள் தோறும் பொலிஸார் மேற்கொண்ட விவரக்கோவை திரட்டு என்ற பதிவை ஏன் தடுத்து நிறுத்தினீர்கள்? இதன் மூலம் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு குற்றவாளிகளை முன்கூட்டியே கண்டுபிடிக்க முடியாமல் போனதை ஏற்றுக் கொள்கிறீர்களா? என்று முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனிடம் விசாரணையை மேற்கொண்டுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், அவரது வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளனர்.
இதுபற்றி மனோகணேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 17 ➤

## தமிழ் இளைஞர்கள் கடத்தல் சந்தேக நபர்களுக்குப் பிணை

கொழும்பு, ஜன. 25
2008ஆம் ஆண்டு கொழும்பில் தமிழ் இளைஞர்கள் 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் சந்தேக நபர்களான, முன்னாள் கடற்படைப் பேச்சாளர் உள்ளிட்ட 13பேர் பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.
இதேவேளை, முன்னாள் கடற்படைத் தளபதியும் அண்மையில் அட்மிரல் ஒப் த ப்ளீட் ஆகப் பதவி உயர்வு பெற்ற வசந்த கரன்னகொடவை 17 ➤



## வர்த்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 25
சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாண நகரின் முற்றவெளி மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 15 ➤

# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இராணுவத்திடம்

# ஒப்படைக்கப்பட்டவர்கள் எப்படி உயிரிழந்தார்கள்?

## சரவணபவன் எம்.பி. கேள்வி

சங்கானை, ஜன. 25

ஜனாதிபதியின் கூற்றுப்படி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்திருக்கலாம் என்றால், முள்ளி வாய்க்காலில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் இறந்துவிட்டார்களா? இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் இறந்திருந்தால் அவர்களுக்குப் பொறுப்புக் கூறுபவர்கள் யார்? இதற்கான பதிலை ஜனாதிபதி தெரிவிப்பாரா? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கேள்வி எழுப்பியுள்ளார்.



சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நேற்று பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் இ.சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த விளையாட்டு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு விளையாட்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வின் இறுதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கி வைத்தார்.

அவர் தனது பிரதம விருந்தினர் உரையில் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியுடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பின் போது இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என எவரும் இல்லை என்றும் அப்படி யாராவது காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவர்கள் உயிரிழந்திருக்க வேண்டும் என்றும் போரின் போது காணாமல் ஆக்கப்படுவது சாதாரண விடயம் தான் எனவும் குறிப்பிட்டிருந்தார். விசாரணைகள் மூலம் அவர்களுக்கான இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு நிவாரணமும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். இன்று மட்டுமல்ல பல காலமாகவே அவர் பாதுகாப்புச் செயலராக இருந்த காலத்தில் கூட காணாமல் ஆக்கப்பட்டோர் என எவரும் இல்லை என்றே கூறி வந்திருக்கின்றார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆதாரங்களுடன் சாட்சியங்களை முன்வைத்திருந்தனர். அவர்களின் சாட்சியங்கள் இராணுவத்தினர், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், துணை இராணுவக் குழுக்கள், ஈ.பி.டி.பியினர், கருணா பிள்ளையான் குழுவினர் தங்கள் பிள்ளைகளை கடத்திக் கொண்டு சென்றமை தொடர்பில் தெரிவித்திருந்தார்கள்.

அந்த ஆணைக் குழுவில் மக்கள் வழங்கிய சாட்சியங்கள் பற்றி அதற்கான பதில் பற்றி ஜனாதிபதி என்ன சொல்லப்போகின்றார் எனக் கேட்டுவைக்க விரும்புகின்றோம். அவர் காணாமல் ஆக்கப்பட்டோரை புலிகள் தான் கடத்தியிருக்கலாம் எனக் கூறுகின்றார். அப்படியானால் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், துணை இராணுவக் குழுவினர் அனைவரும் புலிகளா? 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் பெற்றோரும் மனைவியரும் தங்கள் பிள்ளைகளையும் கணவன் மார்களையும் படையினரிடம் பகிரங்கமாகவே ஒரு அருட்தந்தை தலைமையில் ஒப்படைத்தனர். இன்று ஒப்படைக்கப்பட்டவர்களும் இல்லை அருட்தந்தையும் இல்லை.

அதுமட்டுமல்ல 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் பலர் காணாமற் போயுள்ளனர். 2009 க்குப் பின்பு களத்தில் புலிகள் இல்லை. அப்படியானால் 2009ஆம் ஆண்டுக்குப் பின் காணாமல் ஆக்கப்பட்டவர்களை, காணாமற் போகச் செய்தவர்கள் யார்? இராணுவத்தினரின் பாதுகாப்புக்கு மத்தியில் நாடு இருக்கும் போது வீதிக்கு வீதி சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கும் போது இராணுவத்தினரைத் தவிர அல்லது பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரைத் தவிர வேறு யார் கடத்தியிருக்க முடியும்?

எனவே தான் 2009ஆம் ஆண்டுக்கு முன்பும் சரி 2009ஆம் ஆண்டுக்குப் பின்பும் சரி காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்கள் ஆட்சியாளர்களே. அதேபோன்று ஜனாதிபதி கூறுவது போன்று அவர்கள் இறந்திருந்தால் அவர்களின் இறப்புக்கான முழுப் பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் இன்று ஜனாதிபதியின் கூற்றுகள் சகல உண்மைகளையும் நிராகரிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன. நியாய பூர்வமான மக்களும் மனித உரிமைகள் அமைப்பும், சர்வதேச நிறுவனங்களும், ஐக்கிய நாடுகள் அமைப்பும் கண்ணை மூடிக்கொண்டு இருக்கின்றன என்று ஜனாதிபதியோ அல்லது அவரின் நிழலில் வளரும் இனவாதிகளும் நினைப்பார்களாயின் அவர்கள் கண்ணைக் கட்டிக்கொண்டு குழியில் விழுகின்றார்கள் என்பதே அர்த்தமாகும் - என்றார். (ஒ.5.21)

## இலவசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.ஜன.25

இலவச கருத்தரங்குகள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை இலவச கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறும். எதிர்காலத்தில் சிறந்த துறைகள் எவை?, புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிக்கும் முறைகள், குறுகிய காலத்தில் எவ்வாறு பட்டப்படிப்பைப் நிறைவு செய்வது?, உள்நாட்டு வெளிநாட்டு தொழில் உயர் கல்வி வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் கருத்தரங்கில் ஆலோசனைகள் வழங்கப்படும்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரை "ஆரோக்கியமான வாழ்க்கை முறையும் நவீன கற்பித்தல் முறையும்" எனும் தொனிப்பொருளில் இலவசக் கருத்தரங்கு நடைபெறும்.

நோயின்றி எவ்வாறு வாழ்தல், நோய்களுக்கான அடிப்படைக் காரணங்கள், நோயிலிருந்து எவ்வாறு பாதுகாப்பைப் பெறுவது, திறமையான கற்பித்தல் முறைகள், உளவியலின் முக்கியத்துவம் போன்றவற்றுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும். (க)

## பொங்கல் விழாவும் கௌரவிப்பும்

அளவெட்டி,ஜன.25

யாழ்ப்பாணம் உரும்பிராய் வடக்கு நாகேஸ்வரர் அறநெறிப் பாடசாலையின் தைப்பொங்கல் நிகழ்வும் மாணவர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலைய அரங்கில் பொறுப்பாசிரியர் திருமதி விஜிதன் மகேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கோப்பாய் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.செல்வரூபன் பிரபா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஐ-63)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜன.25

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய நிறுவுநர் தினமும்; பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கடற்றொழில் மற்றும் நீரியல்வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ)

## ஆண்டு விழா

கொடிகாமம்,ஜன.25

கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு விழா உதய சூரியன் திறந்த வெளி அரங்கில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும். சனசமூக நிலையத்தின் தலைவர் த.பிரதீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், கௌரவ விருந்தினர்களாக கைதடி மத்தி கிராம அலுவலர் கு.சிவகுமாரசர்மா, சாவகச்சேரி சிங்கர் முகாமையாளர் மயூரன் சோபனா, நிலைய ஆரம்ப கால தலைவர் கு.பூபாலசிங்கம், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் ஏ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

## கருத்தரங்கு

கொழும்புத்துறை, ஜன.5

யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் துயருறுவோர் ஆண்டாக இவ் ஆண்டை யாழ்.ஆயர் அறிவித்துள்ள நிலையில், அது தொடர்பான செயற்றிட்டங்கள் தொடர்பான விளக்கக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.மறைமாவட்ட குருக்கள், துறவியருக்கான இந்தக் கருத்தரங்கு யாழ்.ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும். (க-135)

## மூன்று வீடுகளில் தொடர் திருட்டு

முகமாலை இந்திராபுரத்தில் நேற்று அதிகாலை மூன்று வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஓர் வீட்டில் அங்கு நிறுத்தி வைத்திருந்த டிஸ்கவர் ரக மோட்டார் சைக்கிளையும், ஓர் வீட்டில் 3 பவுண் தங்கச் சங்கிலி மற்றும் 25 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றையும், மூன்றாவது வீட்டில் 3 கைத்தொலைபேசிகளையும் திருடிச் சென்றுள்ளனர். (க-105)

## செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி,ஜன.25

கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் சி.சிவகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தின ராக தென்மராட்சிக் கல்வி வலய விவசாய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் து.செல்வராஜா, சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனைஅதிகாரிஅ.மனோரஞ்சிதன், கௌரவ விருந்தினராக கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

# வடக்கு மீனவர் பிரச்சினைக்கு ஒன்றுபட்டால் மட்டுமே தீர்வு

## உலக மீனவ ஒத்துழைப்பு இயக்கம் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜன.25

வடக்கு மீனவர்களுடைய பிரச்சினை என்ன என்பதை மக்கள் அறியும் படி மீனவர்கள் அனைவரும் ஒனறுபட்டுச் செயற்பட்டால் மட்டுமே அந்தப் பிரச்சினை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும், உலக மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மூத்த பிரதிநிதியுமான கே.ஹேமகுமார தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையுடன் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொதுச்சபைக்கூட்டம் யாழ்பாடி விருந்தினர் விடுதியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிராமங்கள் தோறும் எமக்குள்ள பிரச்சினைகளை ஆவணங்களாக்கி அவற்றை வெளியீடு செய்கின்ற வகையில் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். நாங்கள் அவ்வாறு செய்கின்றபோது தான் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்குகின்ற அத்தனை பிரச்சினைகளையும் வடமாகாண மக்கள் மட்டுமன்றி ஏனைய மாகாண மக்களும் அறிந்து கொள்வதற்கு இலகுவாக இருக்கும். மீனவர் பிரச்சினைகளுக்கு ஓரளவு வெற்றி காணக்கூடியதாக இருந்தாலும் முழுமையாக வெற்றிபெற முடியவில்லை.

இதனை முடிவுக்குக் கொண்டு வருவதாயின், அனைத்து மீனவர்களும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். இலங்கையில் கடற்றொழில் தொடர்பில் பல்வேறு சட்டங்கள் இருந்த போதும் ஒருசில சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. இவற்றை நடைமுறைப்படுத்தவேண்டிய கட்டாயம் உள்ளது. இதற்கு சட்டரீதியான நடவடிக்கைகளே எடுக்கப்படவேண்டும்.

தடை செய்யப்பட்டுள்ள தொழில் முறைகளைச் செய்வதன் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பில் அனைவரும் அறியத்தக்க வகையில் தெளிவூட்டல்களைச் செய்ய வேண்டும். கடல் வளங்கள் பாதிக்கப்படுதல், தொழிலாளர்களின் தொழில் வளங்கள் பாதிக்கப்படுதல், சமூகப் பாதிப்புக்கள் போன்றவை வெளிப்படுத்தப்படவேண்டும்.

இவை மட்டுமன்றி பாதிப்புக்களை எதிர்கொள்ள தொழிலாளர்கள் தொடர்பிலும் அடையாளப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்திய மீனவர்களின் வருகை மற்றும் தென்னிந்திய மீனவர்களின் வருகை, மாவட்ட ரீதியாக அத்து மீறிய மீனவர்கள் தொடர்பாகவும் அடையாளப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்- என்றார்.

(க-21)

# இந்தியா சென்றார் சிவாஜி

யாழ்ப்பாணம், ஜன. 25

இந்தியாவுக்குள் நுழைவதற்கு எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு நீண்டகாலமாக அனுமதி மறுக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் திடீரென்று அவர் இந்தியாவுக்குப் பயணமானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் விசுவாசி என்றுகூறி அவருக்கு இந்திய வீசா வழங்குவது பின்னடிக்கப்பட்டு வந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும் அனுமதி மறுக்கப்பட்டது. ஒருமுறை இந்திய விமான நிலையத்தில் தரை இறங்கிய பின்னரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில் உறுப்பினராக இருந்த காலத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 10 பேர் இந்தியா பயணித்த சமயம் சிவாஜிலிங்கத்துக்கு விசா வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்தமையால் அவரின் பெயர் நீக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், சிவாஜிலிங்கம் 10 நாள் பயணமாக இந்தியாவுக்குச் செல்ல நுழைவு விசா வழங்கப்பட்டுள்ளது. அவர் நேற்றுமுன்தினம் இந்தியாவில் தரையிறங்கியுள்ளார்.

(த-105)



தீவக அரிமாக் கழகத்தினரால் ஆனைக்கோட்டை உயரப்புலம்மெதடிஸ்மிசன்வித்தியாலயத்தில்கல்வி கற்கும் 3 மாணவர்களுக்குத் துவிச்சக்கரவண்டிகள் வித்தியாலயத்தில் வைத்துக் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டன. (க-422)

# ஊடகவியலாளருக்கு நகரசபையில் அஞ்சலி!



மறைந்த ஊடகவியலாளர் ஏ.ஆர்.எம் ஜிப்ரிக்கு நகர சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா நகரசபையின் அமர்வு சபையின் தலைவர் இ. கௌதமன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் அண்மையில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ. ஆர். எம். ஜிப்ரிக்கு அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தினர். பின்னர் அமர்வுகள் ஆரம்பமாகின.

(க-110)

## யோகா பயிற்சி ஆரம்பம்

யாழ்.யோகா உலகம் அமைப்பு புதிய யோகா பயிற்சி நெறிகளை நல்லூர்த்தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் செயலர் யோ.பிரசாத் தலைமையில் நடைபெறவுள்ளது. யோகா வகுப்புக்கள் திங்கட்கிழமை தொடக்கம் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம் 7 மணிவரை தினமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# குப்பைமேடெனத் தெரிந்தும் மக்கள் குடியேற்றப்பட்டனர்

## தவிசாளர் குற்றச்சாட்டு

வவுனியா,ஜன.25

பல வருடங்களுக்கு முன்னரே இருந்த குப்பைக் கிடங்குக்கு அருகில் வந்து வீட்டைக் கட்டுவது என்பது சரியான விடயம் இல்லை. குப்பைமேடு எனத் தெரிந்தும் மக்கள் இங்கு குடியேற்றப்பட்டுள்ளனர் என்று வவுனியா தெற்குத் தமிழ் பிரதேச சபைத் தலைவர் து.நடராஜசிங்கம் தெரிவித்தார்.

பம்பைமடுப் பகுதியில் குப்பை கொட்டுவதற்கு சாளம்பைகுளம் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்த விடயம் பல்வேறு மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டங்களிலும் பேசப்பட்டன.

குப்பைக் கிடங்கு அங்கு இருக்கும்போதே மக்கள் குடியேற்றப்பட்டனர்.

அது ஒரு தவறான விடயம். அத்துடன் பிரதேச சபையின் கட்டட அனுமதி இதுவரை பெறப்படவில்லை. அரசியல் பலம் அல்லது அதிகார பலத்தை வைத்தே மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் சில பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் பல வருடங்கள் கழித்தும் காணி உறுதிகள் வழங்கப்படவில்லை.

ஆனால் குறுகிய காலத்துக்குள் குடியேற்றப்பட்ட சாளம்பைகுளம் மக்களுக்குக் காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் குப்பை மேடு தொடர்பாக யாழ்.பல்கலைக் கழகம் மற்றும் வவுனியா வளாகத்தின் சூழலியளாளர்கள்,மாவட்டச் செயலாளர் என பல மட்டங்களில் கலந்துரையாடித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்று பல தடவைகள் பேசப்பட்டன.

இதற்கு 20 கோடி ரூபா பணத்தை ஒதுக்கித் தருவதாக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தெரிவித்திருக்கிறார். எனினும் இதுவரை காலமும் அவ்வாறான ஒரு நிதி வழங்கப்படவில்லை.

குப்பை கொட்டும் இடத்தை மறிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

வவுனியாவைப் பொறுத்த வரை பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலை,மருத்துவமனை ,நகரம் உட்பட பல திணைக்களங்களின் கழிவுகள் இங்கு கொட்டப்படுகின்றன.

இங்கு இருக்கும் 200 குடும்பங்கள் குப்பைகளைக் கொட்டுவதற்கு அனுமதிக்காது விடின் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மற்றும் திணைக்களங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தால் சட்ட நடவடிக்கைக்குச் செல்ல வேண்டி ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரும் கலந்துரையாடியே இதற்கான தீர்வைப் பெறமுடியுமே தவிர போராட்டம் மூலம் அல்ல- என்றார்.

(க-110)

# இடமாற்றமா, இல்லையா?

## குழப்பத்தில் செயலர்

யாழ்ப்பாணம், ஜன. 25

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் பணியாற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலரை நிதி அமைச்சின் கீழ் உள்ள இறைவரித் திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்த போதிலும், நிதி அமைச்சுக்கு எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மேலதிக செயலராகவும் மாவட்ட பதில் செயலராகவும் பணியாற்றும் எஸ்.சத்தியசீலனுக்கு கடந்த 17ஆம் திகதி தொடக்கம் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் என்று உத்தரவிட்ட இடமாற்றக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் பொறுப்புக்கள் கடமைகளைக் கையளித்துச் செல்வதற்காகவும் புதிய மேலதிக செயலரின் வருகைக் காலத்துக்காகவும் அவர் தொடர்ந்தும் கிளி நொச்சியில் பணியாற்றுகின்றார்.

இந்தநிலையில், நிர்வாக நடைமுறையின் பிரகாரம் பிறிதொரு அமைச்சின் கீழ் பணியாற்றுவதானால் இடமாற்றலாகிச் செல்லும் அலுவலருக்குரிய அமைச்சின் செயலர் புதிதாக இடம்மாற்றலாகிச் செல்லும் திணைக்கள அமைச்சின் செயலருக்குக் கடிதம் அனுப்ப வேண்டும்.

இத்தகைய கடிதம் நிதி அமைச்சுக்கோ அல்லது திறைசேரிக்கோ கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-105)

# மனோவுடன் பேசி விரைவில் முடிவு

## சம்பந்தன் திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 25

**நா**டாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மேல் மாகாணத்திலும் களமிறங்குவதா என்பது தொடர்பில் மனோ கணேசன் தரப்புடன் பேசி விரைவில் இறுதி முடிவு எடுக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பு, பம்பலப்பிட்டி அரசு தொடர் மாடிக் கட்டடத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கு, கிழக்கு வெளியே கொழும்புத் தேர்தல் மாவட்டம் உட்பட மேல் மாகாணத்திலும் களமிறங்குவது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. இது தொடர்பில் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் கூட்டத்தை மாவட்டக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராஜா நேற்றுமுன்தினம் மாலை பம்பலப்பிட்டியில் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதிசட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரையாற்றினார்.

சம்பந்தன் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அடுத்தபடியாக தமிழர்கள் அதிகம் கூடுதலாக வாழ்வது மேல் மாகாணத்தில்தான். நாம் இலங்கைத் தமிழர்கள். மேல் மாகாணத்தில் உள்ள நிலைமையையும் பரிசீலிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

தேர்தல் போக்குகளிலும் காலத்துக்குக் காலம் மாற்றம் ஏற்படுகின்றது. மேல் மாகாணத்தில் எமது எண்ணிக்கை நாடாளுமன்றத்தில் எமது உறுப்புரிமையை அதிகரிக்கப்படக் கூடிய வழியில் பயன்படுத்தப்படலாமா? இல்லையா? என்பது ஒரு முக்கியமான கேள்வி.

மேல் மாகாணத்தில் நாங்கள் ஓர் ஆசனத்தைப் பெற்றால் தெரிவின் மூலமாக போட்டியின் மூலமாக எமது மொத்த உறுப்புரிமையை அதிகரிக்க முடியும். அதேவேளை, மேல் மாகாணத்தில் எமக்கு விழக்கூடிய வாக்குகள் எமது தேசியப் பட்டியல் எண்ணிக்கையையும் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது தேவையா? இல்லையா? என்பது ஒரு முக்கியமான கேள்வி.

இன்றைக்கு பெரிய இரண்டு கட்சிகள் மத்தியில் சமீபகாலத்தில் கணிசமான போட்டி நிலவி வந்திருக்கின்றது. எதிர்காலத்தில் அது என்ன விதமாகப் போகும் என்பது சொல்ல முடியாது. ஆனால், ஏதுமொரு கட்சி மிகவும்கூடுதலான பெரும்பான்மை பெறுவது என்பது சந்தேகத்துக்கிடமானது என்பது பலருடைய கருத்து. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கூடுதலான ஆசனங்களைப் பெற்றால்கூட அவர்களுக்கு அறுதிப்பெரும்பான்மை பெறுவது கடினமாக இருக்கும். அது ஓர் சாதாரண பெரும்பான்மையாக இருக்கும் என்பது பொதுவான கருத்து. அவ்விதமான ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சியினது உறுப்பினர்கள் ஏற்படஇருக்கின்ற ஆட்சி ஒழுங்குகளில் ஒரு அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகலாம். அவ்விதமான பங்களிப்பு ஒன்று உருவாகுவதாக இருந்தால் அந்தப் பங்களிப்பை அர்த்தமுள்ளதாக்குவதற்கு எங்களுடைய உறுப்புரிமையை நாம் எந்தளவுக்கு அதிகரிக்கின்றோமோ அந்தளவுக்கு அது உதவியாக இருக்கும்.

இந்த அடிப்படையில்தான் இதை நாம் பரிசீலிக்கின்றோம். ஒரு நியாயமான முடிவுக்கு வரவேண்டும். அதே நேரம் இன்றைக்கு மேல் மாகாணத்தில் ஒரு தமிழ் மகன் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மகன் மனோ கணேசன் நாடாளுமன்ற உறுபினராக இருக்கின்றார். அவரின் உறுப்புரிமையைப் பெறுவதற்கு நாங்கள் பாதகமாக இருக்கக் கூடாது. சில சமயம் நங்கள் பாதகமாகச் செயற்படுகின்றபோது அது எமக்கும் பாதகமாக அமையலாம். அத்துடன், அவருக்கும் பாதகமாக அமையலாம். அந்த நிலைமை வரக்கூடாது.

அதையும் பரிசீலித்து அவர்களுடன் பேசி இந்த விடயம் சம்பந்தமாக ஒரு முடிவெடுக்க வேண்டும். இந்த விடயம் நீண்டகாலமாகப் பேசப்பட்ட ஒரு விடயம். ஆகவே, இது தொடர்பில் இன்றைக்கு முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். நாடாளுமன்றம் வருகின்ற மாத முடிவில் கலைக்கப்பட இருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் வருவதால் இதைத் தாமதம் இல்லாமல் நாங்கள் ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றார்.

இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்திய பின்னர், விரைவில் கொழும்பு மாவட்டக் கிளைக் கூட்டத்தைக் கூட்டி இறுதித் தீர்மானம் எடுப்பது என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஒ.5,22)

# அரச நிறுவனங்கள் இலாபமீட்டவேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

துரித பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதே சகல அரச நிறுவனங்களினதும் முதன்மைப் பொறுப்பாகுமென ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார். அரச நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிப்பதும் அரசுக்கு சுமையாக அமையாது இலாபமீட்டுவதும் நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகுமென சுட்டிக் காட்டினார்.

தேசிய பொருளாதாரம் மற்றும் பொதுமக்களுக்கான சேவை வழங்கல் ஆகியவற்றுக்கு நேரடிப் பங்களிப்பை வழங்கும் அரச கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் புதிய தலைவர்கள் மற்றும் மூத்த பதவி நிலை உத்தியோகத்தர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் எமது நாடு பொருளாதார அபிவிருத்தியில் ஆசியாவில் முதலிடம் வகித்தது. கடந்த சில ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே இன்று எமக்குள்ள பாரிய சவாலாகும்' என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் நவீன தொழிநுட்பங்கள் உள்ளீர்க்கப்படல் வேண்டும். பயிற்றப்பட்ட தொழிற்படை மற்றுமொரு முக்கிய காரணியாகும். மூன்றாம் நிலை கல்விக்கு இளையோர் அதிகளவில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டியதன் தேவை குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

'மக்களுக்கு சேவையாற்றக்கூடிய மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பெருமளவு பங்களிப்பு வழங்கக்கூடிய துறைகள் இனங்காணப்பட்டு, அவை முன்னேற்றப்பட வேண்டும். சுற்றுலாச் சபை, முதலீட்டுச் சபை போன்ற நிறுவனங்களுக்கு இதன்போது முக்கிய பொறுப்புக்கள் உள்ளன. கடந்த காலத்தில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து மீண்டு, பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்த நிறுவனங்கள் உரியவாறு பங்களிப்பு வழங்க வேண்டும்' எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்புக்கு வெளியே ஏனைய மாவட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் நகர்புற நெருக்கடிக்கு தீர்வாகுமென்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்களுக்குப் புதிய தொழிநுட்பத்தையும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்க வேண்டுமென குறிப்பிட்டார்.

இந்தச் செயற்பாடுகளின் போது ஏற்படக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தாம் தீர்வு வழங்கத் தயாராக உள்ளதாக வலியுறுத்திய ஜனாதிபதி, கடந்த தேர்தலில் மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையை அவ்வாறே நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நிறுவனத் தலைவர்களிடம் கேட்டுக்கொண்டார். (ஒ.5)

### ஏழாலையில்

# கசிப்புக்குகை முற்றுகை

யாழ்ப்பாணம், ஜன. 25

ஏழாலையில் 70 லீற்றர் கசிப்பு மற்றும் ஆயிரத்து லீற்றர் கோடாவுடன் இரண்டு நபர்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



காங்கேசந்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சர் சேனாதிராவின் குழுவினர் ஏழாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று மதியம் ஏழாலையில் பற்றையை முற்றுகையிட்டனர்.

கசிப்புக் காய்ச்சுவதற்குத் தயாராக 5 பெரல்களில் இருந்த கோடா, காஸ் சிலிண்டர், உற்பத்தி உபகரணங்கள், வடிகலன் என்று பலவற்றைக் கைப்பற்றி தெல்லிப்பழை பொலிஸில் பாரப்படுத்தியுள்ளனர். (ஒ.5,26)

# தோண்டியபோதும் எதுவும் சிக்கவில்லை

முல்லைத்தீவு, ஜன. 25

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் கோவிலின் பின்புறம் பொலிஸார் நிலத்தைத் தோண்டியபோதும், எதுவுமே சிக்க வில்லை. அதனால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

போர் இறுதிக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கம் மற்றும் ஆயுதங்கள் புதைத்து வைத்திருந்தனர் என்று கிடைத்த தகவலின்படி புதுக்குடியிருப்பு நகரில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் கோவிலுக்குப் பின்புறமாக இந்த அகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக பொலிஸார், விஷேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அகழ்வில் ஈடுபட்டனர். எனினும், எதுவுமே கிடைத்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (கு-9)

# இலங்கை ஜனாதிபதி மூடி மறைக்கிறார்

## காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் பிரிட்டன் தமிழர் பேரவை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

பல்லாயிரக்கணக்கான கொடூரமான படுகொலைகளை அரங்கேற்றிவிட்டு அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று நேரடியாக ஒப்புக்கொண்ட கோத்தாபய, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் எவ்வாறு யாரால் எதற்காகக் கொல்லப்பட்டார்கள் என்ற விடயங்களைத் தட்டிக்கழித்து, மூடிமறைத்து முடிவுக்குக்கொண்டுவர முயற்சிக்கின்றார் என்று பிரிட்டன் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இது பற்றி பேரவை அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2009ஆம் ஆண்டு முள்ளி வாய்க்கால் போர்முடிவடைந்த பின்னர் இலங்கை அரச படையினரிடம் சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்ட 18 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் விவரங்களை வெளியிட வேண்டும் என்று சர்வதேச அரங்கில் பிரிட்டன் தமிழர் பேரவை தொடர்ச்சியாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

அதையொட்டி காணாமற்போனவர்களின் உறவுகள் அவர்களைத் தேடித்தருமாறும் அவர்கள் சம்பந்தமான விவரங்களை வெளியிடுமாறும் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்தன.

இதனை ஆராய 2015 இல் ஐ.நா. மனித உரிமை சபையின் தீர்மானம் 31/1இல் அதற்கான சரத்து இணைக்கப்பட்டிருந்தது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயங்கள் சர்வதேச அரங்கில் முக்கியமான பேசுபொருளாக உருவெடுத்தது.

ஆனால் ஜனாதிபதி காணாமலாக்கப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று கூறினார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இறுதிக்கட்டப் போரில் இலங்கையின் பாதுகாப்புச் செயலராக இருந்து தமிழினப் படுகொலைச் சூத்திரதாரியாக வழிநடத்திய கோத்தாபய ராஜபக் ஷஅளித்த ஒப்புதல் வாக்குமூலமாகவே இதைப் பார்க்க வேண்டும் - என்றுள்ளது. (த)

செயற்றிறன் மிக்க

# உத்திகளை கையாளுங்கள்

## பொலிஸாருக்கு பாதுகாப்பு செயலர் வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 25

திட்டமிட்ட குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த செயற்றிறன் மிக்க உத்திகளை கையாண்டு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு பொலிஸாரிடம் பாதுகாப்பு செயலர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் பரவலாக காணப்படும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு சிறந்த திட்டமிடல் மற்றும் கூட்டு முயற்சிகள் மூலம் பொலிஸார் மேலும் திறம்படச் செயற்பட முன்வர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக மூத்த பொலிஸ் அதிகாரிகளுடன் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திட்டமிட்ட குழுக்களால் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத ஆக்கிரமிப்பு, சதுப்பு நிலங்களை நிரப்புதல், கப்பம்கோரல், தனியார் நிலங்களை பலவந்தமாகக் கையகப்படுத்துதல், சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்செல்லல், போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தல் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறு த்தல்கள் ஆகியவற்றில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சட்டத்தை மதிக்கும் சமுதாயம் மற்றும் பாதுகாப்பான தேசத்தை உருவாக்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும். குற்றவாளிகளை கைது செய்வதற்கும் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு உதவி தேவைப்படும்பட்சத்தில் மேலதிக ஒத்துழைப்புக்களை வழங்கும் வகையில் சிறப்பு அதிரடிப் படை மற்றும் முப்படையினர் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொலிஸார் தமது நற்பெயரைப் பாதுகாக்கும் அதே வேளை மக்கள் எதிர்பார்க்கும் விதத்தில் நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்து தமது கடமைகளைச் திறம்பட செய்ய வேண்டும். சமூகத்தில் ஒருசிலர் பொலிஸாரைப் பற்றி மாற்றுக்கருத்துக்களை முன்வைக்கும் அதேவேளை, அநேகமானோர் பொலிஸாரின் சேவையை உன்னதமானதாக கருதுகின்றனர். உங்கள் கடமைகளை நீங்கள் எவ்வாறு மேற்கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே பொலிஸார் பற்றிய பொது மக்களின் கருத்து அமையும் - என்றார். (ஒ,5,24)

# குரல் பதிவுகள்

## சமர்ப்பிக்கப்படவில்லை

*சபாநாயகர் அறிவிப்பு*

கொழும்பு, ஜன. 25

குரல் பதிவுகள் அடங்கிய இறுவட்டுக்களை ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்றத்திடம் கையளிக்கவில்லை என்று சபாநாயகர் கரு ஜயசூரிய சபையில் நேற்று அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றச் செயலர் நாயகத்திடம் அதனை வழங்குவதாகக் கூறிய போதும் ரஞ்சன் ராமநாயக்க வழங்கவில்லை என்று சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பு ஒன்றுடன் அதிகாரி ஒருவரிடம் வழங்கியுள்ளார். பின்னர் அந்த அதிகாரியிடமிருந்து அதனை மீளப்பெற்றுள்ளார். இதன் காரணமாக அது குறித்து நாடாளுமன்றத்துக்கு எவ்வித பொறுப்புகளும் இல்லை என்று சபாநாயகர் தெரிவித்தார். (ஒ,5)

## கோத்தாவின் பரிந்துரைக்கு அரசமைப்புச் சபை அனுமதி

கொழும்பு, ஜன. 25

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராகக் கடமையாற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி யசந்த கோதாகொடவை, உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு அரசமைப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி யசந்த கோதாகொட உயர் நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கு ஏற்படும் வெற்றிடத்துக்கு ஏ.எச்.எம்.திலீப் நவாஸை நியமிப்பதற்கும் அரசமைப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

அரசமைப்புக்கு அமைவாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ மேற்குறிப்பிட்ட பெயர்களை அரசமைப்புச் சபைக்குப் பரிந்துரைத்திருந்தார்.

சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இராஜாங்க அமைச்சர் மஹிந்த சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல, சிவில் அமைப்பின் உறுப்பினர்களான என். செல்வகுமார், ஜாவிட் யூசுப் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ஒ,5)

## சட்டமா அதிபருக்கு எதிராக சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 25

எம்பிலிப்பிட்டிய மேல் நீதிமன்றின் நீதிபதியாக இருந்து பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு வழங்கியுள்ள உத்தரவு சட்டத்துக்கு முரணானது எனக் கூறி கொழும்பு நீதிவான் நீதிமன்றின் சட்டத்தரணிகள் புதுக்கடையிலுள்ள நீதிமன்றக் கட்டட தொகுதிக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 'பிலப்பிட்டியவுக்கு நடைமுறைப்படுத்தும் சட்டம் தில்ருக்சிக்கு எங்கே?', 'நீதி, நியாயம் சட்டமா அதிபரின் மலர்ச்சாலையிலும் இல்லை', 'சட்டமா அதிபரின் அச்சுறுத்தலிலிருந்து மேல் நீதிமன்றங்களைப் பாதுகாப்போம்' போன்ற வாசகங்கள் அடங்கிய தமிழ், சிங்கள, ஆங்கிலப் பதாதைகளைத் தாங்கி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (ஒ,5,22)



## மிதந்து வந்த கஞ்சா பொதி

கிளிநொச்சி, ஜன. 25

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு வெற்றிலைக்கேணி கடலில் மிதந்து வந்த கஞ்சா பொதி ஒன்று நேற்று முன்தினம் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் பொதி மிதந்து வருவதை அவதானித்த கடற்படையினர் அதனை மீட்டுப் பார்த்தபோது கஞ்சா இருந்ததை அவதானித்துள்ளனர்.

மிகவும் மோசமாகப் பழுந்தடைந்த நிலையில் அது காணப்பட்டது என்று தெரியவந்தது. அதை அவர்கள் பளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சுமார் 1.5 கிலோகிராம் எடையுள்ள கஞ்சா பொதியை நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளோம் என்று பளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-6)

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் யாரால் கொல்லப்பட்டார்கள்?

## கோத்தா வெளிப்படுத்த வேண்டும் என்கிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜன. 25

**கா**ணாமல் ஆக்கப்பட்டவர்கள் போரில் இறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ள ஜனாதிபதி, அவர்கள் எங்கே, எப்போது, யாரால் கொல்லப்பட்டார்கள் என்பதனையும் எந்த விசாரணையின் அடிப்படையில் அவர் இதனைக் கூறியிருக்கிறார் என்பதையும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நாட்டு மக்களுக்கும் கூறவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இறந்தவர்களை மீண்டும் தன்னால் கொண்டு வரமுடியாது என்றும் அவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி பொறுப்பற்ற முறையில் சர்வசாதாரணமாகக் கூறியிருக்கிறார்.

காணாமலாக்கப்பட்டவர்களின் போராட்டங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி இடும் நோக்கத்துடன் ஜனாதிபதி, 'இதுதான் உண்மை' என்று தனக்குத் தெரிந்த உண்மைகளின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதி எதிர்பார்ப்பதுபோல இந்தச் செய்தி 'போரில் பொறுப்புக்கூறல்' விதி முறைகளுக்கு அமைவானதாக இல்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ள ஜனாதிபதி எந்த விசாரணையின் அடிப்படையில் இதனைக் கூறியிருக்கிறார் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

விசாரணையை நடத்தியிருந்தால் அது எப்போது, யாரால் நடத்தப்பட்டது என்பதனையும் வெளிப்படுத்த வேண்டிய பொறுப்புக்கு தற்போது உள்ளாகியிருக்கின்றார். முக்கியமாக காணாமல் ஆக்கப்பட்ட பலரை இராணுவத்தினரிடம் கையளித்த உறவுகள், நண்பர்கள், நலன் விரும்பிகள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றார்கள். விசாரணைக்கு அவர்கள் எவரையும் அழைத்ததாகக் கூறப்படவில்லை. பின் எவ்வாறான விசாரணையின் அடிப்படையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று மக்கள் அறிய உரித்துடையர்கள்.

அதேவேளை, 20 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பது யாவரும் அறிந்ததே. அவர்கள் போரில் இறந்துவிட்டார்கள் என்று ஜனாதிபதி கூறியிருப்பது இறுதிப் போரில் நடைபெற்ற போர்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் உறுப்பு நாடுகள் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

உண்மையில் குறித்த தீர்மானம் பற்றியும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் அடுத்து எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனே அந்த உறுப்பு நாடுகளுக்குச் சென்று எமது விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துவதின் அவசியம் பற்றிப் பேசி வரவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மூன்று வகையானவர்கள் இருக்கிறார்கள். முதலாவது வகையினர் போரின் போது காணாமல் போனவர்கள். இரண்டாவது வகையினர் போர் வலயத்துக்கு அப்பால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள். மூன்றாவது வகையினர் போர் முடிந்த பின்னர் இராணுவத்தில் பொறுப்புள்ள அதிகாரிகளின் வேண்டுகோளை ஏற்று அவர்களிடம் சரண் அடைந்தவர்கள் அல்லது பெற்றோர் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்கள். இவர்கள் அனைவருமே இறந்துவிட்டார்கள் என்பதே ஜனாதிபதியின் கூற்றின் அர்த்தம்.

இன்றைய ஜனாதிபதியே போர் நடைபெற்றபோது பாதுகாப்புச் செயலராக இருந்ததுடன் தானே போரை வழிநடத்தி முடிவுக்கு கொண்டுவந்ததாக பல தடவைகள் கூறியிருப்பதால் அவரின் கூற்றில் உண்மையிருக்கக் கூடும். ஆகையினால்த் தான் காணாமல் ஆக்கப்பட்ட இத்தனை பல்லாயிரக்கணக்கான மக்கள் எப்படி இறந்தார்கள் என்ற பின்னணி சர்வதேச சமூகத்துக்கும் எமது மக்களுக்கும் முறையான சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றின் ஊடாக தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். இத்தகைய ஒரு பொறுப்புக்கூறல் நடவடிக்கையே நல்லிணக்கம் ஏற்படுத்த வழிவகுக்கும்.

ஜனாதிபதி தாம் நடத்திய விசாரணை பற்றிய முழு விவரங்களை யும் முதலில் வெளிப்படுத்த வேண்டும் அல்லது அவ்வாறு அவர் நம்பத்தகுந்த விசாரணை எதனையும் நடத்தவில்லையானால் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு அவர் வழிவகுக்க வேண்டும்.

அந்தக் கால கட்டத்தில் போர் முடிந்த பின்னர் எமக்குக் கிடைத்த தகவலின் படி இராணுவத்தினரே மக்களைச் சரணடையச் சொன்னார்கள் என்றும் இராணுவத்தினர் அவர்களைப் பாரம் எடுத்தார்கள் என்றும் கூறப்பட்டது. அப்படி என்றால் பாரமெடுத்த இராணுவத்தினரைக் கூப்பிட்டு அவர்கள் பொறுப்பேற்றவர்களுக்கு என்ன நடந்தது என்று ஏன் கேட்கவில்லை என்பதையும் ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஒ.5)

# கொரோனா வைரஸ் இலங்கை அவதானம்!

## சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன. 25

கொரோனா வைரஸ் தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது என்றும், அது இலங்கையில் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. பிரதான சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸால் சீனாவில் இரு நகரங்கள் முற்றாக நிலைகுலைந்துள்ளன. அது மட்டுமல்ல ஹொங்கொங், சிங்கப்பூர் வரையில் பரவியுள்ளது.

இன்று முதல் பெப்ரவரி 8 ஆம் திகதி வரையில் சீனாவின் புத்தாண்டுக் காலம் ஆரம்பமாகின்றது. சீனாவின் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவது கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இரட்டிப்பாகியுள்ளது. புத்தாண்டு காலப் பகுதியிலும் இங்கு வருவதற்கு அவர்கள் தயாராகி வருகின்றனர்.

வைரஸ் இலங்கையில் பரவுவதை தடுக்கும் வகையில் விமான நிலையம் உட்பட முக்கிய இடங்களில் அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். சுற்றுலாத்துறையை சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கில் அல்ல, அச்சுறுத்தல் நிலைமையைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதற்காகவே இது பற்றி தெளிவுபடுத்தினேன், என்றார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர், இது சம்பந்தமாக ஜனாதிபதியும், பிரதமரும் துறைசார் அமைச்சர் என்றவகையில் என்னிடம் கேட்டறிந்ததுடன், உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தனர்.

இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு விமானத்துக்குள் வைத்தே விசேட அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. ஏதேனும் நோய் அறிகுறிகள் இருந்தால் விமான நிலையத்திலுள்ள சுகாதார பிரிவுக்குத் தெரியப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அங்கு மருத்துவக் குழுவொன்று தயார் நிலையிலேயே இருக்கின்றது.

சீனாவில் இருந்துவந்த குழந்தையொன்று தொடர்பில் மேற்படி சுகாதார பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது. அந்தக் குழந்தையை பரிசோதித்த பின்னர் வயிற்று வலியாலேயே காய்ச்சல் ஏற்பட்டது கண்டறியப்பட்டது.

அரசு என்ற வகையில் இது தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கை வரும் பயணிகள் பரிசோதிக்கப்படுவார்கள். சீனாவில் இருந்துவரும் வருபவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும். இலங்கையில் கொரோனா வைரஸால் எவரும் பாதிக்கப்படவில்லை - என்றார். (ஒ.5,44)

# மெய்வன்மை போட்டி

சாவகச்சேரி, ஜன.25

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக் கழக விளையாட்டுப் பொறுப்பதிகாரி ம.சிறிதாஸ், சிறப்பு விருந்தினராக கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரி இ.எம்.எஸ். எதிரிசிங்க, கௌரவ விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் ஓய்வு நிலைப் பிரதி அதிபர் வை. மனோகரன், பழைய மாணவர் சங்க யு.கே கிளையின் செயலாளர் திருமதி. மாலதி பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

# மறியலுக்குச் சென்றார் மேஜர் அஜித் பிரசன்ன

கொழும்பு, ஜன. 25

ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் அஜித் பிரசன்னவை அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேல் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் அஜித் பிரசன்னவை கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்னிலையாகுமாறு நேற்றுமுன்தினம் அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. முன்னாள் நீதிவான் திலிண கமகேவிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்படும் வழக்குத் தொடர்பில் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்ததன் ஊடாக நீதிமன்றத்துக்கு அவமதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

நீதிமன்றில் முன்னிலையான அவரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஒ.5)

# சாளம்பைக்குளம் போராட்டம் நிறுத்தம்

## நீதிமன்றம் உத்தரவு

வவுனியா, ஜன. 25

வவுனியா - மன்னார் வீதி புதிய சாளம்பைக்குளம் கிராமத்துக்கு அருகில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள, குப்பைமேட்டை அகற்றும்படி பிரதேச மக்களால் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட கவனவீர்ப்பு நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

போராட்டம் நேற்றுக் காலை மூன்றாவது நாளாகவும் தொடர்ந்த நிலையில், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவரால் இந்த விடயம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. போராட்டம் மக்களது அன்றாடக் கடமைகளுக்கும் பாதுகாப்புக்கும் தடையாக இருப்பதாக மன்றுக்கு தெரியப்படுத்தப்பட்டது. போராட்டக்காரர்களை அந்த இடத்தை விட்டுச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்க பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நீதிமன்றம் உத்தரவு வழங்கியது.

போராட்டக்காரர்களுக்கு நீதிமன்ற உத்தரவைப் பொலிஸ் பொறுப்பதிகாரி காண்பித்திருந்தார். இதன் பின்னர் போராட்டம் நிறுத்தப்பட்டது போராட்டம் காரணமாக குப்பைகளை கொட்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாத வகையில் ஆர்பாட்டம் இடம்பெற்றதால் வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபை கழிவகற்றும் வாகனங்கள் நகரில் குப்பைகளை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. (ஒ.5,110)

## மெய்வன்மை போட்டி

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தி னராக யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவன விரிவுரையாளர் தி. நவநீதன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

**உடன் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் மருந்தகம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த பெண் **மருந்தக உதவியாளர், கணினி உதவியாளர், கணக்காளர்,** ஆகியோர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
புதிதாக பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு - 076 588 7252**

### அரச காணிகளின் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகள்

வடமாகாண அரச காணிப் பிணக்குகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் விசேட "விசாரணைக்குழு" நியமிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அரச காணிகள் தொடர்பான பின்வரும் விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகளை இந்த விசாரணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கமுடியும்.

- அரச காணிகள் பகிர்ந்தளித்தல் தொடர்பான முறைப்பாடுகள்
- அரச காணிகளில் அத்துமீறி குடியிருப்போர் தொடர்பான முறைப்பாடுகள்
- அரச காணிகளை முறையற்ற விதத்தில் கைமாற்றல் மேற்கொண்டமை தொடர்பான முறைப்பாடுகள்.
- அரச காணிகளை காணிச்சட்ட விதிகளுக்கு முரணாக போலி ஆவணங்கள் மூலம் கையகப்படுத்தியமை தொடர்பான முறைப்பாடுகள் (வெளிப்படுத்தல் உறுதி மற்றும் ஆட்சிஉறுதி)
- அரச காணிகள் வழங்கல் தொடர்பாக மக்கள் ஏமாற்றப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்
- அரச காணிகள் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள்.

மேற்படி முறைப்பாடுகளை மக்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ மற்றும் மின்னஞ்சல் (Email) மூலமாகவோ, 2020.02.15ம் திகதிக்கு முன்னராக சமர்ப்பித்தல் வேண்டும்.

**தபால் முகவரி:** தலைவர்,
அரச காணிகள் பிணக்குகள் விசாரணைக்குழு ,
ஆளுநர் செயலகம்,
வடமாகாணம்,
கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி : npgovland@gmail.com ( Email )

**வீடு வாடகைக்கு**

கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (புகையிரத நிலையத்தில் இருந்து 200 m. தொலைவில்)

**தொடர்பு -071 622 4398**

**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)**

**The Jaffna Co-Operative Stores Ltd**




நூறாவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும்

**1918 - 2018**

**காலம்** - 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்** - காலை 9.30 மணி
**இடம்** - கேட்போர் கூடம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகம்

பங்குதாரர்களும் முன்னைநாள் ஊழியர்களும், நலன்விரும்பிகளும் யாபேரும் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**530, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

**பணிப்பாளர்கள்
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச்சங்கம்.**

### கண்ணீர் அஞ்சலி



திருமதி
**வளர்மதி சத்தியதேவன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்
யாழ். ஞானக்குழந்தைகள் முன்பள்ளி)
கடந்த (23.01.2020) வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாலர் கல்விக்கழக நிர்வாகம்,
ஞானக்குழந்தை முன்பள்ளி ஆசிரியர்கள்**

### மரண அறிவித்தல்

பிறப்பு
18 . 09 . 1959



இறப்பு
22 . 01 . 2020

**திருமதி செல்வராசா சத்தியா**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா சத்தியா கடந்த (22.01.2020) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன் சரோஜினி தேவி தம்பதிகளின் அன்பு மகளும் பவித்திரா, பவதாரணி (கனடா), துளசி ஆகியோரின் அன்புத்தாயாரும் கஜபாவின் அன்பு மாமியாரும் ஆகாஷின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**188, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி**

**தகவல்:
குடும்பத்தினர்**

### மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 01 . 1996



இறப்பு
22 . 01 . 2020

**நடராசா கிருசாந்**

கொல்லவிளாங்குளம், வவுனிக்குளத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், யாழ். பல்கலைக்கழக வர்த்தக பீட 2 ஆம் வருட மாணவனும் ஆகிய நடராசா கிருசாந் இருதய சத்திர சிகிச்சை பலனின்றி 22.01.2020 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் நடராசா - அன்னபூரணம் தம்பதிகளின் பாசமிகு மகனும் கௌசிகா, கௌசல்யா (கனடா), பிரதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2020) முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கொல்லவிளாங்குளம் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொல்லவிளாங்குளம்,
பாடசாலை அருகாமை,
வவுனிக்குளம்.**

(CS 30784)
(14.17)

**தகவல்:
வே.நடராசா குடும்பம்.**

**076 873 4077/ 077 944 5522**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# குதிரைகள் ஓடிய பின்னர்....

எங்களிடத்தே ஒரு சண்டைக்கதை பரவலாகப் புழக்கத்தில் உண்டு. 80களில் ஒருவர் கொழும்புக்கு அரச வேலைக்காக ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து மெயில் ரயிலில் போய், பின்னர் வெள்ளிக்கிழமை இரவு அதே மெயில் ரயிலில் திரும்பி வருவார். இதுதான் அவருடைய வாழ்வியல் அட்டவணை. அப்படி ஒருமுறை ரயிலில் ஊருக்கு வந்து கொண்டிருந்தார். ரயில் மருதானையில் நின்ற போது, திபு திபுவென உள்ளே வந்த சிலர் சிங்களத்தில் இவரை எழும்பச் சொல்லியிருக்கிறார்கள். இவரோ சிங்களம் தெரியாதவர் போல, வேறு பக்கம் பார்த்தபடி 'பிராக்கு' பார்த்துள்ளார். மீண்டும் அவர்கள் எழும்பச் சொல்லவே, இவர் ஒன்றும் பேசாமல், பொக்கற்றுக்குள் இருந்த ரிக்கெற்றை எடுத்துக் காட்டி " இது என்ர சீற். வேணுமெண்டா வேற சீற்றில போய் இருங்கோ" என்று சொன்னதும் தான் தாமதம், 'பளார்' என்று அவர் கன்னத்தில் விழுந்தது ஒரு அறை.

" எழும்படா, நாங்கள் இறங்கும் வரை நீ இதில் இருக்கக் கூடாது" என்று பேசிவிட்டு, அவரது சீற்றில் அவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள். அனுராதபுரத்தில் அவர்கள் இறங்கும்வரை, யாழ்ப்பாணவாசி நின்றபடியே வந்தார். அதன் பின்னர் தான் சீற்றில் இருந்தார். ரயில் ஒருமாதிரி கோண்டாவிலில் அவரை இறக்கி விட்டு நகர்ந்தது.

அப்போதுதான் நம்மவருக்கு உணர்வு திரும்பியிருக்க வேண்டும். ஓடிப்போய் வேலியில் இருந்த கிளுவை ஒன்றை ஆவேசமாக முறித்தவர் , " எளிய சிங்கள நாயளே! ஆரோட சேட்டை விடுறியள்? துலைச்சுப் போடுவன் துலைச்சு" என்று கத்திக் கொண்டே, அந்த விடிகாலையில் வீதியால் போய் வருபவர்களை ஒரு கை பார்க்கத் தொடங்கினாராம்.

இப்படிச் சம்பவம் எங்கேயோ, எப்போதோ நடந்திருக்க அப்போதுவாளாவிருந்துவிட்டு தேவையில்லாத ஆணிகளைப் பிடுங்குவ தென்பது இலங்கையின் சி.ஐ.டியினருக்கு தொட்டில் பழக்கம். ஈஸ்டர் தாக்குதல் பற்றிய துல்லியமான புலனாய்வுத் தகவல்களை இந்தியாவும், அமெரிக்காவும் சில வாரங்களுக்கு முன்னரே இலங்கைப் புலானய்வுப் பிரிவுக்கு வழங்கிய போதும், அவர்கள் ஒரு துரும்பைக் கூட அசைக்க மனமில்லாதவர்களாக , தங்கள் வேலைகளில் மூழ்கி விட்டார்கள். பின்னர் குண்டுகள் வெடித்து, பேரழிவு நடந்து முடிந்த பின்னரே தலையைச் சொறிந்து கொண்டு " சொறி, எங்களுக்கு இது முன்னரே தெரியும்" என சி.ஐ.டி யினர் அசடு வழிந்தனர். அதன் பின்னர் பலகட்ட விசாரணைகளை நடத்தினரே தவிர, குண்டுதாரிகளோடு தொடர்புடையவர்கள் என்றுபகிரங்கமாகக்குற்றம்சாட்டப்பட்ட, அரசியல்வாதிகளை எதுவுமே செய்யவில்லை.

இப்போது குண்டு வைத்தவர்களையும், அதற்கு உடந்தையாக இருந்தவர்களையும் விட்டு விட்டு , முன்னாள் அமைச்சர் மனோ கணேசனுக்கும் குண்டுத்தாக்குதலுக்கும் தொடர்பு இருக்குமோ என்ற கோணத்தில் சி.ஐ.டி ஆராய்ந்து வருகிறதாம். கிட்டத்தட்ட மேல சொல்லப்பட்ட கதையில் வந்ததைப் போன்ற செயற்பாடே இது. மனோகணேசன் செய்த குற்றம் என்னவெனில், " தமிழ் மக்கள் மீதான பொலிஸ் பதிவை தடுத்து நிறுத்தியமை"என்று சி.ஐ.டி வெட்கமில்லாமல் சொல்லியிருக்கிறது.

கொழும்பில் இருக்கும் தமிழர்களை காலம் காலமாகப் பேரின அரசுகள் அந்தப் பதிவு, இந்தப் பதிவு என்று அலைக்கழித்து, எப்போதும் ஒரு அச்ச நிலைக்குள் வைத்திருப்பதையே விரும்பின. எனினும் மனோகணேசன் அமைச்சுப் பதவியேற்ற பின்னர் கொழும்புத் தமிழர்களின் இந்த அலைச்சல்களுக்கும், விவரக்கோவைத் திரட்டு என்ற பெயரில் நடக்கும் பதிவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார். இந்தப் பதிவை நிறுத்தியமைக்கும், குண்டு வெடிப்புக்கும் என்ன சம்பந்தம் என்பதை சி.ஐ.டியினர்தான் சொல்ல வேண்டும். ஏனெனில் தாக்குதலை நடத்திய அனைவரும் முஸ்லிம்கள். கொழும்பில் தமிழர்கள் மீதான விவரத் திரட்டின் போது, முஸ்லிம்கள் பதிவு செய்யாவிட்டாலும் பொலிஸார் அவர்களைக் கண்காணிப்பதில்லை.

ஒருவேளை அப்படி பதிவு செய்திருந்தாலும் கூட, சி.ஐ.டி யினர் ஒன்றும் கிழித்திருக்கவும் போவதில்லை. லட்டுப் போல,இந்தியா வழங்கிய புலனாய்வுத் தகவலையே உருப்படியாக விசாரித்து, தாக்குதலைத் தடுக்க முடியாதவர்கள், இப்போது குதிரைகள் ஓடிய பின்னர் லாயத்தைப் பூட்ட நினைக்கிறார்கள். இப்போது கூட உருப்படியான நபர்களைப் பிடித்து விசாரிக்காமல், மனோகணேசன் போன்ற பிள்ளைப்பூச்சிகளை ஸஹ்ரானோடு தொடர்பு படுத்துவது எந்தவிதத்தில் நியாயம்?

# சட்டவிரோதமாக அமைக்கப்படும் கட்டடங்களை தடுத்து நிறுத்துக!

## காரைநகர் பிரதேச சபைக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 25

காரைநகர் ஈழத்துச்சிதம்பர ஆலய சூழலில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுவரும் கட்டடங்கள், சிலைகளைத் தடுத்து நிறுத்துமாறு கோவில் நிர்வாகத்தினர் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளரிடம் கடிதம் மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆகம விதிமுறைகளுக்கு மாறாகவும் எமது அனுமதியின்றியும் ஆலய ஆன்மீகச் சூழலுக்குப் பாதகமாக கோவிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டு வரும் சிலைகள், கட்டடங்கள் தொடர்பாக எமது முழுமையான ஆட்சேபனையை தெரிவிப்பதுடன் இந்தச்செயற்பாட்டைத்தடுத்து நிறுத்தி கோவிலின் புனிதத் தன்மையைப் பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப்பிரசித்திபெற்ற இந்தக்கோவிலில் வருடத்தில் மூன்று முறை பெருந் திரு விழாக்கள் நடைபெறுகின்றன. மார்கழியில் பத்துத் தினங்கள் இடம்பெறும் திருவாதிரை உற்சவத்துக்கு ஈழத்தின் பலபாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் ஒன்றுகூடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-250)

# வெடிப்பொருள்கள் செயலிழக்க வைப்பு

கிளிநொச்சி, ஜன. 25



இயக்கச்சியில் மீட்கப்பட்ட வெடிப்பொருள்கள் செயலிழக்கச்செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி இயக்கச்சி மண்டலாய் ஆலயத்துக்குப் புதிய அன்னதான மண்டபத்தை அமைப்பதற்கு நேற்றுமுன்தினம் கிடங்கு வெட்டும்போது பரல் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை வெடிப்பொருள்கள் அடையாளம் காணப்பட்டன. இதுபற்றிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பளை பொலிஸார் கிளிநொச்சி நீதிவான் மன்றில் அனுமதி பெற்று விசேட அதிரடிப் படையினர் மூலம் குறித்த வெடிப்பொருள்களை மீட்டு செயலிழக்கச்செய்துள்ளனர். வெடிப்பொருள்கள் பழையவையாகக் காணப்பட்டன. போர் இடம்பெற்ற காலத்தில் அவை புதைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-6)

# சிறப்புத் தேவையுடையோர் விவரங்கள் திரட்டப்படுகின்றன

மூளாய், ஜன. 25

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிறப்புத் தேவையுடையோரின் விவரங்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஜெய்ப்பூர் நிறுவனம் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

போர்க்காலத்தில் மாவட்டத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் அங்கவீனமுற்று சிறப்புத் தேவையுடையவர்களாக வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-121)



# மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது போராட்டம்

வவுனியா, ஜன. 25

வவுனியா - மன்னார் வீதி புதிய சாளம்பைக்குளம் கிராமத்துக்கு அருகில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள, குப்பை மேட்டை அகற்றுமாறு கோரி, பிரதேச மக்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

குப்பைகளைக் கொட்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாத வகையில் ஆர்ப்பாட்டம் இடம்பெறுவதால், வவுனியா நகரசபை மற்றும் பிரதேசசபைக் கழிவகற்றும் வாகனங்கள் நகரில், குப்பைகளை அகற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு அதிகாரிகள் உரிய தீர்வு காணாத நிலையில், வவுனியா நகர்ப்பகுதிக் குப்பைகள் அனைத்தும் தேங்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. (க-110)



## பிணைமுறி மோசடியாளர் யாராயினும் நடவடிக்கை

### கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜன.25

இலங்கை மத்திய வங்கிப் பிணை முறியுடன் தொடர்புடையவர்கள் யாராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவேற்றியுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மத்திய வங்கிப் பிணைமுறிக் கொடுக்கல் வாங்கல் பற்றிய கணக்காய்வு அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முறைகேடுகள் யாரால் செய்யப்பட்டிருப்பினும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. சேறு பூசும் அரசியல் ஊடாக அது முடக்கப்படாமல் பாதுகாப்பதே முக்கியமானது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (எ)

## ஏழை மாணவருக்கு சகலரும் உதவுங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 25

வடக்கில் வறுமையால் கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களுக்கு உதவ சகலரும் முன்வரவேண்டும் என்று உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் நிறுவகத் தலைவர் மாவை.சோ.தங்கராஜா தெரிவித்தார். அதற்குத் தாமும் உதவுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

குடும்ப வறுமையாலும் மாணவர்கள் கல்வியை இழந்து தொழிலுக்குச் செல்கின்ற நிலையை அவதானிக்க முடிகின்றது.

எனவே புலம்பெயர் உறவுகள், புலம்பெயர் தொண்டு நிறுவனங்கள் தங்களாலான உதவிகளை நலிவுற்ற சமுதாயம் நோக்கி நகர்த்த வேண்டும் என்றும் தெரிவித்தார். (த-50)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

மிருசுவில் அ.த.க.பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ. நடராசா, சிறப்பு விருந்தினராக பழைய மாணவன் (பிரான்ஸ்) க.நிர்மலதாஸ், கௌரவ விருந்தினர்களாக பிரித்தானியக் கிளையின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ம. சிறிதாசன், தென்மராட்சி கல்வி வலயத்தின் ஒய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

## திடீர் பரீட்சையால் மாணவர்கள் குழப்பம்

கிளிநொச்சி,ஜன.25

கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் இயங்குகின்ற ஜேர்மன் தொழிநுட்பக் கல்லூரியில் பல்வேறு பிரச்சினைகள் இருந்து வந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், மீண்டும் மாணவர்களின் பரீட்சை விடயத்தில் நிர்வாகம் தவறிழைத்திருப்பதாக மாணவர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்தவருடம் குறித்த கல்லூரியில் கல்விகற்று 6 மாத கால பயிற்சிக்காக பல்வேறு மாவட்டங்களிலும் மாணவர்கள் பயிற்சி பெற்றுவரும் நிலையில் அவர்களுக்கான இறுதிப்பரீட்சை இன்று இடம்பெறும் என நேற்றுமுன்தினம் பிற்பகல் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கல்லூரியில் நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்ந்து இருந்து வருகின்றமையும் குறித்த பிரச்சினையை கல்வி கற்கும் மாணவர்களின் தலையில் பாரப்படுத்தி அவர்களது எதிர்காலத்தினை தீர்மானிக்கும் இறுதிப் பரீட்சையில் தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளதாக மாணவர்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

இவ்வாறு திடீரென பரீட்சை என அறிவிக்கப்பட்டதால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் வெளிமாவட்டங்களில் பயிற்சி பெறும் மாணவர்கள் வருகைதந்து பரீட்சைக்குத் தோற்றுவது கடினம் எனவும் தெரிவித்துள்ளனர். (ம)

# மாற்று அணிதான் தமிழருக்குக் கதி

## தமிழ் மக்கள் கூட்டணி கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஜன. 25

மாற்று அணி என்பது தமிழ் மக்களுக்கான சதி என்று கூறுவதையெல்லாம் முற்றாக நிராகரிக்கின்றோம். உண்மையில் இன்றைய அரசியல் சூழ்நிலையில் மாற்று அணி தான் தமிழ் மக்களுக்கான கதியாக இருக்கின்றது. என்று தெரிவித்துள்ளார், தமிழ் மக்கள் கூட்டணியின் கொள்கை பரப்புச் செயலாளர் க.அருந்தவபாலன்.

சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாற்று அணிக்கான செயற்பாடுகளை நாங்கள் சரியாக மேற்கொண்டுள்ளோம். பொங்கலையடுத்து அந்த அணி பற்றி அறிவிக்க இருந்தோம்.

எனினும், அண்மையில் எங்களுடைய அணியில் சேர விரும்பிய கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் தொடர்பாக நாங்கள் கலந்துரையாட வேண்டியுள்ளமையால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சென்ற காலத்தில் மக்களிடம் வாக்குகளைப் பெற்ற மக்களின் பிரதிநிதிகள் நல்லாட்சிக்கு முண்டு கொடுத்து கடைசியில் எமது மக்களை நட்டாற்றில் விட்டிரு க்கின்றார்கள்.

தங்கள் சுயநல அரசியலின் ஊடாக தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் வளர்ந்தனரே தவிர, மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

மீண்டும் அவர்கள் ஒற்றுமை பற்றியும் மாற்று அணி சதி என்றும் சொல்வதெல்லாம் மீண்டும் அவர்கள் பதவிக்கு வருவதற்கும் தங்களுடைய சுயநல அரசியலைக் கொண்டு செல்வதற்குமே.

எங்கள் அணியை மாட்டு அணியென்று கஜேந்திரகுமார் கூறியிருக்க மாட்டார் என்று நாங்கள் நம்புகின்றோம். ஆனால் சுமந்திரன் இவ்வாறு கூறியிருப்பார்.

கரும்பு சாப்பிடுவது போல அவர் பொய்களைச் சொல்லியுள்ளார்.

### சின்னம்

தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் மட்டக்களப்பு பொங்கல் விழாவில் "பொங்கல் பானை இருந்து என்ன பிரயோசனம் உள்ளீடுகள் எல்லாம் தங்கள் வீட்டுக்குள்தான் இருக்கின்றன" என்று கூறியிருந்தார்.

உள்ளீடுகளின் அளவை வைத்து, உள்ளீடுகளின் தரத்தை வைத்துத் தான் நாங்கள் பானையைத் தெரிவு செய்கின்றோம்.

எனவே அந்த அடிப்படை அறிவுகூட தமிழ் அரசுக் கட்சிச் செயலாளருக்குத் தெரியாமல் இருக்கின்றது போலுள்ளது.

### மாற்றம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அண்மைக் காலமாக இந்த அரசை விமர்சிக்கின்றனர். போர்க் குற்றவாளிகளுக்கு உயர் பதவிகள் வழங்கப்படுகின்றன என்று கூறுகின்றார்கள்.

இவர்கள் முண்டுகொடுத்த ஆட்சிக் காலத்தில்போர்க்குற்றவாளிகளுக்கு உயர் பதவிகள் வழங்கப்படவில்லையா? நல்லாட்சிக் காலத்தில் உரிமைகள் பற்றிச் சொல்வதற்கு வாய் திறக்காதவர்கள் இன்று உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்றார்களாம். கூட்டமைப்பினர் ஒற்றுமை முக்கியம் என்று கத்துகின்றனர்.

ஆனால் இன்று அந்தக் கட்சிக்குள்ளேகூட ஒற்றுமையைப் பேண முடியாதவர்களாக கொத்திக் கலைப்பவர்களாக இருக்கின்றனர்.

### விமல் வீரவன்ச

மன்னாரில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் பெயர்ப்பலகையில் பெயர் முதலில் தமிழில் இருந்தது. அமைச்சர் விமல் வீரவன்ச அதை இரண்டாமிடத்துக்கு மாற்றியுள்ளார்.

இந்தச் செயற்பாடு வருத்தமளிக்கின்றது.

பெயர்ப்பலகையில்கூட தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாத இனவாத ஆட்சி இங்கே நடக்கின்றது.

### காணாமல் ஆக்கப்பட்டோர்

காணாமல் போனோர் தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய கூறிய கருத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அந்தக் கருத்தை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்கின்றார்கள். அதாவது காணாமல் போனவர்கள் அத்தனை பேரும் இறந்திருக்கலாம்.

இறந்திருக்கக் கூடும் அல்லது இறந்துவிட்டார்கள் என்று சொல்வது எந்தவகையில் நியாயம்?. காணாமல் போனவர்கள் புலிகளால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சொல்வதும் எவ்வாறு நியாயமாகும்?.

### கோத்தாவிடம் பொறுப்பு

புலிகள்தமதுஆயுதத்தைமௌனித்த பின்னர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?. அந்த நேரத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் தற்பொழுது ஜனாதிபதியாக இருக்கின்ற கோத்தாபய ராஜபக்ஷ.

ஆகவே அவர்தான் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டியவர்.

அவர்கள் இறந்திருக்கலாம் என்று சொல்வதனூடாக அவர்களை தாங்கள் கொன்றுள்ளார்கள் என்பதை மறைமுகமாக ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பதாகத்தான் நாங்கள் கருதுகின்றோம்.

எனவே இந்த விடயத்தில் ஐ.நா. தீர்மானத்துக்கு அமைவாக நீதியான விசாரணையும் பொறுப்புக் கூறலும் அவசியமாகவுள்ளது.

அதை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம்-என்றார். (த-20)


## விழிப்புணர்வு கருத்தமர்வு

மன்னார்,ஜன.25

'சமாதானத்தையும்,நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்பு" எனும் தொனிப்பொருளில் மன்னாரில் விழிப்புணர்வுக் கருத்தமர்வு நடைபெற்றது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் வாழ்வுதய மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற கருத்தமர்வில் மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள், மற்றும் கிராம மட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இளையோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



இதன் போது ஊடகங்கள் ரீதியாக வெளி வருகின்ற செய்திகள், அதனால் ஏற்படுகின்ற சாதக,பாதக நிலைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன. (ஐ-56)

# யாழில் 300 ஏக்கரில் உ.கிழங்கு செய்கை

அச்சுவேலி, ஜன. 25

**யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகள் 300 ஏக்கரில் உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு 280 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு 50 வீத மானிய விலையில் வழங்கப்பட்டிருந்தது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.**



உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் சுமார் 2ஆயிரத்து 150 விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் கடந்த வருட காலபோக உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கான விதை கிழங்கு கடந்த நவம்பர் நடுப்பகுதியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. கிழங்கு நடுகை டிசெம்பர் மாதம் நடைபெற்றது. 280 மெற்றிக் தொன் 'சசி' ரக விதை கிழங்கு, 250 பெட்டி 'அனோவ' ரக கிழங்கு என்பன வழங்கப்பட்டிருந்தன.

உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கு ஏற்புடையதாக காலநிலை காணப்படுவதால் பயிர் நல்ல நிலையில் வளர்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட உருளைக் கிழங்கு அறுவடை பெப்ரவரி நடுப் பகுதியில் நடைபெறலாம் எனக் கூறப்படுகின்றது.

இந்த வருடம் உருளைக் கிழங்கின் சந்தை விலை உயர் நிலையில் காணப்படுவதால் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்குப் பாதிப்பு இல்லாதளவுக்கு வருமானம் கிடைக்கும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

(த-11)

## மெய்வன்மைப் போட்டிகள்

கரணவாய்.ஜன.25

உடுப்பிட்டி அ.மி.கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் பொறியியலாளரான கே.கௌரிபாலன் கலந்து கொள்வார். (க-108)

★★★

வல்வை மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் செல்வி ஆர்.சுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் நா.கந்ததாசன் கலந்து கொள்வார். (க-108)

★★★

வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வே.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக லண்டன் வல்வெட்டி நலன்புரிச் சங்க முன்னாள் தலைவர் மருத்துவக் கலாநிதி வை.சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-108)



# வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஜன.25

மடுக்கந்த தேசிய பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி அந்தப் பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்கள் வவுனியா வலய கல்வித்திணைக்களத்தின் முன்பாக வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 9.30 மணிக்கு கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக ஒன்றிணைந்த நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் திடீரென ஏ/9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமது பாடசாலைக்கு உடனடியாக ஆசிரியர்களை நியமிக்கும் பட்சத்திலேயே அங்கிருந்து செல்வோம் என்று கோசங்களை எழுப்பினர்.

அந்தப் பகுதிக்கு வருகை தந்த பொலிஸ் அதிகாரிகள், வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனை ஆர்ப்பாட்ட இடத்துக்கு அழைத்து வந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

வலயக்கல்விப்பணிப்பாளர் இரண்டு வாரத்தில் ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்குச் சம்மதம் தெரிவிக்காமல், பொலிஸார் மற்றும் வலயக்கல்வி அதிகாரிகளுடன் முரண்பட்டதுடன், எழுத்து மூலமாக தமக்கு உறுதிப்பாடு தரவேண்டும் எனக் கேட்டனர்.

மாகாண ஆசிரியர்களும் பற்றாக்குறையாக இருக்கின்றமையால் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் இருக்கிறது. இது தொடர்பாக மத்திய கல்வி அமைச்சுக்குத் தற்போது தெரியப்படுத்தியிருந்தோம். அவர்கள் ஆசிரியர்களைத் தருவதாகக் கூறியுள்ளனர். ஏனைய தேசிய பாடசாலைகளில் இருந்தாவது ஆசிரியர்களை மாற்றி நியமிப்பதாகத் தெரிவித்துள்ளனர். நாமும் மாகாணப் பாடசாலைகளில் இருந்து தற்காலிகமாகவேனும் ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் ஆர்ப்பாட்டகாரர்களிடம் தெரிவித்ததுடன்,எழுத்து மூலமும் உறுதி மொழி வழங்கியிருந்தார். எழுத்துமூல உறுதிமொழி வழங்கியதை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். ஆர்ப்பாட்டம் காரணமாக ஏ9 வீதியூடான போக்குவரத்து ஒருமணி நேரம் தடைப்பட்டிருந்து. (க-110,18)

# நவீல்ட் மாணவரின் மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 25

கைதடி நவீல்ட் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு வீதியோட்டப் போட்டி (மரதன் ஓட்டப்போட்டி) நேற்று நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடம் என். சுதாகரன், இரண்டாமிடம் எஸ்.பிந்துஜன், மூன்றாமிடம் எஸ்.ஜெபதீபன் ஆகியோரும் பெண்கள் பிரிவில் முதலாமிடம் கே.ஜனுஷாளினி, இரண்டாமிடம் வி.ஜோதிகா, மூன்றாமிடம் கே.கிஷாளினி ஆகியோரும் பெற்றனர்.

பாடசாலை ஆசிரியர்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. (த)



## செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம், ஜன.25

எருதிடல் அ.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

அதிபர் யே.தர்மதுரை தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி அ.மனோரஞ்சிதன், சிறப்பு விருந்தினர்களாக நவபுரம் சனசமூக நிலையத் தலைவர் மு.கயோதரன், நமக்காக நாம் நிறுவனத்தின் வடமாகாணத் தலைவர் எஸ்.ஏ.நிலான், கௌரவ விருந்தினர்களாக நோர்வே தாதிய பயிலுநர் ஞா.வினேஸ், அகில இலங்கை சமாதான நீதிவான் இ.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

# மனிதப் பிறப்பாக இருந்து மிருகமாக வாழ முடியாது

## மாணவி கொலைக் குற்றச்சாட்டு வழக்கில் சிப்பாய்க்கு யாழ்.நீதிவான் எச்சரித்து மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட சிங்கள மாணவி கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவருடைய கணவரை எதிர்வரும் 6ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் மன்று உத்தரவிட்டது.

"மனிதராகச் செயற்பட்டால்தான் வாழமுடியும். மனிதப் பிறப்பாக இருந்து கொண்டு மிருகமாக வாழ முடியாது" என்று கூறிய நீதிவான் ஏ.பீற்றர் போல், சந்தேகநபரை கண்டித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுலாக் கடற்கரையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி வருட மாணவி ஒருவர் கடந்த புதன்கிழமை பிற்பகல் கழுத்தறுக்கப்பட்டு கொல்லப்பட்டார். அவரது சடலம் கடலுக்குள் தள்ளிவீழ்த்தப்பட்டிருந்த நிலையில், பொலிஸார் மீட்டிருந்தனர்.

கொழும்பு பேருவளையைச் சேர்ந்த ரோசினி ஹன்சனா (வயது 29) என்பவரே கொல்லப்பட்டார்.

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் கூடியிருந்த உள்ளூர் இளைஞர்கள் கொலையாளியைப் பின் தொடர்ந்து சென்று பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். அவர் கிளிநொச்சி பரந்தன் இராணுவ முகாமில் பணியாற்றும் சிப்பாய். விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

கொல்லப்பட்ட மாணவியின் தாயாரும்சகோதரியும்மன்றில் இறப்புவிசாரணையில் சாட்சியமளித்தனர்.

"எதிரி மகளை 2017ஆம் ஆண்டு பதிவுத் திருமணம் செய்து அவருடன் வாழ்ந்து வந்தார். அண்மைக் காலமாக இருவருக்கும் முரண்பாடுகள் இருந்தன" என்று மாணவியின் தாயார் சாட்சியமளித்தார்.

"மனிதனாக இருந்தால் மட்டுமே வாழ முடியும். மனிதப் பிறப்பு எடுத்துவிட்டு மிருகமாக வாழ முடியாது" என்று நீதிவான், எதிரிக் கூண்டில் நின்ற எதிரியைப் பார்த்து எச்சரித்தார். அதன்பின்னர் விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார். (த-37)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

சாவகச்சேரி, ஜன. 25

வரணியில் உள்ள குளம் ஒன்றில் தாமரைக் கொடியில் சிக்கிச் சாவடைந்தவர் துன்னாலை மேற்கைச் சேர்ந்தவர் என்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.


வரணி சந்தைக்குப் பின்புறமாகவுள்ள குளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை குளிக்கச் சென்றிருந்தவேளை தாமரைக் கொடியில் சிக்கி அவர் சாவடைந்தார். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. அங்கு சென்றவர்கள் சடலம் துன்னாலை மேற்கைச் சேர்ந்த வேலன் இராசதுரை (வயது 64) என்று அடையாளம் காட்டினர்.

இவர் 31வருடங்களாக் குடும்பத்தினரைப் பிரிந்து கோவில் தொண்டுகளில் ஈடுபட்டுவந்தவர் என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு-9)

# கசிப்பு விற்பனைக்கும் பொலிஸுக்கும் தொடர்பா?

## பொறுப்பதிகாரியிடம் போட்டுக் கொடுத்த ஊர் மக்கள்





யாழ்ப்பாணம், ஜன. 25

**கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 43 கிராம அலுவலர் பிரிவுகளில் அதிக குற்றச் செயல்கள் இடம்பெறும் கிராமமாக சாந்தபுரம் கிராமமே உள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தநிலையில், பொலிஸார் மீதும் குற்றச்சாட்டுக்களை அந்தப் பகுதி மக்கள் அடுக்கினர்.**

**கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட பொறுப்பதிகாரி குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சாந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டபோது இந்தச் சர்ச்சைகுரிய கருத்தை மக்கள் முன்வைத்தனர்.**

"சாந்தபுரம் கிராமத்தில் அதிக கசிப்பு உற்பத்தி மற்றும் கசிப்பு பாவனை என்பன இடம்பெறுகின்றன. இதனால் இதன் அடுத்த கட்டமான சமூக விரோதச் செயல்களும் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. இவற்றைத் தடுக்க முயற்சிக்கின்றேன். அதற்கு இந்தப் பகுதி மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." என்று பொலிஸ் பொறுப்பதிகாரி கூறினார்.

"எமது கிராமத்தில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாகக் கூறுகின்றீர்கள். ஆனால் அவ்வாறு விற்பனை செய்யப்படும்கசிப்பை விற்பனையாளர்களுக்கு விநியோகிப்பது யார் என்று நீங்கள் கூறவில்லை. ஏனெனில் கசிப்பைக் கொண்டுவந்து விநியோகிப்பவர்கள் வேறுயாருமல்லர், பொலிஸார்தான்" என்று ஊரவர்கள் பதிலளித்துக் குற்றஞ் சாட்டினர்.

"கசிப்பு விற்பனை செய்தவரை பொலிஸார் கைது செய்தபோது அவரைக் கொண்டுசெல்ல விடாமல் தடுக்கின்றனர் என்று கூறப்படுகின்றதே?" என்று பொலிஸ் அதிகாரி வினவ, "ஆம் கொண்டுவந்து விநியோகிக்கும் பொலிஸாரைப் பிடியுங்கள். கசிப்பை யாரோ காய்ச்சுவதாகக் கூறி அங்கு பொலிஸார் வந்துபோயினர். பின்பு கசிப்புக் காய்ச்சியவரையே பொலிஸார் திருமணம் செய்துவிட்டனர். இதுதான் எமது நிலைமை" என்றும் ஊரவர்கள் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் இத்தகைய தவறுகளைச் சரிசெய்ய முயற்சிக்கின்றேன் என்று பொலிஸ் அதிகாரி அங்கு தெரிவித்தார். (கு-105)

## லண்டனில் இன்று 'கலைமாலை' நிகழ்வு

மன்னார், ஜன.25

லண்டனில் வசிக்கும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களும் வடக்கு கிழக்குதமிழ் இளைஞர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தமிழர் கலாசாரத்தைப் பறை சாற்றும் 'கலைமாலை' நிகழ்வு லண்டனில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்க வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் லண்டன் சென்றுள்ளார்.

"தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தமிழர் கலாசாரம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. வேற்று மொழியின் கலாசார ஆதிக்கங்கள் நிறைந்த வெளிநாடுகளில் வசிக்கும் நமது தமிழ் உறவுகள் தமிழ்க் கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காகப் பாதபாடுபடுகிறார்கள். அவர்களின் அழைப்பில் தமிழ் மாலை நிகழ்வில் பங்கு கொள்ள வந்திருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தி ஈழத்தமிழர்களின் நியாய பூர்வமான அரசியல் நிலைப்பாடுகள் பற்றிய கலந்துரையாடல்களை பல கட்டமாக லண்டன் வாழ் தமிழ் இளைஞர்களுடன் மேற்கொள்ளவுள்ளேன்." என்று சிவமோகன் தெரிவித்தார். (கு213)

## கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

அளவெட்டி.ஜன.25

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவி திருமதி.ச.பவானியின் "சிலகணங்கள்" எனும் கவிதைத் தொகுப்பு வெளியிடப்படவுள்ளது.

அளவெட்டி கலாசார மண்டபத்தில் இன்று சனிக்கிழமைபிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர்.நா.கேதீஸ்வரன்தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஞா.ந.ஆதவன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ63)



ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்கின் 150 ஆவது நிறைவையும், யூனியன் இன்சூரன்ஸின் 33 ஆவது நிறைவையும் முன்னிட்டு பொங்கல் விழாவும், புதிதாக வாடிக்கையாளர் இணைவும் சுன்னாகம் யூனியன் இன்சூரன்ஸ் கிளையில் நேற்று முன்தினம் நடைபெற்றன. சுன்னாக பிராந்திய முகாமையாளர் பா. குகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மூத்த யாழ்.பிராந்திய முகாமையாளர் த. குபேந்திரன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (க-20)

## முதியவரின் சடலம் மீட்பு

வவுனியா.ஜன.25

கற்பகபுரம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கற்பகபுரம் அ.த.க பாடசாலைக்கு அருகேயுள்ள வீதியில் அமைந்துள்ள வீட்டு வளாகத்தில் உள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

78 வயதுடைய இராமன் முருகையா என்பவரின் சடலத்தையே பொலிஸார் மீட்டுள்ளனர். (க18)



### யா/அல்லைப்பிட்டி றோ.க.த. வித்தி.

## சாதனை

அல்லைப்பிட்டி.ஜன.25

கண்டி நாவலப்பிட்டிய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற "செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வில் தேசிய மட்டத்தில் கலந்துகொண்ட யா/அல்லைப்பிட்டி றோ.க.த வித்தியாலயம் தங்கம்,வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

தரம் 4 அணி தங்கத்தையும்,தரம் 5 அணி வெள்ளியையும்,தரம் 3 அணி வெண்கலத்தையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளன. (ஐ)

# மொட்டுக்கு நிபந்தனையின்றி ஆதரவளிக்க 'கை' தீர்மானம்!

கொழும்பு, ஜன.25

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் நிபந்தனை எதுவும் இன்றி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தேர்தலின் போது அவர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதோடு மாத்திரமின்றி நாட்டுக்கு மிகப் பொருத்தமான தலைவராக அவர் இணங்காணப்பட்டுள்ளமையாலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும். நாம் எதிர்பார்த்ததை விடவும் ஜனாதிபதி கோத்தாபய நாட்டுக்குத் தேவையான பல்வேறு தீர்மானங்களை எடுத்து அவற்றைச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

உயர் அதிகாரங்கள் அவர் வசம் காணப்படுகின்றபோதும் தனக்கான வரப்பிரசாதங்களைக் குறைத்துக் கொண்டுள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக துரிதமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறார். அவரது நடவடிக்கைகளை முன்னுதாரணமாகக் கொண்டு இளைஞர்களும் ஆர்வத்துடன் செயற்படுகின்றனர்.

நாட்டின் முன்னேற்றத்தில் தமது பங்கும் காணப்பட வேண்டும் என்று தற்போதைய இளைஞர்கள் விரும்புகின்றனர். கடந்த அரசின் ஆட்சியில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர். ஒரு சில அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் மக்கள் நம்பிக்கையை இழந்திருந்தனர். அந்த நிலைமை தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்று நம்புகின்றோம் - என்றார். (எ)

## நெல்லண்டை பத்திரகாளி அம்மன் மகோற்சவம்

வடமராட்சி, ஜன. 25

அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 10 நாள்கள் நடைபெறவுள்ளது. பத்தாம் நாளன்று இரவு மணவாளக்கோல திருவிழாவை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை தரும பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர். திருவிழா நாள்களில் தினமும் அபிஷேகம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று தொடர்ந்து விசேட பூசையின் பின் அம்பாள் உள்வீதி வலம் வந்து அருள்பாலிப்பார். எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை வைரவ சாந்தியுடன் திருவிழா நிறைவுபெறும். (ம)




## பல முறைப்பாடுகளால் அம்மாச்சிக்குப் பூட்டு

*மருத்துவமனைப் பணிப்பாளர் தகவல்*

வவுனியா.ஜன.25


வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட அம்மாச்சி உணவகம் இந்த மாத ஆரம்பத்தில் மூடப்பட்டது. இதுதொடர்பிலான உண்மையை வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் கே.நந்தகுமார் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாவது:
விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் உணவகம் அமைக்கப்பட்டது. உணவகம் தொடர்பில் பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றன. உணவு சரியில்லை, நேர முகாமைத்துவமின்மை, முன்னறிவித்தலின்றி மூடுவது இது போன்ற பல முறைப்பாடுகள் நோயாளிகள் மற்றும் ஊழியர்களால் எமக்குக் கிடைக்கப்பெற்றன.

மாதாந்தம் வாடகையைக் கூட சீராகச் செலுத்தவில்லை. நிலுவைப் பணம் செலுத்த வேண்டியுள்ளது. அதனால் சிற்றுண்டிசாலையின் வாடகைப்பணத்தை அரசுக்கு அனுப்புவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அம்மாச்சி உணவகத்தின் செயற்பாடுகள் காரணமாக ஒப்பந்தத்தை நீக்கி தற்போது தனிநபர் ஒருவருக்கு வழங்கியுள்ளோம்.

மாத வாடகையாக 90ஆயிரம் ரூபா வழங்க வேண்டியிருந்தது. இவற்றைஈடுசெய்ய முடியாமையினாலேயே உணவகத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது என்று விவசாயப் பணிப்பாளர் தெரிவித்த கருத்து முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது - என்றார்.

தினசரி ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு வருகை தருகின்ற நிலையிலும், அம்மாச்சி உணவகத்துக்கு வருமானம் குறைவு எனத் தெரிவித்து மூடியுள்ளதாக வவுனியா விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



## நெல்லுக்கு விலை நிர்ணயம்!

யாழ்ப்பாணம், ஜன. 25

நெல்லுக்கான நிர்ணய விலையை அரசு தீர்மானித்துள் ளது. இதன்படி காய்ந்த நெல்லுக்கான நிர்ணய விலை கிலோ ஒன்றுக்கு 50 ரூபாவாகவும், ஈர நெல்லுக்கான நிர்யண விலை 44 ரூபாவாகவும் தீர்மானிக்கப்பட் டுள்ளது. தற்போது நாடு முழுவதும் அறுவடை இடம்பெறும் நிலையில் நெல் கொள்வனவுக்கான நிர்ணய விலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.ஜெயசுந்தர தலைமையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. இதன் போதே மேற்படி விலைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

1 தொடக்கம் 3 ஏக்கர் வரையான நிலத்தில் விதைத்த விவசாயிகளிடம் 3 ஆயிரம் கிலோவும் 4 தொடக்கம் 5 ஏக்கர் வரை விதைப்பினை மேற் கொண்ட விவசாயிகளிடம் 5 ஆயிரம் கிலோ வும் கொள்வனவு செய்வதற்கும் தீர்மா னிக்கப்பட்டுள்ளது. (ம-105)

## ஆளுநர் – தூதுவர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25



வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸூக்கும், இலங்கைக்கான நோர்வேத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மின்சாரக் கட்டணங்கள் காரணமாக பல உள்ளூர் உற்பத்தி முயற்சிகள் பின்னடைவைக் கண்டு வருகின்றன. இந்தக் கால கட்டத்தில் நோர்வே அரசால் அறிமுகப்படுத்தப்பட இருக்கும் சூரிய சக்தியைக் கொண்டதான மின் உற்பத்திச் செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து மக்களுக்குப் பரிந்துரைக்கக் கூடியதாக இருக்கும் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

வடக்கின் சிறப்பான பாரம்பரிய உற்பத்திப் பொருள்களுக்கான சிறந்த சந்தை வாய்ப்பை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெற்றுக் கொள்வதற்கான தொழிநுட்ப அறிவை மேம்படுத்துவதற்கும் சர்வதேச சந்தைப்படுத்தலுக்கான தொடர்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைப்புகளுக்கும் நோர்வே அரசு உதவ வேண்டும் எனவும் ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

மீன்பிடித்துறை மற்றும் சுற்றுலாத்துறையில் வடக்கு மாகாணத்தில் பல அபிவிருத்திகளை மேம்படுத்தக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் அதற்கான ஒத்துழைப்புக்களை பெறும் வழிவகைகள் தொடர்பிலும் நோர்வே தூதுவரிடம் ஆளுநர் கலந்தாலோசித்தார்.

பெண்களின் மேம்பாட்டுக்காக தான் அறிமுகப்படுத்திய திட்டங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்ட போது அதனைப் பாராட்டிய தூதுவர் மேலும் பல திட்டங்கள் தொடர்பிலான திட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் வேறு பல சர்வதேச அமைப்புக்களுக்கும் அவற்றைப் பரிந்துரைத்து ஆளுநரின் பணிகளுக்கு உதவக்கூடியதாக இருக்கும் என்றும் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பின் போது நோர்வேத் தூதுக் குழுவினருடன் ஆளுநரின் செயலர், இணைப்புச் செயலர் மற்றும் ஊடகச் செயலரும் பங்கேற்றிருந்தனர். (ஒ.5)

## குளவி கொட்டியதில் ஒருவர் சாவு: 40 பேர் காயம்

கண்டி, ஜன. 25

மலையகத்தில் நேற்றுமுன் தினம் மாத்திரம் மூன்று தோட்டங்களில் குளவிக்கொட்டு இடம் பெற்றுள்ளது. இதில் சிக்குண்டு தோட்டத் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். அத்துடன், 40க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

ஹட்டன், திம்புள்ள தோட்டத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். பத்தனை - கெலிவத்தை தோட்டத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான எம். ஈஸ்வரன் (வயது - 56) என்பவரே உயிரிழந்துள்ளார். அத்துடன், குளவிக்கொட்டுக்கு இலக்கான மேலும் 4 பேர் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### வட்டகொடை

வட்டகொடை மேற்பிரிவு தோட்டப்பகுதியில், தேயிலைத்தளிர்கள் கொய்துகொண்டிருந்த தொழிலாளர்களை நேற்றுமுன்தினம் முற்பகல் குளவிகள் கொட்டியதால் 30 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 13 பேர் வைத்தியசாலையில் தொடர்ந்து தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### புஸல்லாவ

அத்துடன், புஸல்லாவையிலும் ஒரு தோட்டத்தில் குளவி கொட்டியுள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 6 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத்தெரியவந்தது. (ம-22)

सत्यमेव जयते

## இந்தியத் துணைத் தூதரகம்

யாழ்ப்பாணம்

### அழைப்பிதழ்

### குடியரசு நாள் கொடியேற்றல் நிகழ்வு – 2020

இந்தியக் குடியரசு நாளின் 70வது ஆண்டுவிழா நிகழ்வை முன்னிட்டு காலை தேசியக் கொடியேற்றல் நிகழ்வு 26 ஜனவரி 2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு இல 14 மருதடி வீதியில் அமைந்துள்ள யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெறும்.

அனைத்து இந்திய குடிமக்களையும், இந்திய வம்சாவளியினரையும், இந்திய நலன்விரும்பிகளையும் நிகழ்வில் பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு**

1. அனைவரையும் காலை 8.30 மணிக்கே வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்
2. வருகைதரவுள்ள அனைவரும் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சான்றுடன் வருகை தரவும்

## தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து) கொடிகாமம்

## பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 04 பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. **பதவி :- விற்பனை உதவியாளர் 308/ 15 வெற்றிடம் - 01**
   **சம்பள அளவுத்திட்டம் - 15545 – 130 X 10 – 140 X 10 – 18245 (4/2018 இன் படி)**
   **அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**
   அ. கூட்டுறவுப்பணியாளரின் 17ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளார் பதவியில் 05 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
   **அல்லது**
   ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சையில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது தூயகணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி என்பவற்றினை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி.
2. **பதவி :- விற்பனை உதவியாளர் 308/ 17 வெற்றிடம் - 01**
   **சம்பள அளவுத்திட்டம் :- 14725 – 115 X 10 – 130 X 10 – 17175 (4/2018 இன்படி)**
   **அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**
   அ. கூட்டுறவுப் பணியாளர் (கனிஸ்ட) தராதரம்
   **அல்லது**
   ஆ. 8ஆம் வகுப்பிலான சித்தியும் விற்பனைத் தொழிலில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம்
3. **பதவி :- சாரதி 312/ 14 வெற்றிடம் - 01**
   **சம்பள அளவுத்திட்டம் :- 15960 – 135 X 10 – 145 X 10 – 18760 (04/2018 இன் படி)**
   **தகைமைகள் :-**
   5ஆம் வகுப்பு சித்தியுடன் பஸ் அல்லது லொறி அல்லது டிரக்டர் பெட்டியுடன் செலுத்தும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். குறைந்தது இரண்டு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
4. **பதவி :- எழுதுநர் 302/15 வெற்றிடம் - 03**
   **சம்பள அளவுத்திட்டம் :- 15545 – 130 X 10 – 140 X 10 – 18245 (04/2018 இன்படி)**
   **தகைமைகள் :-**
   அ., கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்.
   **அல்லது**
   ஆ. க.பொ.த (சாதாரண தரத்தில்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம். சிங்களம் அல்லது தமிழ்ப்பாஷை உட்பட 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியும். கூட்டுறவு சங்க எழுதுநர் பதவியொன்றில் ஒருவருடத்திற்கு குறையாத அனுபவம்.

* கணினி அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**நிபந்தனைகள்**

வயதெல்லை 18 – 45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழின் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும். சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை** :- மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத்தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்கான விண்ணப்பப் பெயரினைக் குறிப்பிட்டு பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். எனும் முகவரிக்கு 10.02.2020 திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


பொது முகாமையாளர்
25.01.2020

இன்று இரண்டாம் நாள்
வாருங்கள்!
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2020
24th 25th 26th
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)
www.jitf.lk
jitf.lk



PLATINUM SPONSOR
INSEE CEMENT
ORGANIZED BY
LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH
CCIY
UNITY IS STRENGTH
OFFICIAL PARTNERS
TELECOMMUNICATION
FOOT WEAR
DSI
FOOD
COSMETICS
British Cosmetics
POWER TOOLS
DIMO
PRINT MEDIA
ENDORSED & SUPPORTED BY
PARTNER COUNTRY
India
More information: Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com

TEXSTRETCH
Becoming You...
www.texstretch-sports.com
SHOP ONLINE




SHOWROOM
No.122, YMBA Building,
Sir Baron Jayathilake Mawatha, Colombo 01.
Tel : +94 (0)11 242 2580
Fax : +94 (0)11 244 5231

CNCI Achiever Industrial Excellence 2019 - National Bronze
CNCI Achiever Industrial Excellence 2019 - Provincial Silver
SILK Awards - Outstanding SL Brand to International Sport Industry - 2018
NPS Productivity Awards Special Commendation - 2015 & 2018
NCE Export Awards (Silver) - 2018 & 2019

MANUFACTURED & MARKETED BY
Textrip (Pvt) Ltd.,
Elpitiya Road, Bentota, Sri Lanka.
Hotline : +94 (0)34 344 5454 | Hunting : +94 (0)34 227 0007
Fax : +94 (0)34 227 0008 | E-mail : sales@elasto.lk
TEXTRIP (PVT) LTD.
ELASTO GROUP
ISO 9001:2015
ISO 14001:2015
CERTIFIED

## மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 05 . 1926



இறப்பு
23 . 01 . 2020

### திருமதி பரமேஸ்வரி சண்முகம்

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல. 42. 32 ஆம் ஒழுங்கை . வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சண்முகம் 23.01.2020 வியாழக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மனோன் மணி தம்பதிகளின் அன்பு மகளும், சண்முகத்தின் அன்பு மனைவியும் சின்னத்தம்பி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி விசாலாட்சி, குலசிங்கம், புவனேஸ்வரி (கண்டி) ஆகியோரின் சகோதரியும் உமாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற பரமேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), பத்மினிதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்பு தாயாரும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், குணபூரணம், சரஸ்வதி, மகேஸ்வரி, கண்மணி, சிவப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனியும், தன்மாவரதர், ஜெயராணி, வசந்தசரோஜினி, சிவஹரன் ஆகியோரின் மாமியாரும் தர்மா, தனஸ்ரீ, தம்பியையா, மனுவெலா, தொபியாஸ், மானுவெல், சாங்கீதா, சுஜீத்தா, கன்னிகா, பவனந், கஜனந் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் விதுஷன், ஹரிணி, ரதுஷா, ஜெனிஷா, தமீரா, இனியா, ஜோஷியா, ஜெரினி, ராகேல் ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 26.01.2020 இல. 42. 32ஆம் ஒழுங்கை , வெள்ளவத்தையில் இருந்து பிற்பகல் 3.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 325 1572
தகவல்:
சிவஹரன் (மருமகன்)

## கார் விற்பனைக்கு

Suzuki Astar நல்ல நிலையில் உள்ள Center Lock Car விற்பனைக்கு உண்டு. (2011ம் ஆண்டு Model)

விலை - 2025000
தொடர்புகளுக்கு - சுண்டுக்குளி
077 727 1645

## வேலையாள் தேவை

அச்சுவேலி தோப்பு கிறிஸ்தவ மிஷனரி சபைக்கு தங்கி நின்று தோட்ட வேலை செய்யக்கூடிய வேலையாள் தேவை.

077 695 6728

(cs.307527)(13.17)

## புதிய கட்டடம் வாடகைக்கு

வட்டுக்கோட்டை, மாவடிச் சந்தியிலிருந்து சித்தன்கேணி பாதையில் 200m தூரத்தில் அமைந்துள்ள கட்டடமொன்று வாடகைக்கு கொடுக்கப்படும். வங்கி, தனியார் நிறுவனம், வியாபார நிலையங்களுக்கு தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.

077 711 0891

(J 48)(14.17)

## தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு
**பராமரிப்பாளர்**
ஆண் (30 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
உடன் தொடர்பு கொள்ளவும்
**தொலைபேசி இலக்கம்**
071 535 4500
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
(நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)

இல 55, 154ஆம் கட்டை,
இந்துபுரம், திருமுறுகண்டி, முல்லைத்தீவு

## இலவச பாடநெறி

- முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி
- உளவியலும் உளவளதுணையும்
- ஆசிரியர் பயிற்சி நெறி
- ஆங்கிலம்
- திறன் அபிவிருத்தி பயிற்சி

மேலதிக விவரங்களுக்கு:-

**AMAZON COLLEGE**
87, Kandy Road, Jaffna.
(Opposite of Old Park)
Tel: 077 270 3494, 077 270 3758

## கார் விற்பனைக்கு

**TATA Indigo ecs, 2015, Silver First Owner, 4300 km, Full Option.**

077 424 2327

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் முருகேசு சங்கரப்பிள்ளை

திதி : பிரதமை
25.01.2020 (சனிக்கிழமை)



உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே !
பதினொரு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

"மலரகம்"
கொட்டக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தோற்றம்
16.07.1931

மறைவு
26.01.2009

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி பவானியம்மா குழந்தைவேலு

தோற்றம்
22.05.1932

மறைவு
25.01.2018



எம் குடும்ப விளக்காய் ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து எங்களை வளர்த்துவிட்டு
எம் எல்லோரையும் தவிக்கவிட்டு விண்ணுலகு புகுந்த நீங்கள்
எப்போது மீண்டும் வருவீர்கள் என்று நாம் எண்ணாத நாளில்லை

இல.11, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் ஜெகதீஸ்வரி காசிநாதன்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)



பொன்னுத்துரை சிவபாக்கியத்தின் பொக்கிசமே
ஜெகமாள வந்த எங்கள் ஜெகதீஸ்வரியம்மா
மிக்கமகிழ்வாக மிகிந்தலை மண்ணீன்ற கண்மணியே
கரையிலா கல்விஞானம் மும்மொழியிலும் தேர்ந்தவளே

தாய் நாட்டின் நலனுக்காய் தக்கதோர் சேவையாற்றி
நீ நடந்த பாதைகளை நீட்சியுடன் அமைத்தவளே
நானிலமும் போற்றும் நயினையூர் காசிநாதன் தனை
கனிவுடனே கரம்கொண்டு அன்பான மழலை அகிலாவிற்கு அம்மாவே

கற்ற கல்வி வீண்போகா வண்ணம் பிறந்த நாட்டின்
நலனுக்காய் நயப்புடன் சேவையாற்றி
வேலணை, ஊர்காவற்றுறை, நாவலப்பிட்டிய பிரதேசங்களில்
தட்டெழுத்தாளராகவும், எழுதுவினைஞராகவும் உயர்ந்தவளே

ஓய்வு காலத்தில் ஓய்வாக நீயிருக்கவில்லையம்மா
ஊர் மக்கள் உத்தமராய் இருக்க வெண்ணி - நீ

வாழ்ந்த பூமி நயினை யூரின் மூன்று பாடசாலைகளிலும்
மும்மொழியும் கற்பித்து நூலகராய்க் கடமை செய்தவளே

கலங்குகின்றோம் உன்பிரிவைத் தாங்கமுடியாமல்
கண்ணீர் வடிக்கின்றாள் எம்முடனே நயினைத்தாயும்.



அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை நயினாதீவு கங்காதரணி தீர்த்தக்கரையிலும் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளமையால் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மு.காசிநாதன் (கணவர்)
திருமதி ஜெகதீஸ் - அகிலா (மகள் -நோர்வே)

3 ஆம் வட்டாரம், நயினாதீவு.

(cs:307740 (13.17)

# வாக்கு வறுமையை போக்கவே போராட்டம்

## கரைச்சி தவிசாளர் தெரிவிக்கிறார்

கிளிநொச்சி, ஜன. 25

தேர்தலுக்கான வாக்கு வறுமையை போக்குவதற்கான ஏற்பாடுதான் இன்றைய (நேற்றைய) உண்ணாவிரத போராட்டம் என்று கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ. வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கரைச்சிப் பிரதேச சபை ஆதன வரியை அதிகரித்து அறவிடுவதைக் கண்டித்து நேற்றுமுன்தினம் தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் வர்த்தகர் ஈடுபட்டுள்ளார். அவருக்கு ஆதரவாக வர்த்தகர்களும் அதில் பங்கேற்றுள்ளனர். இந்த நிலையில், கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் தனது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு தரப்பினரின் தேர்தல் வாக்கு வறுமையைப் போக்கும் நோக்கில்தான் ஒரு தரப்பினரின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது.

அந்த வர்த்தகரின் சொத்து மதிப்பிலிருந்து அரச சட்டங்களுக்கமைவாகவே ஆதன வரி அறவீடு செய்யப்பட்டுள்ளது. ஆதன வரி நடைமுறை தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபையில் 2018ஆம் ஆண்டு ஏகமனதாக அனைத்து தரப்பினராலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டே அது வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது.

வெறுமனே வரி குறைப்பது தொடர்பில் தீர்மானிப்பது தவிசாளரோ சபையோ அல்ல. விலை மதிப்பு திணைக்களத்தால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு அதற்கு சட்ட ரீதியில் வரி அறவீடு செய்யப்படுகின்றது. குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நபருக்கு பல பகுதிகளிலும் சொத்துக்கள் காணப்படுகின்றன. அவருடைய சொத்து மதிப்பின் அடிப்படையில் வரி அறவீடு இடம்பெறுகின்றது. ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் அதிகரித்தது போன்றதான தோற்றப்பாடு காணப்படுகின்றது. ஆனால், உண்மையில் சில பிரதேசங்களில் இந்தப் பிர தேசத்தை விட அதிகளவில் வரி அறவீடு காணப்படுகின்றது. நாம் மிக குறைந்த அளவிலான அறவீடுகளையே மேற்கொள்கின்றோம் - என்றார்.

(த - 35)

# இலங்கையின் சுதந்திர நாள் ஏற்பாடு நிறைவு

யாழ்ப்பாணம், ஜன. 25

இலங்கையின் 72ஆவது சுதந்திர நாள் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலை யில் அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவலகள் அமைச்சு அறிவித்துள்ளது.

சுதந்திர நாளை முன்னிட்டு பல்வேறு சமய வழிபாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி பிரித் பாராயண நிகழ்வு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது. தேசிய தினத்துக்கான பௌத்த சமய வழிபாட்டு நிகழ்ச்சிகள் கொள்ளுபிட்டி பொல்வத்த தர்மகீத்தயராம விகாரையில் இடம்பெறவுள்ளது. இந்து சமய வழிபாட்டு நிகழ்ச்சிகள் சுதந்திர தினத்தன்று கொழும்பு மயூராபதி சிறி பத்ரகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. இஸ்லாமிய சமய வழிபாடுகள் கொள்ளுபிட்டி ஜும்ஆ பள்ளிவாசலிலும், கிறிஸ்தவ மத வழிபாடுகள் பம்பலபிட்டி புனித மரியாள் தேவாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகள் காலி முகத்திடலில் இடம்பெறாது. மாறாக கொழும்பு 7இல் அமைந்துள்ள சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள முன்னோட்ட நிகழ்ச்சிகள் நாளையும், 31ஆம் திகதியும், பெப்ரவரி மாதம் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளன.

(ஒ,5,24)

### மிதக்கும்...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தில் பொறியியல் பீடத்திலேயே 42 கிலோ வோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தியால் இயங்கும் மின் பிறப்பாக்கி உபகரணத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்திலுள்ள பொறியியல் பீடத்தாலும் மேற்கு நோர்வேயிலுள்ள பிரயோக விஞ்ஞான பல்கலை கழகத்தாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நோர்வேத் தூதுவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மற்றும் மேற்கு நோர்வே பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கிடையிலான கைகோர்ப்பாக இந்தத் திட்டம் நிறுவப்பட்டுள்ளது. நோர்வேத் தூதரகம் உதவிகளை வழங்குகின்றது. புதிய மிதக்கும் சூரிய மின் ஆலை, நோர்வே கொண்டுள்ள வெளிக்கள மற்றும் கடல்சார் தொழிற்றுறைகளின் அனுபவங்களின் பிரகாரம் அமைந்துள்ளது என்று நான் கருதுகின்றேன். இலங்கையில் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள முதலாவது புதுப்பிக்கத்தக்க வலுப்பிறப்பாக்கல் பங்காக அமைந்துள்ளதுடன் இதனூடாக 42 கிலோ வாற்று மின்சாரத்தை பிறப்பிக்கக்கூடியதாக இருக்கும். மிதக்கும் மின் ஆலை போன்ற தூய வலு மூலங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் மின்சாரத்தை பெற்றுக் கொள்வது மக்களின் வாழ்க்கையில் பெருமளவுத் தாக்கத்தை ஏற்படுத்தும். நிலக்கரியில் இயங்கும் மின் பிறப்பாக்கல் ஆலைகள் உள்நாட்டு வளியின் தரத்தில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அவற்றின் காபன் வெளியீடும் காலநிலை மாற்றத்தில் தாக்கம் செலுத்துகின்றன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இளவயது உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் காரணிகளில் வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புகளிலிருந்து வெளிவரும் மாசுகளும் பங்களிப்பு செலுத்துகின்றன. படிம எரிபொருளிலிருந்து புதுப்பிக்கத்தக்க வலுவுக்கு மாறுவதற்கு சூரிய சக்தி முக்கிய பங்களிப்பை வழங்கும். இலங்கை மற்றும் நோர்வே மக்களைப் போன்றே உலகின் அரைப் பங்கு சனத்தொகையினர் கரையோர பகுதிகளில் வசிக்கின்றனர்.

மிதக்கும் சூரிய மின் ஆலைகளால் தூய வலுவை பிறப்பித்து நுகரக் கூடியதாக இருக்கும். வலுபிறப்பாக்கலுக்கு புதிய வாய்ப்புகள் பலதை உருவாக்கக்கூடிய வாய்ப்பையும் கொண்டுள்ளன. நீண்ட கால அடிப்படையில், குளங்கள் மற்றும் திறந்த சமுத்திரங்களில் மிதக்கும் சூரிய வலுப் பண்ணைகளை நிறுவக் கூடிய சாத்தியம் ஏற்படும்.

நாம் ஒன்றிணைந்து செயலாற்றினால், காலநிலை மாற்றத்தையும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். இலங்கையை பொறுத்த மட்டில் நீண்ட கால வரட்சி அல்லது தொடர் மழைவீழ்ச்சியை அனுபவிக்க வேண்டியிருக்காது. இந்த மிதக்கும் சூரிய மின் ஆலை இலங்கையில் நிறுவப்படவுள்ள பல நிலைபேறான மின் ஆலைகளில் முதலாவதாக அமைந்துள்ளது என கருதுகின்றேன்.

இறுதியாக நோர்வே மற்றும் இலங்கை தரப்பிலிருந்து இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறுவுவதற்கு பங்களிப்பு வழங்கியிருந்த அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன். இந்த ஒன்றிணைவினூடாக நீண்ட காலமாக பேணப்படும் இலங்கை மற்றும் நோர்வே இடையிலான உறவுக்கு மேலும் பிரகாசத்தை ஊட்டுவதாக அமைந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன் -என்றார்.

(ஒ.5.35)

### வர்த்தகக்...

ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நடைபெற்றது. தொடர்ந்து கண்காட்சியை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். யாழ். மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ். வர்த்தகக் கைத்தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் கண்காட்சி இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது. (ஒ,5,20)

### ஆளுநருடன்...

மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மதியம் ஆளுநர் இல்லத்தில் இடம்பெற்றது.

'நாட்டில் ஏற்பட்டு வரும் நோய்த் தாக்கங்கள் பற்றி நீங்கள் அறிவீர்கள். இவ்வாறான நிலையில் சுகாதார சேவையில் ஈடுபடும் நீங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவது தவறு. அரச ஊழியர்கள் மக்கள் வரிப் பணத்தில் சம்பளம் பெறுபவர்கள். அவர்கள் மக்களுக்கு அசௌகரியங்களைக் கொடுக்கும் வகையில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவது நல்லதல்ல. நான் புதிதாகப் பொறுப்பேற்றுள்ளேன். உங்கள் கோரிக்கைகள் நியாயமானவையாக இருந்தால் நிச்சயமாக, மேயருடனும் ஆணையாளருடன் பேச்சு நடத்தி நிறைவேற்றித் தருவேன். நியாயமற்றவையாக இருந்தால், மாநகர சபை எடுக்கும் நடவடிக்கையில் தலையிட மாட்டேன்' என்று வடக்கு மாகாண ஆளுநர், தன்னைச் சந்தித்த போராட்டக்காரர்களிடம் கூறியதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனடிப்படையில் இன்றைய தினமே அனைத்துப் பணியாளர்களும் கடமைக்குத் திரும்புவார்கள் என்று வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

(ஒ,5)



# ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பணிப்பாளர் நாயகமாக நியமனம்


கொழும்பு, ஜன. 25

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நந்த மல்வஆரச்சி பல்நோக்கு அபிவிருத்திச் செயலணி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக வறுமையற்ற இலங்கையைக் கட்டியெழுப்பும் எண்ணக்கருவின் கீழ் பல்நோக்கு அபிவிருத்திச் செயலணி நிறுவப்பட்டுள்ளது.

பேண்தகு முதன்மை உபாய மார்க்கமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த குறைந்த கல்வித் தகைமை உடையவர்களுக்கு முறையான தொழிற் பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தன் பின்னர் அவர்களுக்கு அரச துறையில் நிரந்தர வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுப்பது இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நந்த மல்வ ஆரச்சி பதில்கடமை இராணுவத் தளபதியாக 2007ஆம் ஆண்டில் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் இந்தோனேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக 6 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். சட்டமும் ஒழுங்கும் அமைச்சின் ஆரம்பகால செயலராகவும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலராகவும் மல்வஆரச்சி பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



## உண்டியல் உடைத்து பணம் திருட்டு

மன்னார், ஜன. 25

மன்னார் தோட்ட வெளி கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த, தூய அந்திரேயா அப்போஸ்தலர் ஆலயத்தின் உண்டியல் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

ஆலயத்தின் ஜன்னல் ஊடாக உள்ளே சென்ற திருடர்கள் உண்டியலின் பூட்டை உடைத்து பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை ஆலயத்தினுள் சென்றவர்கள் உண்டியல் உடைக்கப்பட்டதை அவதானித்து ஆலய நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தினர். ஆலய நிர்வாகத்தால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சுமார் 18 மாதங்களுக்கு மேலக ஆலய நிர்வாகத்தால் உண்டியல் பணம் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ஒ.5,56)

## நடுவழியில் பயணிகள் அவதி

வவுனியா, ஜன. 25

வவுனியாவிலிருந்து நேற்றுக் காலை மன்னார்நோக்கி பயணிகளுடன் சென்ற தனியார் பேருந்தை வழிமறித்த லீசிங் நிறுவனத்தின் கையகப்படுத்தல் பிரிவினர் பயணிகளை இறக்கிவிட்டு பேருந்தை எடுத்துச் சென்றுள்ளனர். பேருந்தில் பயணித்த கற்பிணிப்பெண் உள்பட 78 பயணிகள் நடு வழியில் அந்தரப்பட்டனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை மேற்கொண்ட லீசிங் நிறுவனப் பணியாளர்கள் வவுனியாவிலிருந்து 28 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பறயனாளங்குளத்தில் பேருந்தை வழிமறித்து கையகப்படுத்திச் சென்றனர். பயணிகள் லீசிங் நிறுவனப் பணியாளர்களின் செயற்பாட்டையும் கண்டித்துள்ளனர். (ஒ.5)

## மெய்வன்மை போட்டியும் அரங்க திறப்பும்

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும், க.செ.நடராசா கலை அரங்கத் திறப்பு விழாவும் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக பிரபல தொழிலதிபர் ம.நடராசா, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஜன.25

மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் தலைமையில் கூட்டம் நடைபெறும் என்று பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (க)

## பொலிஸுக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஜன. 25

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொன்ஸ்டபிள் பதவிக்கு ஆண், பெண் இருபாலரிடமும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தாய்மொழி உள்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்த பட்சம் 6 பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரர்கள் ஒரே அமர்வில் 5 பாடங்களில் கணிதம், தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி அன்று 18 தொடக்கம் 28 வயதுக்கு உள்பட்டவராக இருக்க வேண்டும். இது தொடர்பான அறிவிப்பு நேற்று வெளியான வர்த்தமானியில் இடம்பெற்றுள்ளது. (ஒ.5)

## கூட்டம்

கொழும்புத்துறை, ஜன25

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதியின் மூலக்கிளைகளின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மாட்டீன் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

அனைத்து வட்டார ரீதியான மூலக்கிளை உறுப்பினர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடி தொழில் பூங்கா வளாக விடுதி அங்குரார்ப்பண தகர விழாவும், ஆண்கள் விடுதித் திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தொழில் பூங்கா வளாகத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் எ.எஸ். அற்புதராஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சமூகசேவைகள்திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் கலந்து கொள்வார். (க)

## அரச அதிகாரிகளுடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

உள்ளூராட்சி அமைச்சும், அதன் கீழான திணைக்களங்களுக்குமான துறைசார் கூட்டம், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில், ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் வீதிகள் புனரமைப்புத் தொடர்பில் விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான, திட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்து, புனரமைப்புப் பணிகளை விரைவாக்குமாறு அதிகாரிகளுக்கு வடக்குமாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்தார். வடக்கு மாகாணத்தில் பொருத்தமான இடங்களில் ஓய்வெடுக்கக்கூடிய அல்லது தரித்து நின்று இளைப்பாற, மலசலகூட வசதிகளுடனும், குடிநீர் வசதிகளுடனும், வாகன தரிப்பிடங்களை அமைக்குமாறும் ஆளுநர் இதன்போது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். வடக்கு மாகாண சபையின் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சகப் பணிப்பாளர்கள், செயலர்கள், துணைத் தலைவர்கள், உயரதிகாரிகள், துறை சார்ந்த அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (க)

## ரிசாட்டுக்கு எதிராக நேற்றுப் போராட்டம்

வவுனியா, ஜன. 25

முன்னாள் அமைச்சர் ரிசாட்பதியூதீனுக்கு எதிராக வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

சாளம்பைக் குளத்திலுள்ள குப்பை மேட்டு விவகாரத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவரது கருத்து மடத்தனமாக இருப்பதாக முன்னாள் அமைச்சர் ரிசாட், நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துக்கு கண்டனம் தெரிவித்தே கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

பிரதேச சபைக்கு முன்பாக இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தெரிவித்ததாவது:

குப்பை மேடு இருப்பது தெரிந்தும் அதற்கு அருகே காணிகளை வழங்கி மக்களை இக்கட்டான நிலைக்கு தள்ளியவர் ரிசாட்தான். குப்பை மேடு வந்த பின்னர் தான் குடியேற்றங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். குப்பை மேட்டுக்கு அருகில் குடியேற்றத்தை மேற்கொண்ட மடத்தனமான வார்த்தை அவருக்கேதான் பொருந்தும். அவரது கருத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

'முதல் வந்தது குப்பை மேடா? குடியேற்றமா?', 'குப்பைகளை எங்கே போடுவது?', 'குப்பைமேட்டுக்கு அருகில் குடியேற்றம் செய்தது யார்?' போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை உறுப்பினர்கள் ஏந்தியிருந்தனர். (ஒ.5,18,110)

## தமிழ்...

நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மீண்டும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. அவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மீண்டும் கட்டளை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

எனினும், முன்னாள் கடற்படை பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி. தாஸநாயக்க உள்ளிட்ட 13 பேர் நீதிமன்றில் முன்னிலையான நிலையில், பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். தலா 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டதுடன், சந்தேக நபர்களின் மனைவிகளை பிணையாளர்களாக வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வழக்கு அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

## தீர்வினை...

எமக்கென்று சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. எமக்கென்று கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் இருக்கின்றன. இந்தப் புதிய அரசு எம்மை அடிபணியவைத்து எதனையும் சாதிக்க முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

'தமிழ் மக்களுக்கானத் தீர்வுப் பொதியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தட்டில் வைத்துத் தரும் என்று சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கனவு காண்பதில் எந்தவிதப் பயனும் இல்லை. முதலில் அவர்கள் எம்முடன் நேரில் வந்து பேச வேண்டும். அதைவிடுத்து இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளைக் கூட்டமைப்பினர் நாடுவதால் தீர்வு கிடைக்கப்போவதில்லை. ஒற்றையாட்சியைப் பாதுகாக்கும் வகையிலும் பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கும் முகமாகவும் சிங்கள மக்கள் ஏற்கும் விதத்திலுமான அரசியல் தீர்வைத்தான் எம்மால் காண முடியும்' என்று சபை முதல்வரும் வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பதிலளிக்கும்போதே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான புதிய அரசு நாட்டின் நலன் கருதியும் மக்களின் நன்மை கருதியும் ஜனநாயக வழியில் செயற்படும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம். தீர்வு விடயம் தொடர்பில் இந்த அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால், எமது எதிர்பார்ப்பை வீணடிக்கும் வகையில் இந்த அரசு தினந்தோறும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வே எமது கொள்கையாகும். துரதிஷ்டவசமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. நாம் ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்த போதிலும் பேச்சு மேசைக்கு எம்மை அழைத்து காலத்தை வீணடித்து இறுதியில் ஏமாற்றியது மஹிந்த அரசு. தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கக்கூடாது என்பதில் மிகவும் விடாப்பிடியாக இருந்தது மஹிந்த அரசு. இந்தத் தவறை கோத்தாபய அரசும் செய்யக்கூடாது என்றே வலியுறுத்துகின்றோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியே தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனவும் சர்வதேசம் வலியுறுத்துகின்றது. இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான், நோர்வே, சுவிஸ் உள்ளிட்ட அனைத்து நாடுகளின் ஒருமித்த வலியுறுத்தல் இதுவே. அதனால்தான் இலங்கைக்கு வரும் சர்வதேசத் தலைவர்கள் எம்மையே சந்திக்கின்றனர். எமது கருத்துக்களை ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் கருத்தாக அவர்கள் ஏற்கின்றனர். தமிழர்களுக்குரிய தீர்வை புதிய அரசு வழங்கியே தீரவேண்டும். இல்லையேல் சர்வதேசம்தான் நேரில் தலையிடும். அதை எவராலும் தடுக்க முடியாது - என்றார். (ஓ.5,22)

## ஈஸ்டர்...

தாவது:

கொழும்பில் தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களை குறிவைத்து பொலிஸார் விவரக்கோவை திரட்டு என்ற பொலிஸ் பதிவை மேற்கொள்ள முயற்சிப்பது, காலம் காலமாக நடைபெறும் கைங்கரியமாகும். இதை நான் எப்போதும் எதிர்த்து தடுத்து நிறுத்தியிருக்கிறேன். மஹிந்த ஆட்சியிலும் சரி, அதற்கு பின் வந்த நமது ஆட்சியிலும் சரி, இதற்கு நான் இடம் கொடுத்ததே இல்லை.

சந்தேக நபர்கள் மீது விசாரணை மேற்கொள்வது ஒன்று. ஆனால், அனைத்து வீடுகளுக்கும் சென்று விவரக்கோவை திரட்டுவதும், அதிலும் தமிழ் குடும்பங்களை குறி வைப்பதும் இன்னொன்று. பொலிஸார் திரட்டும் விவரக்கோவைகள், மூன்றாம் தரப்பு சமூக விரோதிகளிடம் சென்று சேருவதாக நான் சந்தேகப்படுகின்றேன். இதை நான் அனுமதிக்க முடியாது.

பொலிஸ் பதிவை நான் தடுத்து நிறுத்தியதால்தான், உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு குற்றவாளிகளை முன்கூட்டியே கைது செய்ய முடியாமல் போனது என்ற குற்றச்சாட்டை, அவ்வேளை கொழும்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்தவர், ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பில் விசாரித்து வரும் விசாரணை குழுவிடம், எனக்கு எதிராகத் தெரிவித்துள்ளார்.

இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் குற்றவியல் விசாரணை பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமரட்ச்சி திலகரத்ன, என்னிடம் விசாரணை வாக்குமூலம் பெறவேண்டும் என அறிவித்து நேரம் கோரி இருந்தார். அதிகாரிகளை எனது வீட்டுக்கு வந்து வாக்குமூலம் பெறும்படி நான் கூறியிருந்தேன்.

எனது வாக்கு மூலத்தில், இது மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடும் வேலை. கடைசியாக கொழும்பில் தமிழ் மக்களை நோக்கிய பொலிஸ் பதிவுகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருடம் ஜனவரியில் என எனக்கு ஞாபகம் இருக்கின்றது. அப்போது, இதுபற்றி வழமைப்போல், அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பிரதி பொலிஸ் மாதிபர், பொலிஸ் மாஅதிபர் ஆகியோருடன் மட்டுமல்ல, பொலிஸ் துறையை தன் கையில் வைத்திருந்த, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் அமைச்சரவையில் இந்த விடயத்தை எழுப்பி, விவாதித்து இருந்தேன்.

அது முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இது நடந்து, நான்கு மாதங்களுக்கு பின்னரே ஏப்ரல் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இந்த குண்டு வெடிப்புக்கு வந்த நபர்கள் கொழும்பில் ஜனவரி மாதமே வந்து தங்கி இருந்திருப்பார்கள் என்பது நம்ப முடியாத பழிவாங்கல் சிந்தனை. உண்மையில், இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பிலும், குண்டு வெடிப்பு பயங்கரவாதி ஸஹ்ரான் கும்பல் தொடர்பிலும், நட்பு நாடு என்ற முறையில் இந்திய புலனாய்வு துறை முன்கூட்டிய தகவல்களை இலங்கை பொலிஸ் துறைக்கு வழங்கி இருந்தது. குண்டு வெடிப்பு நிகழ சில மணித்தியாலங்களுக்கு முன்கூட இடம், நேரம் உள்ளிட்ட தகவல்களை வழங்கி இருந்தது.

குற்றப் புலனாய்வு திணைக்களம் தேடிக் கண்டுபிடிக்கவில்லை. இந்திய புலனாய்வு துறையே இலங்கைக்கு கொடுத்தது. இப்படி கொடுக்கப்பட்ட துல்லியமான தகவல்களைகூட சரியாக பயன்படுத்தி, குற்றங்களை தடுத்து நிறுத்தி, அப்பாவி மக்களை காப்பாற்றி, குற்றவாளிகளை கைது செய்ய, இலங்கை பொலிஸாரால் முடியவில்லை. சம்பவம் நடைபெற்ற பொலிஸ் வலய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பிரதி பொலிஸ் மாஅதிபர், பொலிஸ் மாஅதிபர், பொலிஸ் துறையை தன் கையில் வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரே தம் கடமைகளில் இருந்து முற்றாக தவறியுள்ளனர். தமது கடமை தவறலை மறைக்கவே, நம்பி வாக்களித்த மக்களுக்காக கடமையை செய்யும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான என் மீது திட்டமிட்டு பழிவாங்கும் முகமாக அபாண்டமாக இந்த குற்றம் சாட்டப்பட்டுள்ளது, எனக் கூறி, எனது வாக்குமூலத்தை எழுத வைத்து, கையெ முத்திட்டு கொடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளார். (ஓ.5)

## நீதிபதி...

நீதித்துறைக்கு ஏற்படும் பாரதூரமான அச்சுறுத்தலாகும் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் காலஞ்சென்ற ரீ.ரஞ்சித் சொய்சா தொடர்பான அனுதாப பிரேரணையின் போது நேற்று உரையாற்றுகையில் அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் சட்டம் செயற்பட்ட முறை எவ்வாறு என்பதை நாம் அவதானித்தோம். சபாநாயகரின் தலைமையில் கூடும் அரசமைப்புச் சபை உள்ளது. அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தற்போதும் சட்டமா அதிபராக உள்ளார். அவர் கூறியதற்கு அமைய ரஞ்சித் சொய்சா போன்றவர்களை கைது செய்து விளக்க மறியலில் வைக்குமாறு கோரும் போது அதனை முன்னைய ஆட்சியில் செய்தார்கள்.

அதே சட்டமா அதிபரால் நீதிபதி கிஹான் பிலபிட்டியவை உடனடியாக கைது செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார். சட்டமா அதிபர் ஏன் அப்படி கூறினார் என்று தெரியவில்லை. நீதிபதி கிஹான் பிலபிட்டியவை விடவும் வேறு நீதிபதிகள் சிலர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் பேசிய உரையாடல் பதிவுகள் உள்ளன. கடுவலை முன்னாள் நீதிவானே அவர். ரஞ்சன் ராமநாயக்க தனது நீதிமன்ற செயற்பாடுகளுக்கு அழுத்தம் கொடுத்தார் என முறையிட்ட கிஹான் பிலபிட்டியவை கைது செய்யுமாறு உத்தரவிடுகின்றார்.

உண்மையில் கிஹான் பிலப்பிட்டிய ரஞ்சன் ராமநாயக்கவுடன் மேற்கொள்ளும் தொலைபேசி உரையாடலில் ரஞ்சன் ராமநாயக்கவின் கோரிக்கையை அவர் நிறைவேற்றவில்லை. பௌசியை ஒரு மணித்தியாலத்துக்காவது உள்ளே போடுமாறே அவர் கேட்கின்றார். அதனை அவர் நிறைவேற்றவில்லை. இதன்பின்னர் அவரே இது தொடர்பாக முறையிடுகின்றார். முறையிட்டவரை எப்படி சிறையில் போட முடியும். இவ்வாறான நபர்களுடன் கடந்த காலங்களில் பயணித்தோம். இன்னும் இவ்வாறான சட்டமா அதிபரை வைத்துக்கொண்டு எவ்வாறு பயணிக்க முடியும்?

நீதித்துறையைப் பாதுகாக்கவே, நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைதுசெய்ய சட்டமா அதிபர் கூறியபோதும் கைது செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார், என்றும் அவர் குறிப்பிட்டார்.' (ஓ.5,44)

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 862
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.01.24
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,750,085/-
வெற்றி இலக்கங்கள்
16 19 41 60
ஆங்கில எழுத்து
X

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1114
சீட்டிழுப்பு திகதி 2020.01.23 வியாழக்கிழமை
I 22 28 49 77
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 92,117,024/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24.01.2020
வெற்றி வாரம் 2748
வர்ணம் கருநீலம்
மகரம்
வெற்றி இலக்கங்கள்
09 27 30 41
சனிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,376,986 /=
25.01.2020ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 317
சீட்டிழுப்பு திகதி 24.01.2020 சிவப்பு
ஆங்கில எழுத்து
U
வெற்றி இலக்கங்கள்
35 43 51
விதி எண்
03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி
ரூ. 50,641,980/=
29.01.2020 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

# இல்லமெய்வன்மை போட்டி முடிவுகள்



கொடிகாமம், ஜன.25


கைதடி குருசாமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

நாவலர் இல்லம் (மஞ்சள்) 415 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், இராசரத்தினம் இல்லம் (சிவப்பு) 368 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், குருசாமி இல்லம் (பச்சை) 299 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும்பெற்றன.

இந்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சி சிவதாசன், ஆஸ்திரேலியா நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சி உதவியாளர் திருமதி சுதர்சன் ஜெனனி, பழைய மாணவனும் ஊர்காவற்றுறை பிரதேச சபை முகாமைத்துவ உதவியாளர் கு. இராகவன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (159)

◆ ◆ ◆

கொடிகாமம் ஜன 24



கிளிநொச்சி தர்மக்கேணி அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி கு.குணஜா, சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக்கல்வி உடற்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் மு.காந்தச்செல்வன், பளை கோட்டக் கல்வி அதிகாரி ஐ.குகானந்தராசா, பளை நிரோ லேணார்ஸ் சாரதி பயிற்சி பாடசாலை பொறுப்பாளர் த.நிரோஜன், அயற்பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (159)



முல்லைத்தீவு, ஜன.25

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கருவேலன் கண்டல் அ.த.க. பாடசாலையின் 2020 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டார்.

இதில் மாணவர்களின் "இசைவும் அசைவும்", "வினோத உடை" என்பன அனைவரையும் இன்புற வைத்ததுடன் சிந்திக்கவும் வைத்தது. (222)



பலாலி விண்மீன்



கொலின்ஸ் வி.க.

# கொலின்ஸ் - விண்மீன் இறுதியில் இன்று மோதல்

கரணவாய், ஜன.25

சூரியமகால் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7வீரர்கள் பங்குபற்றும் வைத்தியர் மயிலேறும் பெருமாள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் துக்கான கால்பந்தாட்டச் சுற்றுப் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்ட நிகழ்வுக்கு முன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ந.முகுந்தன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை நகர சபை தவிசாளர் யோ.இருதயராஜா,மற்றும் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் ம.நவநீதமணி,ஜே/401 கிராம உத்தியோகத்தர் கோ.சிறிசங்கர், கௌரவ விருந்தினராக முன்னாள் பருத்தித்துறை கால்பந்தாட்ட மத்தியத்தர் சங்க தலைவர் ம.கிருஸ்ண காந்தன்,முன்னாள் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வீரர் அ.செல்வானந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23-108)




# மரதன் ஓட்ட போட்டி

கொடிகாமம், ஜன. 25

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு வருடாந்த மரதன் ஓட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நாவற்குழி பழைய மாணவர் சங்க உறுப்பினர் செ. கிரிகரன் அனுசரணையுடன் வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகோவிலாக்கண்டி சந்தியில் இருந்தும் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி தச்சன் தோப்பு சந்தியிலும் ஆரம்பித்து நாவற்குழி சந்தியில் நிறைவு பெற்றது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் பிரதீபன் முதலாவது இடத்தையும், சுஜீபன் இரண்டாம் இடத்தையும், அபிசன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் ஆர்த்திகா முதலாம் இடத்தையும், லோஜப்பிரிந்தா இரண்டாம் இடத்தையும், திரிசா மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

நிகழ்வில் வித்தியாலய பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டனர். (159)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.25

மன்னார் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தினால் புதிதாக இணைந்து கொண்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் எருக்கலம்பிட்டி மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வங்காலை சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாரபுரம் அல்ஜீன்னா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழகமைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி,நாவலர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.25

வவுனியா பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டி வவுனியா நகர சபை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்,ஜன.25

கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி இளந்தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கரத்தை சென்.நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



# கலைஒளி வி.க. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஜன.25

மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் சுதந்திரராஜா செல்வராணி (கனியக்கா) ஞாபகார்த்தமாக அவரின் பிள்ளைகளான கண்ணன்.சுரேன் ஆகியோரின் அனுசரணையுடன் சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்திய 'வடக்கின் மென்பந்தாட்ட அரசன்.' துடுப்பாட்டத் தொடரில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் கார்மேல் போயிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி 14.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 76 ஓட்டங்களை பெற்றது. இதில் கோகுலன்23 ஓட்டங்களையும், ரகுபதி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் ரஹீம்,அஜய் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

77 ஓட்டங்களைப் வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆடிய குருநகர் கார்மேல் போயிஸ் விளையாட்டுக்கழக அணி14.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும். இழந்து 58 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 16 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. அணி சார்பில் மது 13ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் சரத்.ஜீவி, கோகுலன், மோகன்ராஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (23)

## பொதுகூட்டமும் நிர்வகத்தெரிவும் நாளை

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்த பொதுகூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத் தலைவர் தெ.சுகிர்தன் தலைமையில் இணுவில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே ஒவ்வெரு கழகத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் வருகை தந்து கூட்டம் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (23-228)

## நடுவர் பரீட்சை நாளை

யாழ்.ஜன.25

இலங்கை வலைப் பந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் தரம் ஏ,பி, நடுவர்களுக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எனவே பரீட்சார்த்திகள் அனைவரும் உரிய நேரத்துக்கு சமூகம் தருமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலர் அறிவித்துள்ளார். (422)

## வங்கதேஷ பயிற்சியாளராக கிப்சன் நியமிப்பு

தென்னாபிரிக்கா அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ஓட்டிஸ் கிப்சனை பங்களாதேஷ் அணி பந்து வீச்சு பயிற்சியாளராக நியமித்துள்ளது.

வெஸ்ட் இண்டீசைச் சேர்ந்த ஓட்டிஸ் கிப்சன், தென்னாபிரிக்கா அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்தார். உலக கோப்பை தொடரில் தென்னாபிரிக்கா அணி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் அவர் நீக்கப்பட்டார்.

தற்போது பங்களாதேஷ் அணி ஓட்டிஸ் கிப்சனை பந்து வீச்சு பயிற்சியாளராக நியமித்துள்ளது. இவர் ஏற்கனவே வெஸ்ட் இண்டீஸ் அணியின் தலைமை பயிற்சியாளராகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக 2022ஆம் ஆண்டு வரை செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பாகிஸ்தான் சென்றுள்ள பங்களாதேஷ் அணியுடன் அவர் இணைந்துள்ளார்.



புங்குடுதீவு பாரதி



வேலணை துறையூர் ஐயனார்

## பாரதி – துறையூர் ஐயனார் இறுதியில் நாளை மோதல்

யாழ்ப்பாணம்,ஜன.25

புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு நெடுந்தீவு இறுப்பிட்டி சனசமூக நிலையம் இறுப்பிட்டி விளையாட்டுக் கழகம் இணைந்து தீவக ரீதியாக நடத்திய கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இறுப்பிட்டி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறை விரிவுரையாளர் மா.இளம்பிறையன்,வேலணை பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் பி.பேர்ட் நிஜாந் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(23)

## சென்.நீக்கிலஸ் – யூனியன் இறுதியில் பலப்பரீட்டை

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு கோண்டாவில் வடக்கு மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



ஆனைக்கோட்டை யூனியன்



நாவாந்துறை சென்.நீக்கிலஸ்

## உலகக் கோப்பையே எமது லட்சியமாகும்

### தெரிவித்தார் ரவி சாஸ்திரி

எங்கள் மனதில் இருப்பது எல்லாம் உலக கோப்பைதான், அதை அடைவதே எங்களது லட்சியமாக இருக்கும் என ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை 2:1 எனக் கைப்பற்றிய நிலையில் மூன்று வகை கிரிக்கெட் தொடரிலும் விளையாடுவதற்காக நியூசிலாந்து சென்றுள்ளது.

இந்திய அணி ரி-20 உலக கோப்பை வர இருக்கும் நிலையில் இன்னும் ஆறு ஒருநாள் போட்டிகளில் விளையாட இருக்கிறது. இந்தப் போட்டிகள் உலக கோப்பைக்கான அணியை தயார் படுத்துதலுக்கு உதவியாக இருக்கும் என இந்திய அணி தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; நாங்கள் உலகின் எந்த நாடுகளிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். இதுதான் எங்களுடைய இலக்கு. அதை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். உலக கோப்பை எப்போதுமே எங்கள் மனதில் இருக்கும் ஒன்று. அதை வெல்வது தான் லட்சியம். அதற்கான அனைத்தையும் செய்வோம்.

இந்திய அணி அகராதியில் நான் என்ற வார்த்தையே கிடையாது. நாங்கள் என்ற வார்த்தைதான் உண்டு. இதுதான் அணியின் நிலை. ஒருவருடைய சாதனையை மற்றவர் கொண்டாடுவார்கள். ஏனென்றால், அது ஒரு அணியால் கிடைத்த வெற்றியாகும்.

ஷிகர் தவான் காயம் அடைந்தது கவலை அளிக்கிறது. ஏனென்றால் தவான் சீனியர் வீரர். இது போன்று வீரர் ஒருவர் காயம் அடையும்போது அணியின் ஒவ்வொருவரும் வருத்தம் அடைவார்கள்- என்றார்.

ஷ்ரேயாஸ் அய்யர், கே.எல்.ராகுல் அதிரடி காட்ட

# இந்திய அணி வாகை



ஆக்லாந்தில் நடைபெற்ற முதல் ரி-20 போட்டியில் ஷ்ரேயாஸ் அய்யர், கே.எல். ராகுலின் அதிரடி ஆட்டத்தால் இந்திய அணி 6 விக்கெட்டால் வெற்றி பெற்றது.

இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ரி-20 போட்டி, 3 ஒரு நாள் போட்டி, 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ரி -20 ஆட்டம் நேற்று ஆக்லாந்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் நியூசிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய நியூசிலாந்து அணியின் மார்ட்டின் கப்தில் (30), கொலின் முன்றோ (59), கேன் வில்லியம்சன் (51), டெய்லர் (54 ஆட்டமிழக்காமல்) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 5 விக்கெட்டை இழந்து 203 ரன்களைக் குவித்தது.

பந்து வீச்சில் பும்ரா, தாகூர், சாஹல், சிவம் துபே, ஜடேஜா தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோகித்தை பவிலியன் திருப்பினார் சன்நெர். கே.எல் ராகுல் சிறப்பாக ஆடி அரைச் சதம் கடந்தார். அவர் 56 ரன்னுடன் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் கோக்லி 45 ரன்னுடன் ஆட்டமிழக்க அணி தடுமாறியது. எனினும் பின்னர் இணைந்த ஷ்ரேயாஸ் அய்யர் அதிரடியாக ஆடி ரன்களை குவிக்க அணி வெற்றி இலக்கை அடைந்தது. அவர் 3 சிக்ஸர், 5 பவுண்டரிகள் அடங்கலாக 29பந்தில் 58 ரன்களைக் குவித்தார். அணி 19 ஓவரில் 4 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக இந்திய அணி வீரர் ஷ்ரேயாஸ் அய்யர் தெரிவு செய்யப்பட்டார்.

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
A/L 2020 மாணவர்களுக்கான
ICT Maths(7) Agri
Geography Media
077 248 7774
வினாத்தாள் வகுப்புக்கள் ஆரம்பம்
25.01.2020 சனிக்கிழமை

தைப்பொங்கலை முன்னிட்டு
A4 இரண்டு பக்கங்கள் போட்டோ கொப்பி 2/=
தமிழ் மற்றும் ஆங்கிலம் Typing செய்து கொடுக்கப்படும்.
LUXON ENTERPRISE
No 77B, Kandy Road, Jaffna.
T.P.No:0774115335 Fax No: 021 222 5335

புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும்

கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் ஐ.நா. அபிவிருத்தி திட்ட உதவியுடன் அரச திணைக்களங்களை கணினிப்பயிற்சியை வழங்கிய யாழ். MCS IT CAMPUS நிறுவனம் தனது 20 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வடபிராந்திய தகவல் தொழில்நுட்ப சம்மேளனத்துடன் இணைந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும் வழங்க தீர்மானித்துள்ளது. Bachelor in Information Technology (BIT) கொழும்பு பல்கலைகலைக்கழகம். CIMA UK. Computer Engineering –USA .மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற CAA மற்றும் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளை பயில அரிய சந்தர்ப்பம்.! 100% இலவச கற்றலுடன் முழுநேர தொழில் பயிற்சியும் வழங்கப்படும்.!! புலமைப் பரிசில்கள் க.பொ.த உயர்தர பெறுபேற்றின் அடிப்படையிலும் ஏனையவர்களுக்கு நிறுவனத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளின் அடிப்படையிலும் வழங்கப்படும்!!!

புலமைப்பரிசிலிற்கு உங்கள் பெயர் முகவரி பிறந்த திகதி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு SMS செய்யவும்.

வேலையாள்கள் தேவை
கிளிநொச்சியில் இயங்கும் பிரபல Hotel ஒன்றுக்கு
- உதவி முகாமையாளர் (மும்மொழி அறிவுத் தேர்ச்சி)
- சமையலாளர் - Chef (இந்தியன், சைனீஸ்)
- சமையல் உதவியாளர்
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (AKN/915)(11,17)
077 938 5521

JITF
NALIN Information Technologies(Pvt)Ltd.
Computers of the North
intel hp DELL
யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு C பிரிவு காட்சிப் பகுதியில் பின்வரும் பொருட்களுக்கு
விசேட விலைக்கழிவுகள்
- Smart Board
- Printers (Ink Tank, Laser, Ink Jet)
- Photo Copier (Ricoh)
- Monitor (IPS, Full HD, Eye Care, Elite) Pc (Assemble Pc, Branded Pc,
- Workstation Editing Pc)
- CCTV
- Laptops





5% முதல் 20% வரை தள்ளுபடி
195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121 | 077 766 7975
No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi.
076 359 7610 | 021 228 5550

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 08 ... 04 ... 1961



ஆண்டவன் பிடியில் 25 ... 12 ... 2019

கடந்த (25.12.2019) புதன்கிழமை அன்று இறைபதமடைந்த

**அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் சிவனேசன்**

(பிரதம நூலகர் யாழ் பல்கலைக்கழகம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து அனுதாபத்தை தெரிவித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் மேலும் பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், மலர்வளையங்கள் மூலம் தமது கண்ணீர் அஞ்சலியினை செலுத்திய உள்ளங்களுக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் பலவழியிலும் உதவிபுரிந்த யாழ். பல்கலைக்கழக நூலக ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுவினி அம்மன் கோவிலடி,
இணுவில் மேற்கு.
குடும்பத்தினர்.
JI1315 (16/17)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

போனார்காண் என்மச்சான் போரென்று கிளாலிக்குப்
போனார்காண் போன சிலநொடிக்குள் ஆனார்காண்
ஆடையற்ற கோவணத்து ஆண்டியராய் ஆனார்காண்
பீடையுற்ற ஆட்சியர்பேச் சால்.

ஈழக்கவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 தை :11 சனிக்கிழமை (25.01.2020) சிகரம் : 1



அன்று டயானா: இன்று மேகன் 03



இழந்த வரலாற்றை மீட்டெடுக்கும் முயற்சி! 02



கருக்கப்பட்ட காஞ்சனா 14



யாழ்.மாநகர சபை வரலாறு 09

# ஜனநாயக 'சர்வாதிகாரி'

சாம்பசிவம் ஹரிகரன்



பத்தொன்பதாம் திருத்தத்தின் காரணமாக உறுதியான ஆட்சியை ஏற்படுத்த முடியாமல் இருப்பதால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் கைப்பற்றுவதன் ஊடாக 19ஆம் திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அர்த்தப்பட ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்த கருத்து சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

இதனால், இலங்கையின் கடந்த கால வரலாற்றரசியல், அதில் நிறைவேற்றதிகாரம் ஏற்படுத்திய தாக்கம் என்பவற்றை பகுப்பாய்வு செய்து அது இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடொன்றின் ஆட்சிக்கட்டமைப்பில் ஏற்படுத்திய தாக்கத்தை ஆராய வேண்டிய சூழல் எழுந்திருக்கிறது.

நிறைவேற்றதிகாரம் என்பது 1978ஆம் ஆண்டு ஆட்சித்துறையின் 'இரும்பு மனிதர்' என வர்ணிக்கப்படுபவரும் இலங்கையின் முதலாவது நிறைவேற்றதிகாரம் மிக்க ஜனாதிபதியுமாகிய ஜே. ஆர். ஜெயவர்த்தனவாலேயே கொண்டு வரப்பட்டது.

இதன் பின்னர் ஒட்டு மொத்த அதிகாரங்களும் தனி ஒருவரிடம் குவிக்கப்பட்டுத் தனி மனித ஆட்சியின் இரும்புக்கரம் இலங்கை ஜனநாயகத்தின் குரல் வளையை நெரித்து வந்தது. ஜே. ஆர் நிறைவேற்றதிகாரத்தைக் கொண்டு வந்த போது இதனைப் பல்வேறு துறைசார்ந்தவர்கள் விமர்சித்திருந்தனர்.

“இலங்கையில் உள்ள ஆண்களைப் பெண்களாக்க முடியாது. பெண்களை ஆண்களாக்க முடியாது. மற்றும்படி நிறைவேற்றதிகாரத்தால் எதையும் மாற்றக்கூடியளவுக்கு அதிகாரங்கள் கொட்டிக் கிடக்கின்றன” என்பது கொல்வின் ஆர்.டி. சில்வாவின் பிரபலமான விமர்சனமாகும். கலாநிதி என்.எம் .பெரேரோ இதை பற்றி குறிப்பிடுகையில் “இலங்கையின் நிர்வாகம் அரசமைப்பில் கொட்டிக் கிடக்கும் அதிகாரங்களுடன் ஒருவருக்கு செல்லும்போது அது தவறிக்கூட ஒரு பைத்தியத்திடம் செல்லக்கூடாது” எனக் கிண்டலடித்திருந்தார்.

அந்த அளவுக்கு நிறைவேற்றதிகாரம் தனியொரு மனிதனைக் தனிக்காட்டு ராஜாவாகவே உருவாக்கியிருந்தது.

1978ஆம் ஆண்டு நிறைவேற்றதிகாரம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் ஆட்சிக்கு வந்த ரிச்சட் ஜயவர்தனா (பெப்ரவரி 4, 1978 ஜனவரி 2, 1989)ரணசிங்க பிரேமதாசா (ஜனவரி 2, 1989 மே 1, 1993)டிங்கிரி பண்டா விஜயதுங்கா (மே 2, 1993 நவம்பர் 12, 1994) சந்திரிகா குமாரதுங்க (நவம்பர் 12, 1994 நவம்பர் 19, 2005)மகிந்த ராஜபக்ஷ (நவம்பர் 19, 2005 ஜனவரி 9, 2015)மைத்திரிபால சிறிசேன (பதவிக்காலம்)ஆகியோரும் தமது பதவிக்காலத்தில் இந்த அதிகாரங்களை எவ்வளவு கூட்டலாம் தாம் அமர்ந்திருக்கும் நிறைவேற்றதிகாரம் என்ற அரியணையை அதிகாரங்களைக் கூட்டி எப்படி மெருகூட்டலாம் என்ற போக்கிலேயே செயற்பட்டு வந்தனர்.

வேடிக்கை என்னவென்றால், ஜே. ஆரையும், பிரேமதாஸவையும் தவிர்த்து , தேர்தல் மூலம் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அத்தனை பேரும், “நான் ஜனாதிபதியானால் நிறைவேற்றதிகார முறையை இல்லாதாக்குவேன்” என்று சூளுரைத்தே, மக்களின் வாக்குகளைப் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் அந்த நிறைவேற்றதிகாரக் கதிரையில் அமர்ந்தவுடன், அதிகாரச் சுவையில் திளைத்ததால், மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளைக் கடைசி வரை நிறைவேற்றவேயில்லை. மாறாக இன்னும் அதிகாரங்களைக் கூட்டவே முயன்றனர்.



17 அரசமைப்பு திருத்தம் உட்பட சில திருத்தங்கள் நிறைவேற்றதிகாரத்தைக் குறைப்பதை நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டு இருந்தாலும் அவை ஜனாதிபதி மற்றும் ஆட்சித்துறைசார் அதிகாரங்களால் கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இதனால் இந்தத் திருத்தங்கள் ஜனநாயகம், நல்லாட்சி எனும் தூர நோக்கை அடைவதில் சவாலையே கண்டிருந்தன. நிறைவேற்றதி காரத்தை வெட்டிக்குறைப்பதாகக் கூறி, 17 ஆவது திருத்தம் மூலம் ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்ட போதும், மேலதிக திருத்தம் ஒன்றினால் அது நீக்கப்பட்டு மகிந்த தரப்பால் 18 ஆம் திருத்தம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. அந்தளவுக்கு கட்டுப்பாடற்ற பொறுப்புக்கூறலற்ற ஆட்சி இலங்கையில் தலைவிரித்து ஆடுவதற்கும் நிறைவேற்றதிகாரமே மிக முக்கிய காரணமாக அமைந்தது.

1978 அரசியல் யாப்பில் ஜனாதிபதி ஆட்சி முறை அமெரிக்கா அரசியல் யாப்பை அடியொற்றியும் பிரதமர் அதிகார முறை பிரித்தானியாவை ஒட்டியும் கலந்து கொண்டு வந்ததாகக் கூறப்பட்டாலும் அமெரிக்கா அரசியல் யாப்பில் காணப்படும் சமநிலையும் தலையீடும் உட்பட ஜனாதிபதியின் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை குறைக்கும் எண்ணக்கருக்கள் எதுவும் எமது நாட்டின் யாப்பில் காணப்படவேயில்லை. இலங்கையில் ஜனநாயகம் தோல்வியடைவதற்கு இதுவும் ஒரு காரணி.

2015இல் இலங்கையில் நல்லாட்சி அரசு, ஆட்சிபீடமேறியவுடன் கொண்டு வரப்பட்ட மிக முக்கிய திருத்தமாக 19ஆம் திருத்தம் அமைகின்றது. இந்தத் திருத்தமானது ஜனாதிபதிக்கு இருக்கும் சட்டத்துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை அதிகாரங்களைக் குறைத்தல், மட்டுப்படுத்தலை நோக்காகக் கொண்டிருந்தது. அத்துடன், ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துதல், அரசமைப்புப் பேரவையை ஸ்தாபிப் பதன் ஊடாக ஜனாதிபதியின் நியமன அதிகாரங்களில் மட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், ஜனாதிபதியின் பொறுப்புக்கூறலைத் தீவிரப்படுத்த அவரை நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற நிர்ப்பந்தித்தல், தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துதல், ஜனாதிபதியின் அமைச்சரவை நியமனத்தில் மட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியாமல் இருக்கும் சிறப்புரிமையை மட்டுப்படுத்தி அரசமைப்பில் 126ஆம் பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்யும் ஏது நிலையை உருவாக்கல், ஜனாதிபதியின் பதவிக் காலம் தவணைக்காலம் என்பவற்றில் மட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல், ஜனாதிபதியாக பதவியேற்பவரின் வயதெல்லையை மட்டுப்படுத்தல் என பல விடயங்களே பத்தொன்பதாம் திருத்தத்தின் உள்ளடக்கங்கள். இவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி மீண்டும் முழுமையான நிறைவேற்றதிகாரத்தை உறுதிப்படுத்தவே பத்தொன்பதாம் திருத்ததை ஒழிப்பேன் என்று இப்போதைய ஜனாதிபதி கங்கணம் கட்டி நிற்கிறார்.

இதற்காக நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கைப்பற்ற வேண்டும் எனும் கருத்தை ஜனாதிபதி முன்வைத்திருந்தார். அண்மைக்காலமாக பத்தொன்பதாம் திருத்த்தை நீக்குவதற்கு கட்டியம் கூறும் சம்பவங்கள் நிகழத்தொடங்கி விட்டன. தற்போதய புதிய அமைச்சரவை கட்டமைப்பு, பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு அமைச்சு உட்பட அமைச்சுகள் பகிரப்பட்ட நிலைமையும், சில அமைச்சுக்களுக்கு அமைச்சர்கள் நியமிக்கப்படாமல் அவற்றை ஜனாதிபதி கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தன்மையும் எதிர்காலத்தின் மீது பெரும் அச்சத்தை உண்டுபண்ணுகின் றன.

எனவே தனி மனித அதிகாரக் குவிப்புக்கு வழிவகுக்கும் இச்செயற்பாடுகள் இலங்கையின் ஜனநாயகத்தில் தனி மனித பொறுப்புக்கூறலிலும் சட்டவாட்சியின் உறுதிப்பாடு ஆகியவற்றில் நீடித்த அளவில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். சுருக்கமாகச் சொன்னால் ஜனநாயக ரீதியில் ஒரு சர்வாதிகாரியை ஆட்சியாளராகப் பெறும் சாபம் வெகு தூரத்தில் இல்லை.

# இழந்த வரலாற்றை மீட்டெடுக்கும் முயற்சி!

**யாழில் உருப்பெற்றுள்ள அருங்காட்சியம் பற்றிய ஒரு பதிவு**



கணபதி சர்வானந்தா

யாழ்ப்பாணத்து நுழைவாயிலில் ஒரு திருவாசக அரண்மனை. இறையின் புகம்பாடித் தமிழுக்குச் சுவைசேர்த்த மாணிக்கவாசகருக்கு ஒரு நினைவாலயமாகத் திகழும் திருவாசக அரண்மனையை அமைத்த செஞ்சொல் திலகர் ஆறு திருமுருகனின் சிவபூமி அறக்கட்டளையின் மற்றுமொரு முயற்சியாக அரும் பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டு முடிவடையுந் தறுவாயில், நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கு சென்றோம். ஜனவரி 25 சனிக்கிழமை (சஞ்சீவியின் மூன்றாவது மீள்பிறப்பு நாளன்று; இன்று) பணிகள் நிறைவு பெற்று அது மக்கள் பார்வைக்குத் திறந்து விடப்படும் என்று சொன்னார்கள்.

அந்தக் காட்சியகம் அமையப் பெற்ற வளாகத்தில் எங்கு பார்க்கினும் பணியாட்கள் மும்முரமான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஏறத்தாழ 20 பேர் வரை தென்னிந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து கூட்டி வரப் பட்டவர்கள். அனைவரும் சிற்பாச்சாரியர்கள். சிற்ப வடிவமைப்பில் கைதேர்ந்தவர்கள். சாதாரணமாக இவ்வகைப் பணிகளுக்கு ஆட்களைத் திரட்டுவதில் நாம் எதிர்நோக்கும் சவால்களை எல்லோரும் அறிவர். அங்கே நூற்றுக்கணக்கானவர்களை ஒன்று திரட்டி இந்தப் பணிகளை முன்னெடுத்த ஆறு திருமுருகனின் இந்தப் பணிக்குப் பின்னால் ஒரு நீண்ட கதை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படி ஒன்றை அமைக்க வேண்டிய முக்கியத்துவம் அவரால் உணரப்பட்டதோடு மட்டுமல்லாமல், அவரது அனுபவத்திறன் கொண்டு காலத்தையும், இடத்தையும், சூழலையும் தெரிவாக்கியதைத்தான் நாம் இதனுள் முதன்மைப் படுத்தலாம். யுத்தத்துக்குப் பின்னால் சிதைந்து கிடந்த தமிழ்ச் சமூகத்தில் எதனைப் பாதுகாப்பது? எதனை விட்டுவிடுவது? என்று தெரியாமல் இருந்தது. அந்த அவல நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டால் வியாபாரிகள் பல தமிழ் மண்ணுக்குச் சொந்தமான அரும் பொருட்கள் என்று கருதப்படுபவைகள் பலவற்றைச் சூறையாடிச் சென்று விட்ட அவலத்தைக் கண்ட ஒரு சமூகப் பொறுப்பாளர் என்ற வகையில், ஆறுதிருமுருகனின் உள்ளத்தை அது அரித்திருக்க வேண்டும். அன்று தொட்ட எண்ணம், அவர் இதயத்தில் வேர்விட்டு வளர்ந்து, விருட்சமாகி இன்று அரும்பொருட் காட்சியகமாக வெளிப் பட்டுள்ளது.



**காலத்தின் தேவையை அறிந்த ஒரு செயற்பாடு மட்டுமல்ல, சமூகத்தையும் அதன் செயற்பாட்டையும் ஒன்றிணைக்கப்போகும் ஒரு அரிய முயற்சி இது.**

எம்மைப் பொறுத்த வரை கடந்த காலத்தில் பதவியில் இருந்த, தமது பொறுப்பைச் செவ்வனே நிறை வேற்றாது அஸ்தமித்துக் கொண்ட வட மாகாண சபை முன்னெடுத்திருக்க வேண்டிய பணி இது. இப்படியானதொன்றை அமைக்காததற்கு வடக்கு மாகாண சபையினர் எவ்வித காரணங்களையும் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. "அரசு அனுமதிக்கவில்லை. ஆட்சியாளர்கள் தடையாக இருந்தார்கள்" என்று வெறுமனே சொல்லி அனுதாபத்தைத் தேடமுடியாது. ஏனெனில் அன்று ஆட்சியாளர்களாக இருந்தவர்கள் தான் இன்றும் இருக்கிறார்கள். அன்று தடுத்தார்கள் என்றால் அவர்கள் இன்றும் தடுத்திருக்கலாம். எனவே வட மாகாண அரசு மறந்ததை ஆறுதிருமுருகன் முன்னெடுத்திருக்கிறார்.

கோட்டை வடிவத்தில் முகப்பு. அருங் காட்சியகத்தைப் பார்க்க வருபவர்கள் உட்செல்லும்போது மக்களுக்கு "புராதனச் சின்னங்கள் குவிந்து கிடக்கும் ஒரு மாளிகைக்குள் பிரவேசிப்பதைப் போன்ற உணர்வு ஏற்படவேண்டும், அரச கோட்டைக்குள் செல்கிறோம் என்ற ஞாபகங்கள் எழுச்சி பெற வேண்டும்" என்ற உணர்வோடேயே அவர் முகப்பை அப்படி வடிவமைத் திருப்பதாக அறிந்தோம்.

காட்சியகம் அமையப் பெற்ற காணியின் விஸ்தீரணம் 12 பரப்பு. நுழைவாயிலின் இருமருங்கிலும் இரண்டு சிலைகள். ஒன்று எல்லாளனுடையது. மற்றையது சங்கிலிய மன்னனுடையது.

உள்ளே யாழ்ப்பாணப் பேரரசை ஆண்ட 21 மன்னர்களுக்கும் சிலைகள் . இதுவரை அங்கொன்றும், இங்கொன்றுமாகத்தான் சில மன்னர்களின் சிலைகளை வைத்திருக்கிறோம். ஆனால் இங்கு தான் முதன்முறையாக ஓரிடத்தில் அவர்கள் அனைவருக்கும் பெயர்கள் , ஆட்சிக் காலங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக சிலைகள் அமைத்திருக்கிறார்கள்.

மூன்று தளங்கள் கொண்டு அமைக்கப் பட்ட காட்சியகத்தின் முதலாவது தளத்தில் யாழ்ப்பாண வரலாற்றோடு காணப்படும் பல பண்பாட்டு அரும் பொருட்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் என்பனவும், இரண்டாவது தளத்தில் சமயம், கல்வி, இலக்கியம் சார்ந்த பழமையான வரலாற்றில் இடம் பிடித்தவைகளும், மத நிறுவனங்களின் ஒளிப்படங்கள் போன்றவைகளும், 1800 கள் தொட்டு வெளிவந்த பத்திரிகைகளின் முதற்பிரதி போன்ற ஆவணங்களும், வெளியீடுகளும் மற்றும் அவை சார்ந்த பல பிறபொருள்களும், மூன்றாவது தளத்தில் யாழ். பல்கலைக்கழக சித்திரமும், வடிவமைப்பும் என்ற துறைசார் மாணவர்களின் முயற்சிகளால் உருவாக்கப்பட்ட , அதாவது எமது கலா சாரத்தை மரபு சார்ந்து பிரதிபலிக்கின்ற ஓவியங்களையும் காட்சிப் படுத்தப் போகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் தற்போது இருக்கின்ற அரச அருங்காட்சியகத்தில் எம்மை அடையாளப்படுத்தக் கூடிய பொருட்கள் சில உள்ளன. பல அங்கிருந்து அகற்றப் பட்டுவிட்டதாக மக்கள் பேசிக் கொள்கின்றனர். அவை ஏன் அகற்றப்பட்டன? யார் அகற்றினார்கள்? என்ற விடயம் எவருக்கும் தெரியாத மறை பொருளாகவே இன்னும் இருக்கிறது. எனவே ஒரு முழுமையாக, எம்மை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக இந்த அருங்காட்சியகம் அமையப்போவதாக அறிந்தோம்.

இந்த அருங்காட்சியகத்தில் மேற்சொன்ன பொருட்களைவிட 1950 களுக்கு முன்னர் உபயோகித்த 17 மோட்டார் கார்கள் அத்தோடு குறிப்பாக முதியோர் இல்லத்தில் ஏற்கனவே காட்சிப்படுத்தபட்டிருந்த தட்டிவான், மாட்டு வண்டிகள் போன்றவைகளோடு யாழ்ப்பாண மக்கள் வாழ்வோடு இணைந்தும், பிணைந்தும் பயணித்த பல அரும்பெரும் பொருட்களும் காட்சிக்கு வருகின்றன.

மொத்தத்தில் நல்லதொரு தேடலின் வெளிப்பாடாக இது இருக்கப் போகிறது. காலத்தின் தேவையை அறிந்த ஒரு செயற்பாடு மட்டுமல்ல, சமூகத்தையும் அதன் செயற்பாட்டையும் ஒன்றிணைக்கப்போகும் ஒரு அரிய முயற்சி இது. இதன் தேவையை அரசியல், பண்பாட்டு, மரபு சார்ந்த தளத்தில் இருந்து பார்த்தால் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இதன் முக்கியத்துவம் பல வழிகளிலும் உணரப்படுவது மட்டுமல்ல அதனூடாகச் சொல்லப்படப்போகின்ற கதைகள் பெருமைக்கு உரியனவாக இருக்கப் போவதென்பதில் எதுவித ஐயமுமில்லை. மொத்தத்தில் இதற்குப் பொறுப்பானவர்கள் என்று சொல்லிக் கொண்டு சமூகத்தில் வலம்வருபவர்கள் செய்யத் தவறிய விடயம் என்றும் இதனைக் கொள்ளலாம். இது போன்ற பணிக்கு பல ஆறுதிரு முருகன்கள் தேவைப் படுகின்றனர், சங்கிலியன்தோப்பு, பூங்கா , மந்திரி மனை, யமுனா ஏரி போன்ற வைகளையும் பேணிப் பாதுகாத்துக் களஞ்சியப்படுத்தி எமது அடுத்த சந்ததியினரின் கைகளில் கொடுக்க நாம் சிந்திப்போமா?

## சோம்பேறி மீனவன்



எனது உறவுக்காரர் ஒருவர் எந்த வேலையுமே செய்யாமல் எப்போதும் சோம்பேறியாகவே இருப்பார். ஏதாவது தொழில் தொடங்கச் சொன்னால் நிலைமை சீரில்லை என்பார். இவரை எப்படித் திருத்தலாம்?

தொழில் தொடங்க மறுப்பவரைப் பற்றி ஒரு கதை சொல்கிறேன். ஒருவர் குளத்தில் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தார். தூண்டிலில் ஒரு மீன் அகப்பட்டு விட்டது. தப்பியோடுவதற்காக அந்த மீன் இங்கு மங்கும் இழுத்துக் கொண்டேயிருந்தது. இவர் மீனை எடுத்துத் தனது பையினுள் போடவில்லை. இதனைப் பார்த்த ஒருவர், "ஐயா, மீன் தூண்டிலை அறுக்கப் போகுது. அதை எடுத்து உங்கள் பைக்குள் போடுங்கள்" என்று அறிவுரை கூறினார்.

"எனக்கு சோம்பலாக இருக்கிறது. நீங்களே எடுத்துப் போட்டு விடுங்களேன்" என்று அந்தத் தூண்டில்காரர் கெஞ்சினார். நல்ல சோம்பலாகதான் என்று புறுபுறுத்துக்கொண்டே அவரது பைக்குள் மற்றவர் மீனை எடுத்துப் போட்டு விட்டார்.

"ஐயா, நன்றி. நல்ல மனிதராக இருக்கிறீர்கள். இன்றுமொரு உதவி செய்ய முடியுமா?" என்று தூண்டிற்காரர் கேட்டார். "செய்து தொலைக்கிறேன். சொல்லும்." என்றார் வந்தவர். "இந்தப் பேணிக்குள் புழுக்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைத் தூண்டிலிற் கொழுவி மீண்டும் நீரினுள் விடுங்கள்" என்றார்.

"உங்களைப் போன்ற சுத்த சோம்பறியை நான் எங்குமே காணவில்லை" என்று சொன்னவர் தூண்டிலில் புழுவைக் கொழுவிக் குளத்துக்குள் போட்டுவிட்டுப் புறப்பட்டார். புறப்படும் போது தூண்டிற்காரருக்கு அறிவுரை கூற விரும்பினார்.

"ஐயா, நீங்களோ மகாசோம்பேறியாக இருக்கிறீர்கள். நீங்கள் எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருந்து சாப்பிட ஒரு வழி இருக்கிறது. ஒரு பெண்ணைத் திருமணம் செய்யுங்கள். உங்களுக்கு ஒரு மகன் பிறப்பான். அவன் எல்லா வேலைகளையும் செய்து தருவான்" என்று கூறினார்.

இதைக் கேட்டு சிறிது நேரம் யோசித்த தூண்டிக்காரர், வந்தவரிடம் இன்னொரு உதவி கேட்டார். அதைக்கேட்டு வந்தவர் மயங்கி விழுந்தே விட்டார். "ஐயா, இது நல்ல யோசனையாக உள்ளது. நீங்களும் எனக்கு உதவி செய்கிற மனப்பான்மையோடு இருக்கிறீர்கள். எங்காவது கர்ப்பமான பெண் இருந்தால் எனக்குக் கட்டிவைக்க முடியுமா?" என்பதே தூண்டில்காரர் கேட்ட உதவி.

25 ஜனவரி 2020

புதுமையும் எழிலும பொலியும் பல்சுவை வார இதழ்

சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com

## 33 ஆம் ஆண்டில் மூன்றாம் வருகை

இந்த உதய வேளையில் சஞ்சீவியின் இன்னொரு மீளுயிர்ப்பு நிகழ்ந்திருக்கிறது. உதயனின் இன்னொரு அவதாரமாக 1986.01.25 ஆம் திகதி சனிக்கிழமை தன்னுடைய முதல் வரவை பதிவு செய்த சஞ்சீவி, அதன் பின்னர் நாட்டில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டு, மீண்டும் தொண்ணூறுகளின் பிற்பகுதியில் முதல் முறையாக மீளுயிர்த்திருந்தது. பின்னர் மீண்டும் போர். இரண்டாம் தடவையாகவும் சஞ்சீவி இடைநிறுத்தப்பட்டது. அதன் பின்னர் சில தடவைகள் சஞ்சீவிக்கு உயிர் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், அவை காலவசத்தால் கை நழுவிப் போயின.

இப்போது மீண்டும் காத்திரமாக, தன் மூன்றாம் வருகையை சஞ்சீவி உறுதிப்படுத்தி இருக்கிறது.
சஞ்சீவி என்றாலே உயிர் கொடுக்கும் மருந்து என்றே பொருள். இராமாயணத்தில் கூட , இராவணனின் தாக்குதலில் இலக்குவணன் உட்பட பல்லாயிரம் வீரர்களை இராமன் ஒரே தடைவையில் பறிகொடுத்து கலங்கிய வேளையில், அனுமன் பறந்து போய் கொண்டு வந்த சஞ்சீவியே அத்தனை பேருக்கும் உயிரை மீட்டுக் கொடுத்தது. இப்போது அதே சஞ்சீவியின் பெயரைக் கொண்டதாலோ என்னவோ, இத்தனை வருடங்களுக்குப் பின்னரும் , பழைய 'கெத்தோடு' இன்னும் மெருகோடு உங்கள் அபிமானத்தை மீண்டும் பெற இந்தச் சஞ்சீவி மலர்ந்திருக்கிறது.

இன்றைக்கு ஈழத்துப் படைப்புலகில் இயங்கு நிலையில் இருக்கும் பலர் சஞ்சீவியின் ஊடாக முகிழ்த்தவர்களே. அந்தளவுக்கு பல புதிய படைப்பாளிகளை அறிமுகம் செய்ததோடு, அவர்களுக்குத் தொடர்ச்சியாகக் களம் அமைத்துக் கொடுத்ததிலும் சஞ்சீவியின் பங்கு காத்திரமானது. இதே பங்களிப்பை இனியும் செய்யச் சஞ்சீவி காத்திருக்கிறது. படைப்புலக ஆளுமைகளும், புதியவர்களும், வாசகர்களும் அதற்காக எம்மோடு கூட்டிணைந்து பயணிக்க அழைக்கின்றோம்.

தனியே இலக்கியம், பொழுதுபோக்கு என்றில்லாமல் அரசியல், சமூகவியல் ரீதியாகவும், தமிழ்த் தேசியத்தின் பக்கமாகவும் சஞ்சீவி கொண்டிருக்கும் கொள்கை மிக உறுதியானது. முன்னரைப் போன்ற அதே உறுதியுடன் இனியும் அவை பேணப்படும். இன்றைய புதிய அரசியல் ஒழுங்கில் , அதிகார வர்க்கத்துக்கு துதி பாடும் ஊடகமாக அல்லாமால் தட்டிக் கேட்கும் மக்களின் குரலாக, வாரந்தோறும் பிரதி சனிக்கிழமைகளில் சஞ்சீவி ஒலிக்கும். உங்கள் கருத்துக்கள், விமர்சனங்கள், படைப்புக்கள், கடிதங்கள் என்பவற்றால் வழிபடுத்துங்கள். செவிசாய்க்கக் காத்திருக்கிறோம்.



# அன்று டயானா: இன்று மேகன்

ஆர்.பிரகாஷ்

இளவரசர் ஹரி எடுத்துள்ள அதிரடி முடிவை இளவரசர் சார்ள்ஸ் அன்று எடுத்திருந்தால் இளவரசி டயானா இன்று உயிருடன் இருந்திருக்கக்கூடும். பிரிட்டன் அரச குடும்பத்தில் இருந்து வெளியேறிய ஒரு வருடத்துக்குள்ளேயே டயானா இறந்துவிட்டார். அவரின் இறப்பு கொலையாக இருக்குமோ என்ற விவாதங்கள் இன்றுவரையில் முடிவு பெறாத நிலையில், மேகனின் நிகழ்காலச் செயற்பாடுகள் டயானாவை பிரிட்டிஷார்களின் கண்களின் முன்னால் கொண்டுவந்துள்ளன. டயானா - சார்ள்ஸ் யுகம் மீண்டும் திரும்பிக்கொண்டிருக்கின்றது ஹரி - மேகன் வடிவில். ஆனால் இம்முறை மாற்றங்களும் இருக்கவே செய்கின்றன. சினிமாப் பாணியில் சொல்வதானால் மேகன் ஒரு டயானா 2.0.

உலகின் தவிர்க்க முடியாத கனவு நாயகி டயானாவின் இயற்பெயர் பிரான்செஸ் ஸ்பென்சர். இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸின் முதலாவது மனைவி. இவர்களது பிள்ளைகள் இளவரசர்கள் வில்லியம், ஹென்றி (ஹரி). இளவரசர் சார்ள்ஸுடன் டயானாவுக்குத் திருமண ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து, டயானா பொதுவாழ்வில் ஒரு முக்கிய புள்ளியாகக் கருதப்பட்டார்.



### வேறுபட்டவர் டயானா!

ஐக்கிய நாடுகள் மட்டுமல்லாமல் உலகளாவிய அளவில் இவர்களது திருமண வாழ்வு தொடக்கம் முதல் மணமுறிவு ஏற்படும் வரையில் ஊடகத் துறையில் அதிகம் பேசப்பட்டார். அதுவரை இங்கிலாந்து மக்கள் பார்த்து வந்த அரச குடும்பத்து மனிதர்கள் வேறு. இறுக்கமான முகம். 'நீ சாமான்யன், நாங்கள் ராஜவம்சத்தினர்..!' என்கிற தோரணை. நிலப்பிரபுத்துவ மனோபாவம். தங்க வட்டத்துக்குள் ராஜ வாழ்க்கை. அந்தக் குடும்பத்துக்கு உள்ளே நுழையும்போதே, நான் வேறு லெவல் என்று நிரூபித்துவிட்டவர் டயானா. பத்தொன்பது வயதில் சார்ள்ஸைக் கைப்பிடித்து பக்கிங்ஹாம் அரண்மனைக்குள் நுழைந்தார். வெகு சீக்கிரம், அடித்தட்டு மக்களின் இதயத்தில் இடம்பிடித்துவிட்டார்.

கணவரின் மேல் டயானா, அளவுக்கு அதிகமான காதல் கொண்டிருந்ததாலோ என்னவோ, "கமீலா என்ற திருமணமான பெண்ணுடன் சார்ள்ஸுக்கு முன்பிருந்தே ஒரு உறவு இருந்து வருகிறது. அது இப்போதும் தொடர்கிறது" என்று தெரிந்தபோது, அவரால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. இதனால் திருமணமான முதல் வருடத்திலேயே இருவருக்கும் இடையே காதல் குறையத் தொடங்கியது.
மனம் வெறுத்த டயானா, சிலமுறை தற்கொலை முயற்சியில்கூட ஈடுபட்டிருக்கிறார். அவரது தனி வாழ்க்கையில் கிடைத்த ஏமாற்றங்களால் ராணியையும், இளவரசரையும் வெறுப்பேற்றுவதற்காகவே பல ஆண்களைத் துரத்த ஆரம்பித்தார். சார்ள்ஸ் டயானா விரிசல் இவ்வளவு பகிரங்கமான பிறகு விவாகரத்துதான் ஒரே வழி என்று மகாராணியே வற்புறுத்த விவாகரத்து நடந்தது. டயானா வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்து பத்திரிகைகளுக்கு அவர்தான் எப்போதும் முதல்பக்க கதாநாயகி. துரத்தித் துரத்திப் படமெடுத்தார்கள். துருவித் துருவிச் செய்தி சேகரித்தார்கள். டயானாவை இறுதிவரை தொடர்ந்த காதல்களும் கமராக்களும் அவர் உயிரைக் குடித்தன.

### ஹரியின் துணிச்சல்

தன் தாய்க்கு நிகழ்ந்த துன்பியல் தன் மனைவி மேகனுக்கு நடந்துவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக உள்ளார் இளவரசர் ஹரி. அரச குடும்பத்தில் இருந்து விலகுவது என்ற மேகனின் முடிவுக்கு உடன்பட்டு அந்தப் பெரும் சுகபோகத்தைத் துறந்துள்ளார் இளவரசர் ஹரி. டயானா, மேகன் இடையிலான பின்னணி வேறுபட்டிருந்தாலும் பிரிட்டன் அரண்மனைக்குள் இருந்து பார்க்கையில் இருவரும் கிட்டத்தட்ட ஒரே வகையறாதான். முப்பத்தெட்டு வயதாகும் மேகன் மார்கெல் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்செலிஸ் நகரில் பிறந்தவர். அவருடைய தாய் டோரியா ரேக்லேண்ட் ஆபிரிக்க இன அமெரிக்கர். அப்பா ஐரோப்பாவின் காகசஸ் மலைப்பகுதியிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்.




எனவே, மார்கெல் ஆபிரிக்க அமெரிக்கர். 'தூய' பிரிட்டிஷ் குருதிக்குள் ஆபிரிக்க அமெரிக்கக் குருதி கலந்தது நிச்சயம் பிரிட்டிஷாரின் தோரணைக்கு சிறிது பங்கத்தை ஏற்படுத்தவே செய்திருக்கும். இந்த நிலையில் தான், அரச குடும்பத்து அந்தஸ்தை துறப்பதாக அறிவித்து, உலகுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர் இளவரசர் ஹரியும், மேகனும்.

இனி அரச குடும்பத்துக்குரிய இளவரசர், இளவரசி என்ற பட்டங்களைப் பெயரின் முன் சேர்க்க மாட்டார்கள். விண்ட்சர் அரண்மனையில் தங்களுடைய குடியிருப்பைப் புதுப்பிக்க மக்களுடைய வரிப் பணத்திலிருந்து பெற்ற 24 லட்சம் பவுண்ட்ஸை அரசுக்கே திருப்பித் தந்துவிடவும் அவர்கள் முடிவெடுத்துவிட்டனர். இனி அவர்கள் தனிப்பட்ட முறையில் வேலைசெய்து குடும்பம் நடத்துவ்ார்கள். பிரிட்டனில் இது பல்வேறு விவாதங்களுக்கு வித்திட்டிருக்கிறது.

ஒருவேளை இந்தப் பிரிவுக்கு ஹரி உடன்பட்டிருக்காவிட்டால் நாளை மேகனுக்கும் ஹரிக்கும் இடையில் அன்பு குறைந்திருக்கும். டயானாவைப் போன்று மேகனும் அரச குடும்பத்தில் இருந்து தூரமாக வைக்கப்பட்டிருந்திருப்பார். பின் விவாகரத்து நடைபெற்றிருக்கும். இது இன்னொரு டயானாவை பிரிட்டிஷுக்குக் காண்பித்திருக்கும்.

ஒருவேளை இளவரசர் ஹரி போன்று அன்று அவரது தந்தை இளவரசர் சார்ள்ஷும் முடிவெடுத்து பிரிட்டன் அரச குடும்பத்தில் இருந்து டயானாவுடன் வெளியேறியிருந்தால், அரச நெருக்கீடுகளை அந்த அழகுத் தேவதையிடம் இருந்து தூர வைத்திருந்தால் இன்று கனவு நாயகி கனவாகவே போயிருக்கமாட்டார்.



# வீட்டு மேய்ச்சல்

பொக்கிசன்

இண்டைக்குச் சின்னம்மாவின்ரை வீட்டு மேய்ச்சல். சின்னம்மாவின்ரை வீடு கீரிமலை அந்தியேட்டி மடத்துக்கு முன்னாலை கிடக்கு. அம்மா வெள்ளனவே போகச்சொல்லிப் போட்டா. வீட்டு மேய்ச்சலுக்கு உதவி செய்யிறதுக்கு. சின்னம்மாவின் வீட்டுக்குப் பக்கத்திலைதான் நகுலாம்பாளின் வீடு. அங்காலை கொஞ்சம் தள்ளி சபாவின் வீடு. சபாவின்ரை வீடு எங்கடை கோயிலுக்குப் போற பாதையில்ல தான் கிடக்கு. மூண்டு வீடும் பனை ஓலையாலை மேய்ஞ்ச வீடு. ரெண்டு வருசத்துக்கு ஒருக்கா மேய வேணும். போன கிழமை சபாவின்ரை வீட்டு மேய்ச்சல். நான் போய் உதவி செய்தனான். நாளைக்கு நகுலாம்பாளின் வீட்டு மேய்ச்சல். அதுக்கும் போய் உதவி செய்ய வேணும்.

சின்னம்மா எங்கடை அம்மாவுக்குச் சின்னம்மா முறை. நாங்களும் சின்னம்மா எண்டுதான் கூப்பிடுவம். இந்த வீட்டிலை சின்னம்மா, சின்னையாவோடை கோயில் மாமாவும் அத்தையும் இருக்கினம். கோயில் மாமா அம்மாவின் தாய் மாமன் . நாங்களும் மாமா எண்டு தான் கூப்பிடுவம். ரெண்டு பேருக்கும் பிள்ளைகுட்டி ஒண்டுமில்லை. சபா, சிறி ரெண்டு பேரும் வந்திட்டினம் , சூட்டியும் வந்திட்டுது, நகுலாம்பாள் லோகாம்பாள் ரெண்டு பேரும் நிக்கினம். சின்னம்மா ரெண்டு கொத்து அரிசி போட்டு சமைக்கத் தொடங்கிட்டா. மேய்ச்சல்காரர் ரெண்டு பேரும் கூரைக்கு மேலை ஏறி பழைய ஓலைகளைப் பிடுங்கி நிலத்திலை போட்டிட்டினம். இனி நாங்கள் கீழ நிண்டு ஓலைகளைத தூக்கி மேலை எறிய வேணும்.

எறிஞ்சா அவையள் எடுத்து வைச்சு இடுப்பில செருகி இருக்கிற பனம் நாராலை குத்திக் கட்டுவினம். முந்தநாள் நாகமுத்துத்தான் ஓலை வெட்டினது. முதல் நாள் ஓலை வெட்டிப்போட்டு அடுத்த நாள் ஓலையை மிதிக்க வேணும் அப்ப தான் ஓலை படியும்; அடுத்த நாள் வந்து மிதிச்சதும் நாகமுத்துதான். எங்கடை சுடலைக்கு பக்கத்தில கிடக்கிற காணிக்குள்ளை தான் ஓலை வெட்டினது. கூரை பிடுங்கினபடியால் வீடு முழுக்கக் கஞ்சலாக்கிடக்கு. சூரிய வெளிச்சமும் வருகுது. எப்பிடியும் பின்னேரம் நாலு மணிக்கிடையிலை முழுக்க மேய்ஞ்சு முடிஞ்சிடும் .முதல் மேய்ஞ்சு போட்டு பிறகு தான் முகடு கட்ட வேணும். சபா, சிறி ,நான் ,சூட்டி, நகுலாம்பாள் எல்லாரும் ஓலை எடுத்துக் குடுத்தம். லோகாம்பாள் சின்னம்மாவுக்குச் சமையலுக்கு உதவி செய்யப் போனார். இண்டைக்கு எல்லாருக்கும் சின்னம்மா வீட்டிலை தான் சாப்பாடு.



# அமுத சீத மந்தர கூட சஞ்சீவி மருந்தே வாராய் நீ வாராய்....!

சஞ்சீவியின் வரவை சந்தப்பாப் பாட்டாக்கி
விஞ்சுகின்ற வாழ்த்தாய் விதந்துரைக்க நெஞ்சமதில்
ஆனைமுகப் பரமே அடியேன் கவி சிறக்க
தேனார் தமிழை தெறி

1. கஞ்சமர் கடவுளாக காத்திடும் கண்ணனாக
நஞ்சமை நாதனாக நம்தமிழ் சிறந்துவாழ
விஞ்சிட விடியல்காட்ட வீந்தவர் விழுமம் தீர
சஞ்சீவி மருந்தே காற்றே சனி தொறும் வீச வாராய்

2. தமிழ் தாயாள் தண்ப்புற்று ஓங்கி தரணியில் தலைமை நீட
உமிழ் தரு உண்மை நேர்மை உயர்வு கண்ணியமும் காப்பும்
கமழு சஞ்சீவியாகி கருமமாய் மருந்தாய் காற்றாய்
எமிழ் கதிர் ஒளியின்சேயாய் இடம்தொறும் வீச வாராய்

3. அழிந்தவர்க்கு ஆவி நல்கும் அமுத மந்தரமும் நீயே
கழிந்தநம் கீர்த்தி மேலாய் காட்டிட கடமை என்னும்
பொழிந்திடு மழையில் தோய்ந்து புன்மைகள் நீக்கி ஆள
எழுந்திடு. ஏற்றம் எல்லாம் எமக்கருள் மருந்தே வாராய்

4. இலக்குவன் இராமன் சாய எழுப்பிடு மலையாய் வந்தாய்
விலக்கமர் சூரன் வேண்ட விரைந்த சஞ்சீவி ஆனாய்
மலக்கறு அனுமன் தாங்கு மந்தார மருந்தும் கொண்டாய்
கலக்குறு கவலைமாய காற்றென எழுந்து வாராய்

5. உத்தர திசையும் நீடி உதித்திடு கிழக்கும் நாடி
வித்தென உதித்த வீரர் விழுமியம் வீரம் பாடி
தத்துவநெறியும் தேர்ந்து தாய்மையின் பரிவும் காட்டி
சித்துவ முறையும் தேடி சிந்திட காற்றாய் வாராய்

6. சமய சஞ்சீவியாகி சாய்ந்த எம் சபலம் தீர்த்து
அமையவே வேண்டும். ஆக்கம் அணைந்திட அமுதம் கொண்ட
இமயமாய் எழுந்து. ஏற்ற உளம் தொறும் புகுந்து வீசி
சுமையினை தாங்கு நீழல் தொல் மரச் சுரமாய் சூழ்வாய்

7. கற்றவர் கலைகள் சொல்ல காவியம் கவிஞர் தீட்ட
உற்றவர் உவகை காண ஊருளார் உரத்து வாழ்த்த
நற்றவர் மொழிகள் பேச நாவலோர் மேன்மை கூற
பெற்ற சஞ்சீவியாகி பெருமைகள் பேச வாராய்

8. மருந்துபோல் மொழிக் குமரியாய் வளர்கலை மதியாய்
அருந்து தேனென அமுதென கரும்பென ஆடும்
விரிந்த தோகையாய் விடியலைக்காட்டிடும் குருகாய்
இருந்துமே தமிழ் பாடியே இதயங்கள் இணைவாய்

வாழ்த்தி வரவேற்பவர்
**கலாபூஷணம் திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி (குடாநீரூரான்)**

# அதிரடி அரங்கு

1

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கல்விப்பணிப்பாளருக்கு எதிராக ஆசிரியர் சங்கமொன்று அண்மைக்காலமாக போர்க்கொடி தூக்கியிருப்பதை எல்லோரும் அறிந்திருப்பீர்கள். ஆனால் இந்தப் போர்க்கொடிக்குப் பின்னால் பல அக்கப்போர்கள் இருப்பதாக அறிய முடிகின்றது.

இடமாற்றச் சபை கூடும் போது கல்விப்பணிப்பாளர் முன்வைத்த பட்டியலில் 44 பேரை இடமாற்றச் சம்மதித்தார்கள். ஒருவரை மட்டும் மாற்ற குறித்த ஆசிரியர் சங்கம் எதிர்த்த போதும், ஏனைய ஆசிரியர் சங்கங்கள் ஆட்சேபனை தெரிவிக்காததால், 45 பேருக்கும் இடமாற்றம் வழங்கத் தீர்மானிக்கக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தில் , தற்போது முரண்டுபிடிக்கும் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதியும் சம்மதம் தெரிவித்துக் கையொப்பம் வைத்துள்ளார். ஆனால் எல்லாம் முடிந்த பிறகு, குறிப்பிட்ட ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கக் கூடாதென்று இந்த ஆசிரியர் சங்கம் மட்டும் பிடிவாதம் பிடிக்க, வேறு வழியின்றி அவருடைய இடமாற்றம்நி றுத்திவைக்கப்பட்டது. அதன் பின்னர் இடமாற்றம் தொடர்பில் மேன்முறையீடு செய்தவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும், கல்விப்பணிப்பாளர் தன்னிச்சையாக நடக்கிறார் என்றும் சொல்லியே 'இந்த' ஆசிரியர் சங்கம் போராட்டத்தில் குதித்தது. அதன் பின்னர் சிலருக்கு இடமாற்றம் தொடர்பில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் களேபரத்துக்கு மத்தியில் கல்விப்பணிப்பாளர் தரப்பின் செயற்பாடுகள், தரவுகள் பற்றி, அதே அலுவலகத்தில் பணியாற்றும் ஒரு அதிகாரியே, 'இந்த' ஆசிரியர் சங்கத்துக்குப் போட்டுக் கொடுத்துள்ளார் என்பதும் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

எதிர்கால சந்ததியை வழிநடத்த வேண்டிய ஆசிரியர்களும், அதிகாரிகளும் இப்படிச் சுயநலத்தோடு நடப்பதும், போட்டுக்கொடுத்தல், பணி செய்யப் பின்னடித்தல், பழி வாங்குதல் என்று இறங்குவதும் ஆரோக்கியமானதல்ல.

2

பானையோடு களம் காணப்போவதாக அறிவித்திருக்கும் புதிய கூட்டணி, கருவாக முன்னரே குழப்பங்களுக்குள் தள்ளாடுவதாகத் தெரிகின்றது. குறிப்பாக நீதியின் அரசர், ஒரு சர்வாதிகாரியாக இருந்து கூட்டணியை வழிநடத்த நினைக்கிறார். சகல முடிவுகளையும் எடுக்கவும், நிராகரிக்கவும் கூடிய 'வீட்டோ' அதிகாரம் தனக்கு இருக்கும் என்று , பங்காளிகளாக இணைய விரும்பும் கட்சிகளிடம் அவர் கூறியுள்ளார். ஏற்கனவே வீட்டுக்குள் , தனி ஆவர்த்தனம் போடுவதால் தான் பலரும் உடைந்து வந்து, வீட்டுக்குப் போட்டியாக தனித் தனிக் கட்சிகளை தொடங்கி இருந்தார்கள். அவர்கள் தேர்தலின் போது நீதியின் அரசரோடு இணைந்து கொண்டால், கொஞ்ச மேனும் அரசியலில் நீடிக்கலாம் என்று நம்பியிருந்தார்கள். ஆனால், இவரும் வீட்டுக்காரரைப் போல, " நானே ராஜா, நானே மந்திரி" என நடக்க முற்படுவதால் கூட்டுக்குள் இருப்பதா, இல்லையா என்பதில் மக்கள் குழம்பிப்போயுள்ளனர்.

**- மின்னல்**

# வேர்

ந.சத்தியபாலன்

கூர்மையுற்றிருந்த மனதின் முனைப்பு, மத்தியான வெய்யி லையும் பொருட்படுத்தாமல், பரபரப்பான கடைத்தெருவில் சிவசோதிமலர் ரீச்சரை விரைந்து நடக்க வைத்தது.

ஓய்வுபெற்ற ஓர் ஆசிரியையாக இருந்த போதும், சேவையாற்றிய காலத்தில் தனித்துவமிக்க ஓர் ஆசிரியையாக இருந்திருப்பார் என எண்ணிப் பார்க்க வைக்கின்ற விதத்தில் தோற்றமளித்தார், அந்த ஊரின் மதிப்புக்குரிய திருமதி சிவசோதிமலர் கணநாதன்.

தீவிரமான யோசனையோடு நடந்து கொண்டிருந்த அவரை, வணக்கம் ரீச்சர் என்ற ஒரு பெண்ணின் குரல் தடுத்து நிறுத்தியது. தனக்கு முன்னால் பவ்வியமான புன்னகையோடு நின்று கொண்டிருந்த நடுத்தரப் பெண்ணை யார் என்று மட்டுக்கட்ட முடியாத நிலையில் தயங்கியபடியே, "வணக்கம் அம்மா, நீங்கள் ஆரெண்டு அடையாளம் காண முடியேல்ல. ரீச்சர் எண்டு சொல்லுறபடியால என்னட்ட முந்திப் படிச்சிருப்பீர் எண்டுதான் நினைக்கிறன்" என்று புன்னகையோடு கூறி நின்ற அவரை, நான் மிதிலா. மருதபுலம் மகா வித்தி யாலயத்தில படிச்சனான். ஏ.எல். வகுப்பில எங்களுக்கு தமிழும் இந்துநாகரிகமும் நீங்கள் படிப்பிச்ச னீங்கள்" என்று சொன்னாள் அந்தப் பெண். சில கணங்கள் யோசித்த ஆசிரியை சிவசோதிமலர், அவள் யாரென இனங்கண்ட மகிழ்ச்சியுடன், "அடடா எங்கட கனகசுந்தரம் மாஸ்ரரின்ர மகள் மிதிலாவா? என்னால உம்மை அடையாளம் காண முடியேல்ல. நீரும் நல்லா மாறிப்போனீர். என்ர மனசில அந்தத் துருதுருவெண்ட 17 வயதுப் பிள்ளையின்ர தோற்றம்தான் பதிஞ்சுபோய்க் கிடக்குது. இப்ப நீர் என்ன செய்யிறீர். என்னட்டை படிச்சு பல்கலைக்கழகம் போன 7 பிள்ளையளில ஒரு ஆளெல்லோ நீர்?" என்று ஆச்சரியம் மாறாத குரலில் சொன்ன தனது ஆசிரியை இடம், "நாங்கள் 7 பேரும் கம்பஸ் போக நீங்கள்தானே மிஸ் காரணம். உங்கட வழிகாட்டலிலைதான் நாங்கள் இப்ப நல்லநிலையிலை இருக் கிறம். நான் இப்ப வெள்ளவாய்க் கால் வீதியிலை இருக்கிற ஞானப்பிரகாசம் வித்தியாலய அதிபராக இருக்கிறன். என்னோட படிச்ச ஜெகதீஸ்வரி, பத்மினி, பிரியதர்சினி, குமுதினி எல்லாரும் ரீச்சர்மாராய் வெவ்வேற இடத்திலை இருக்கினம் என்று சொல்லக்கேட்ட சிவசோதிமலருக்கு மனம் நிறைந்து போயிற்று. "நல்ல சந்தோசம் அம்மா. அவையளிட்டை நான் அன்போட விசாரிச்சதாய்ச் சொல்லி விடும்... ஆசிரியர்மாருக்கு பெருமையும் நிறைவும் இதுதானே...?" என்று கூறி விடைபெற்றார் சிவசோதிமலர் ரீச்சர். பழைய ஞாபகங்களின் இழைகள் விடுபட, மீண்டும் தான் வந்த காரியம் பற்றிய நினைவுகளின் வழி தொடர்ந்தார் சிவசோதிமலர்.

அதே வீதியில் சிறிது தூரம் நடந்த சிவசோதிமலர் துஜாவந்தி நகை மாடம் என வண்ண எழுத்துக்களால் பெயர் பொறிக்கப்பட்ட நகைக்கடை முன்னால் நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு உள்ளே நுழைந்தார். "வாங்கோ, வாங்கோ. ரீச்சர் பென்சன் எடுக்கத் தொடங்கின பிறகு உங்களைக் காணக்கிடைக்கிறது வலு அருமையாப்போச்சு. வெளிக்கிடுறது குறைவு போல என உபசாரமாய் வினவியபடி தனது இருக்கையில் இருந்து எழுந்து வாசல்வரை வந்து அவரை வரவேற்றார் கடைக்கார முதலாளி முரளீதரன். "ஓம் ராசா வெளியிலவாற தேவையள் முன்னப்போல இல்லத்தானே?

இப்ப ஒரு தேவை ஏற்பட்டிருக்கு. அதுதான் வந்தனான்... "போன வருசம் பேத்திக்கு தோடு செய்விக்க வந்தனியள் போல... இப்பவும் ஏதும் நகை செய்யவேணுமோ? புது டிசைன் எல்லாம் வந்து கிடக்கு என்று தொடர்ந்தார் முரளீதரன். இல்லயில்லை. இப்ப நான் வந்த காரியம் வேற. நாலு வருசத்துக்கு முன்னம் உங்கடை அப்பாவிட்டை செய்விச்ச சங்கிலி இது, இப்ப இதை விற்க வேண்டிய தேவை வந்திட்டுது. விற்கமுடியுமோ எண்டு கேட்கத்தான் வந்தனான்" என்றபடி தனது பையைத் திறந்து சங்கிலியை எடுத்தார் ஆசிரியை. இதை ஒருக்கா விலை மதிச்சுப் போட்டு நீரே வாங்கினால் உதவியா இருக்கும் என்று கூறியபடி சங்கிலியை அவரி டம் கொடுத்தார்.



முரளீதரனிடம் நகையை விற்றுப் பணத்தைப் பெற்று வீடு திரும்பும்போது, மத்தியானம் ஒரு மணியைத் தாண்டி இருந்தது. முன்னரே பேசி வைத்திருந்தபடி சசிதரனின் வீட்டை அடைந்து, தான் வாங்கிக்கொள்ள எண்ணியிருந்த மோட்டார் சைக்கிளைப் பார்க்க விரும்புவதாக சசிதரனி டம் சொன்னார் சிவசோதிமலர். நீங்கள் சொன்னபடியெல்லாம் சேவிஸ் பண்ணி, மாத்தவேண்டியதெல்லாம் புதுசா மாத்தி வைச்சிருக்கிறன் மிஸ் என்று கூறியபடி உள்ளே இருந்த மோட்டார் சைக்கிளை வெளியே எடுத்து வந்தான் சசிதரன். அதனைப் பார்வையிட்ட சிவசோதி மலர் "இப்பிடி ஒண்டுதான் முதலிலை யும் எங்கட இவரிட்ட இருந்தது. நீரும் என்னட்டைப் படிச்சபிள்ளை. நியாயமான விலைக்குத் தருவீர் எண்டு நம்புறன்" என்ற சிவசோதி மலரிடம் "நிச்சயமாய் ரீச்சர். உங்க ளட்ட நான் அநியாய விலை சொல்ல மாட்டன். வேணுமென்டால் வேறை ஆரிட்டையும் விசாரித்துப் பாருங்கோ" என்றான் சசிதரன். "நீர் சொன்னால் சரி தம்பி எனக்கு உம்மைத் தெரியும்தானே? மோட்டார் சைக்கிளை விலைபேசி முடித்த ஆசிரியை நீர் எனக்கு ஒரு உதவி செய்யவேணும். இந்தச் சைக்கிளை வீட்டுக்குக் கொண்டு வந்து தர முடியுமா?" "அதற்கென்ன மிஸ் பின்னேரம் நாலு மணிக்கு உங்கட வீட்டிலை சைக்கிள் நிற்கும் " என்றான் சசிதரன்.

சிவசோதிமலர் ரீச்சர் வீட்டுக்கு திரும்பியபோது நேரம் இரண்டரையைத் தாண்டியிருந்தது.

பூட்டியிருந்த வீட்டின் கதவைத் தட்டியபோது தூக்கம் கலைந்து எழுந்த கணநாதன் மாஸ்ரர் கதவைத் திறந்தபடி, "எங்கே அம்மா போனனீர் ஏதோ அவசரம் என்றுபோய் எவ்வளவு நேரம்?" என்று கேட்ட தனது கணவரிடம் எதுவும் சொல்லாமல் சின்னப்புன்னகையோடு "எல்லாம் சொல்லிறன். முதலில நீங்கள் சாப்பிட்டியளா? தம்பி வந்து சாப்பிட்டவனா? என்று கேள்விகளை அடுக்கினாள். தம்பி வெள்ளனவே வந்து சாப்பிட்டிட்டுப் போட்டான். நான் இப்பத்தான் சாப்பிட்டிட்டு இதில கண்ணயர்ந்தனான். நீரும் வந்திட்டீர். சரி முதலிலை போய்ச் சாப்பிடும் என்று மனைவியைச் சாப்பிட அனுப்பினார் கணநாதன். சாப்பாட்டைத் தட்டில் போட்டுச் சாப்பாட்டு மேசையில் அமர்ந்த சிவசோதிமலரால் சாப்பிடமுடியவில்லை. முதல்நாள் வீட்டில் நடந்த சம்பவம் அவள் மனதில் படமாய் விரிந்தது.

பல்கலைக்கழக விடுமுறையான போதும் வழக்கம்போல காலையில் புறப்பட்டுப் போன மகன் பார்த்தீபன் பத்துப்பத்தரை மணிக்கெல்லாம் வீடு திரும்பிவிட்டான். தனது மோட்டார் சைக்கிளை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே வந்தவன், அம்மா நான் கொஞ்சம் நித்திரை கொள்ள வேணும். என்னை ஆரும் எழுப்ப வேண்டாம். ரெண்டு, மணிக்குத்தான் சாப்பிட எழும்புவன் என்று சொன்னபடி அறைக்குள் நுழைந்து கதவை மூடிக்கொண்டு உறங்கப் போய்விட்டான்.

அவனைக் குழப்ப விரும்பாமல் ரீ.வீ. முன்னால் படம்பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்த கணவனிடம், "இஞ்ச அப்பா, தம்பி நித்திரை கொள்ளுறான் அவனைக் குழப்பாமல் ரீ.வீச் சத்தத்தைக் குறையுங்கோ" என்றபடி இரவுச் சமையலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் சிவசோதிமலர்.

எதையோ நினைத்துக்கொண்டிருந்த கணநாதன் திடீரென எழுந்து "ஒரு அவசர அலுவலாய் உதில ஒருக்காப் போட்டு ஓடி வாறன்" என்று சொல்லியபடி வாசலில் நிறுத்தப்பட்டிருந்த பார்த்தீபனின் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அவசரமாய் வெளியேறினார்.

என்ன ஏது என்று கேட்பதற்கு முன்னரே அவர் புறப்பட்டுவிட்டார். கணவருக்கு அப்படியென்ன அவசர அலுவல், எனக்குச் சொல்லாமல் போக மாட்டாரே என்று தனக்குத்தானே சொல்லியபடி மீண்டும் சமையல் அறைக்குள் நுழைந்தார் ரீச்சர்.

தொலைபேசி மணியோசை கேட்டுத் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட பார்த்தீபன் சில நிமிடங்கள் தொலைபேசியில் பேசிவிட்டு அவசரமாய் உடை அணிந்து வெளியே வந்தான்.

நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் தனது மோட்டார் சைக்கிளைக் காணாத பார்த்தீபன், "அம்மா..., அப்பா எங்கையாவது வெளியில போட்டாரோ? என்ர சைக்கிளை காணேல்ல " என்றான் எரிச்சலுற்ற தொனியில். ஓம் தம்பி அப்பா எங்கேயோ அவசரஅவசரமாய் போனவர். எங்கேயெண்டும் சொல்லயில்லை என்றார் சிவசோதிமலர். "இந்த ஆளுக்கு இப்ப என்ன அவசரம் நான் திரும்ப ஒருக்கா கம்பஸ் போகவேண்டி இருக்கு. ஒண்டும் கேளாமல் இவர் எங்கை போனவர். றிட்டயரானால் வீட்டோட இருக்காமல் இவருக்கு என்ன உலாத்து?" வீடு திரும்பி உள்ளே வந்த கணநாதனின் காதில் மகன் கூறியது தெளிவாகக் கேட்டது. ஒரேயொரு மகன் என்று செல்லமாய் வளர்த்ததில் இப்படியாகி விட்டானா என்று கணநாத னின் மனம் குழம்பியது. "சைக்கிள் கொண்டு வந்திட்டன் தம்பி" என்று கூறியவாறு உள்ளே நுழைந்த தந்தையைக் கண்டவுடன் அவ னின் கோபம் மீண்டும் அதிகரித்தது. "உங்களை ஆர் சொல்லாமல் கொள்ளாமல் சைக்கிளை எடுக்கச்சொன்னது? நான் இப்ப அவசரமாய்ப் போகவேணும். நீங்கள் மினக்கெடுத்திப்போட்டு இப்பத்தான் கொண்டு வாறியள். பொழுது போகாமல் அங்க இங்க போறத்துக்கு என்ரை பைக்கைத் தொட வேண்டாம். ஏதும் தேவையெண்டால் நடந்துபோங்கோ என்றான் ஆவேசமாய். எல்லா வற்றையும் கேட்டுக் கொண்டும் பார்த்துக்கொண்டும் நின்ற சிவசோதிமலர் என்ன சொல்வதென்று தெரியாமல் உறைந்துபோய் நின்றார். சிறிதும் சுடுசொல் தாங்காத தனது கணவனின் இயல்பை அறிந்த அவரால் நடந்ததை மறக்க முடியவில்லை. மகனிடம் பதிலேதும் சொல்லாமல் மௌன மாய் உள்ளே வந்த கணவரின் முகத்தைப் பார்த்தபொழுது சிவசோதிமலரின் மனம் பொசுங்கிப்போயிற்று. திருமணமான நாளிலிருந்து இன்றுவரை அவரது கௌரவத்தைப் பாதிக்கும் படியாய் எதுவும் சொல்லி அறியாத சிவசோதிமலர், மகனின் இந்தச் செயலால் உள்ளூர உடைந்து போனாள். உள்ளே சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த கணவரிடம், "நீங்கள் ஒண்டும் யோசிக்காதையுங்கோ.

உவன் பார்த்தீபன் ஒரு சுடுதண்ணி எண்டு தெரியும்தானே? அவன்ர மோட்டார் சைக்கிளை இனித் தொடாதையுங்கோ. வலு கெதியிலை உங்களிட்ட முதல் இருந்த மோட்டார் சைக்கிள் மாதிரி ஒண்டு வாங்கத்தான்வேணும். மட்டு மரியாதை தெரியாத பிள்ளையளோட முட்டுப்பட்டு மனம்நோகக் கூடாது" என்று சொல்லிய மனைவியின் முகத்தை கலங்கிய விழிகளுடன் ஏறிட்டுப் பார்த்துவிட்டு மௌனமானார் கணநாதன். சில விநாடிகள் கழிந்து அவரது குரல் உடைந்து ஒலித்தது, "என்ர சோதிக்கு . மட்டும்தான் என்னை விளங்கும். நீ இருக்கிற வரைக்கும் எனக்கு ஒரு கவலையும் இல்லை ராசாத்தி என்று சொல்லி விட்டு அமைதியான கணவன் அருகில் சென்று அவரது தலையைத் தடவி புன்னகைத்தார் சிவசோதிமலர். ஒருவரை ஒருவர் உணர்ந்த அந்த இரு உள்ளங்களும் மௌனத்தில் ஆயிரம் ஆயிரம் சேதிகளைப் பேசிக்கொண்டன.

சாப்பாட்டை அளைந்தபடி உண்ணாமல் அமர்ந்திருந்த சிவசோதிமலர் எழுந்து கையலம் பிவிட்டு கணவனின் அறைக்குச் சென்றார். அவருக்காக தன்னால் வாங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் அந்த நிமிடமே வீட்டுக்கு வந்தால் நன்றாக இருக்கும் என்று அவரது மனது சொல்லிக்கொண்டது.

மட்டு மரியாதை தெரியாத பிள்ளையளோட முட்டுப்பட்டு மனம்நோகக் கூடாது என்று சொல்லிய மனைவியின் முகத்தை கலங்கிய விழிகளுடன் ஏறிட்டுப் பார்த்துவிட்டு மௌனமானார் கணநாதன். சில விநாடிகள் கழிந்து அவரது குரல் உடைந்து ஒலித்தது. என்ர சோதிக்கு மட்டும்தான் என்னை விளங்கும்.

# பொதி செய்யப்பட்ட கதி:

## வாசிக்கப்படாத ஜனநாயகம்

ந.மயூரரூபன்



எம்மிடம் பொதி செய் பண்பாட்டு முறைமையை பரவலாக்கிக் கொண்டிருக்கிற தன்மையை நாம் அறிந்தும் அறியாமலுமாய் இருக்கிறோம். இப் பொதி செய் பண்பாட்டு முறைமை (System for palud culture) எமது காலம், தளம், இடம் என்பவற்றின் இயல்பை மாற்றி விடுகிற அல்லது மயக்கி விடுகிற அடிப்படைகளால் கட்டுண்டது. இன்னொரு வகையில் இது காலம், தளம், இடம் என்பவற்றின் சுரணையை எம்மிடமிருந்து பறித்து விடுகின்ற வேலையைப் படிப்படியாகச் செய்கின்றது.

"பொதி செய்யப்பட்ட மனித உடல்கள்" என்ற பொருள்பட ஒரு கட்டுரையை வாசிக்க நேர்ந்தது. அதனடியாக இந்தப் பொதி செய் பண்பாட்டு முறைமையின் வழி உருப்பெறும் "பொதி செய்யப்பட்ட பிரதி" என்பது பொறிக்கப்பட்ட வாசிப்பை முன்னிறுத்துகிறது என்பதான பார்வையை காணத்தந்தது.

போதிக்கப்பட்ட கருத்தியல்களால் பிணைக்கப் பட்ட எமக்கு பொதி செய்யப்பட்ட கருத்தியல்கள் எவ்வித எதிருணர்வையும் தர வாய்ப்பில்லை. பொதி செய்யப்பட்ட உணவுகும் வீட்டில் தயாரித்து சுடச்சுடப் பரிமாறப்படும் உணவுக்கும் இடையிலான வித்தியாசத்தை உணரத் தெரிந்த போதும், அதனை மறுப்பதற்கான ஏதுக்களை கண்டறிந்ததில்லை. பண்பாடு என்கிற உயர் உயிரத்துவ (Super organic) வடிவம் மக்களோடு கொண்டிருக்கிற உறவும் அமைப்பு நிலையும் வரண்டு போவதற்குரிய யதார்த்தத்தையும் நாம் உணரத் தவறி விடுகிறோம்.

இன்னொரு வகையில் அமைப்பு நிலை சார்ந்து முதலாளித்துவத்தோடு பிணைந்த உலகமயமாக்கற் சந்திகளில் நாம் தரித்து நிற்கிறோம். அதிகாரம் தான் நினைத்த ஒளிச் சமிக்ஞை விளக்கு களால் தன் வயப்படுத்திக் கொள்கிறது. உடல் போல உணர்வு சூல் பண்பாடும் நினைவு கொள்வது முக்கியமாகிறது. மக்கள் விரும்புவதைப் படைப்பது அல்லது மக்களுக்குத் தேவையானதைப் படைப்பது என்கிற சொல்லாடல்கள் இலக்கியம் பிரதி குறித்து தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. இவை இலக்கியம் / பிரதி மக்களுக்கானது என்கிற இலக்கிய சார்பு நிலைப்பட்டது. இன்னொரு வகையில் இந்தச் சொல்லாடல்கள் இலக்கியத்தை / பிரதியை பொதி செய்யும் பண்பாட்டுக்குத் துணை நிற்பதாகவே அமைகிறது.

மக்களின் விருப்பத்திற்காக அல்லது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் படைக்கப்படுகிற / உருவாக்கப்படுகிற சரக்கு (Commodity) என்பதுவும் வெறும் பொருள் மட்டுமல்ல, மனிதர்களுக்கிடையிலான உறவுகளையும் குறிக்கிறது. வெவ்வேறுபட்ட பொருட்கள் எனினும் உழைப்பின் வடிவம். சரக்கினை அளவிடுகின்ற பொது வடிவம் ஒன்று உண்டு. அது பணம் மனிதர்களுக்கான தேவைகளும் சமூக இருப்பில் மனிதர்களுக்கான விருப்பும் பொதுமைப்பட்டிருக்கும் கருத்துத்தளத்தில் இலக்கியத்தை அல்லது பிரதியை வைப்பது பொருத்தமுடையதா? என்கிற கேள்வி எழுகிறது. இது ஒரு வகையில் மனிதர்கள் தனியன்களின் சேர்க்கை என்கிற யதார்த்தப் பண்புக்கு விரோதமானது . ஒவ்வொரு தனியனின் தேவையும் விருப்பும் தனித்தனியானவை என்ற போதிலும் பிரதி, தேவை, விருப்பு என்பவற்றைக் கடந்தது. அதன் (பிரதியின்) இயக்கம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றல்ல. அதனை ஒவ்வொரு வாசிப்புக் கணங்களும் தீர்மானிக்கின்றன. வெவ்வேறு கணங்களால் புதியதாக்கப்படுவன. சமூக யதார்த்தம் என்பது தன்னியல்பானது. மனிதனின் பொதுவான வாழ்க்கை முறை என்பதற்கான அதிகமான எடுத்துக்காட்டுக்கள் எம்மிடம் உள்ளன. ஆயினும் அவை எவ்வாறு மற்று முழுதான பொதுவியல்பாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது? அதிகாரம் தரும் சமூகப் படிநிலைகளின் வேறுபடுத்தல் தத்துவத்தை நாம் ஓரத்தில் தூக்கி வைத்து விடுகிறோம்.

**சமூக யதார்த்தம் என்பது தன்னியல்பானது. மனிதனின் பொதுவான வாழ்க்கை முறை என்பதற்கான அதிகமான எடுத்துக் காட்டுகள் எம்மிடம் உண்டு.**

1989 இல் பெர்லின் சுவர் இடிக்கப்பட்டபோது மக்கள் தமது விருப்பத்திற்கு எதிராக செயற்கையாகத் திணிக்கப்பட்ட கம்யூனிசத்திற்கு பிறகு, இயற்கையான முதலாளித்துவம் புத்துயிர் பெற்றதற்காக தாராளமயமாக்கப்பட்ட மேற்கத்திய உலகம் நினைத்தது. குதூகலிக்கும் மக்கள் திரள் நிறைந்த தொலைக்காட்சிக் காட்சிகள் இதனை உறுதி செய்தன. காலப்போக்கில் முதலாளித்துவ ஆட்சியில் அன்றாட வாழ்வு என்பது எந்த அளவுக்கு யதார்த்தமானது என்பதை உணர்ந்த அவர்கள் அதிர்ச்சி அடைந்திருப்பார்கள். நடைமுறையில் கருத்தியல் ஆதிக்கத்தின் பொதுமைத் தன்மை நிர்வாணமாவதை நாம் உணரத் தவறி விடுகிறோம். ஒருங்கிணைந்திருப்பதாகத் தோற்றமளிக்கும் கருத்தியல் சிதறுண்டு கிடப்பதையே நாம் காணுகிறோம். பொதுமைத்தன்மையைக் காண விளையும் கருத்தியல் தோற்றத்தின் திரட்சியில் பொதி செய்யப்பட்ட பிரதிகளின் தோற்றம் உருவாக்கத்தை எமது சூழலில் நாம் கண்டு கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக, தமிழ்த் தேசியத்தைப் பேசுகின்ற, விடுதலையை தொடரி யங்கு நிலையில் (கருத்து தளத்தில்) வைத்திருக்கின்ற எழுத்துக்கள் ஒரு வகை இன்னொரு வகையில் , இன்னமும் புலி எதிர்ப்பு அல்லது சமகாலத் தமிழ்த் தேசியத்தை எதிருணர்வில் பேசுகின்ற வகையிலான எழுத்துக்கள்

இவ்வாறான எழுத்துக்கள், ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட கருத்தியல் தள இரசனையை விருப்பை தக்கவைக்க அல்லது அதனைத் திருப்திப்படுத்துவதற்கு உற்பத்தி செய்யப்பட்ட / செய்யப்படுகின்ற பிரதிகள் குறிப்பாக, பின்னால் நின்றியக்குகின்ற அரசியல் விருப்பும், அரசியல் தெரிவும் பொதி செய்யப்பட்ட வடிவப் பிரதியாக எழுத்துக்களை விற்பனை செய்கின்றன. இதனால் ஒன்றைப் போல ஒன்றென ஒரே "போஃர்முலா" வகைப் பிரதிகளின் தோற்றம் நிகழ்கின்றன. குறித்த வகையில் அரசியல் சாயம் கொண்டவை அவ்வத் தரப்பினரால் கொண்டாடப்படுகின்றன. பாலியல் சாயம் கொண்ட எழுத்துக்கள் இன்னொரு தரப்பினரால் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு பிரதிகளும் தங்களுக்கான வெகுஜன ஆதரவுத் தளம் என்கிற மாயையில் கொண்டாடப்படுகின்றன. அவை தரும் கவர்ச்சி அவை போன்ற பொதிகளை களை கட்டச் செய்கின்றன. பிரதிகளின் சுய இயங்கியல் பொதிகளுக்குள்ளேயே அவிந்து ஆறிப் போய்விடுகின்ற எழுத்துக்கள் வாசகர்களின் வாசிப்பைக் காயடித்து விடுகின்றன. ஜனநாயகம் என்பதை எப்போதும் தவறாகவே புரிந்து வைத்திருக்கிறோம். வாசிப்பின் ஜனநாயகமும் அப்படித்தான்.

# அகலத் திறக்கப்பட்ட பல்கலைக்கழகக் கதவுகள்

ம.பா.மகாலிங்கம்

கல்வியா?செல்வமா?வீரமா?
ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா?
இதில் உயர்வென்றும்
தாழ்வென்றும் பிரிவாகுமா?

சரஸ்வதி பூசை தொடங்கிவிட்டால் அடிக்கடி ஒலிக்கும் பாடல்களில் இப்பாடலும் ஒன்று. கல்வி, செல்வம், வீரம் ஆகிய இவை எல்லாமே தனித்தனி சிறப்புக்களை உடையனவே. ஆனாலும் கல்வியின் பெருமையை காலாதிகாலமாக கவிஞர்களும் புலவர்களும் சிறப்பித்துக் கூறத் தயங்கியதில்லை.

சங்க கால மன்னர்களில் ஒருவன் ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன். தமிழக மன்னர்களை மட்டுமன்றி ஆரியப் படையினரையே போரிட்டு வென்ற பெரும் வீரம் உடையவன். முரசு முழங்குதானை மூவர் எனச் சிறப்பிக்கப்படுகின்ற மூவேந்தர்களில் ஒருவனாக இருந்ததாலும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முத்துக்கள் பெருமளவில் பெறப்பட்ட மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய நாட்டின் வேந்தன் என்பதாலும் பெரும் செல்வந்தனாக இருந்தவன். பெருவீரனும் பெரும் செல்வத்தை உடையவனுமான பாண்டிய மன்னன் வீரத்தையும் செல்வத்தையும் புகழ்ந்து பாடாமற் கல்வியைப் போற்றி ஒரு பாடலைப் பாடியுள்ளான். அப்பாடல் சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் நூற்றி எண்பத்து மூண்றாவது பாடலாக இடம்பெற்றுள்ளது. அந்தப் பாடல் இதுதான்.



உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்ப்பால் ஒருவனும் அவன்கட் படுமே.

பாடல் கூறும் விடயங்களை இனி நோக்கலாம். ஆசிரியருக்குத் தேவையான உதவிகளைச் செய்தும், தேவைப்படும் செல்வத்தைக் கொடுத்தும் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு கற்கும் போது எம்மிடம் இவர் உதவி பெற்றவர் தானே என்று அலட்சியப்படுத்தாது மிகுந்த பணிவுடையவராக இருந்து கல்வியைக் கற்கவேண்டும்.

அடுத்துக் கல்வியின் சிறப்புக்கள் கூறப்படுகின்றன. ஒரே வயிற்றில் பிறந்த பிள்ளைகளாக இருந்தாலும் கல்வியில் சிறந்த பிள்ளையிடம் தான் தாய் அதிக அன்பும் அக்கறையும் காட்டுவாள். நாட்டை ஆளும் மன்னன் கூட, ஒரே குடும்பத்திலே பிறந்த பலருள் வயதால் மூத்தவனுக்கு முன்னுரிமை கொடுக்காது கல்வியறிவாற் சிறந்தவனுக்கே முன்னுரிமை கொடுப்பான். அவன் கூறும் அறிவுரைப்படியே அரசனும் நடப்பான். முன்னோர் வகுத்த பிராமணர், சத்திரியர்,வைசியர், சூத்திரர் ஆகிய நால்வகை வர்ணப் பாகுபாடுகளில் மேல்நிலையில் உள்ளவர் பெரும்பாலும் கீழ்நிலையில் உள்ளவரைத் தேடிச் செல்ல மாட்டார். ஆனாற் கீழ்நிலையில் உள்ளவர்கள் கல்வி அறிவுடையவராக இருந்தால் கல்வி பெறுவதற்காக மேலவர் எந்த தயக்கமும் இல்லாமல் அவரைச் தேடிச் செல்வார் என்பனவே பாண் டிய நெடுஞ்செழியன் கூறிய கல்வி பற்றிய கருத்துக்களாகும். மன்னனின் கருத்துக்களிற் பெரும்பாலானவை இன்றும் பொருந்துவதாகவே உள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய பலரும் கல்வி மூலமே அவர்கள் நிலையை உயர்த்தலாம் என்று கருதியமையையும் இங்கு நினைவில் கொள்ளலாம்.



எனவே இன்றைய இளம் சமூகத்தினர் கல்வியின் பெருமையை உணர்ந்து தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கற்கவேண்டும். பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர் எண்ணிக்கையை அரசு பலமடங்கு அதிகரித்துள்ள நிலையில் கல்வியில் அக்கறை கொண்ட மாணவர்களுக்காகப் பல்கலைக்கழகக் கதவுகள் அகலத் திறக்கப்பட்டுள்ளன என்றால் அது மிகையொன்றுமில்லை.

# பிறவி திமிர்

மடிவதற்கன்றி எழுவதற்கென்றே
வீழ்பவன் நான்
ஒரு முறை எழுவதற்கு
ஒற்றைப் பனித்துளியின்
ஈரம் போதுமெனக்கு
வளம் மீந்த நிலமறிந்து வீழ்வதற்கு
நான் ஒன்றும் நெஞ்சுரமற்றவனல்ல
எவ்விடம் வீழ்ந்தாலும்
பெரு விருட்சமென எழுந்தேயாவேன்
வானை முட்டி நிற்கும்
மலை இடுக்குகளினிடை வீழ்ந்தாலும்
அதனை தகர்த்தெறிந்தெழுவேன்
அத்தனை வலிமையும்
போர்க் குணமும் உடையவன் நான்
ஏனெனில் எனக்குள் எப்போதும்
ஒரு மரத்தை
ஒரு தோப்பை
ஒரு வனத்தை
பதுக்கி வைத்திருக்கிறேன்
நீங்கள் யாருக்கேனும்
குழி தோண்ட தூபமிட்டால்
முதலில் எனக்குத் தோண்டுங்கள்
அவ்வாறு தோண்டத் தோண்ட
எனக்கென்றான பிறவித் திமிரோடு
துளிர்த்துச் சடைத்துக் கிளைத்து
எழுந்து கொண்டே இருப்பேன்

- ஜமீல்



# மௌன மொழி 1


ஒளிப்படம்: சுரேன்

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையின் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்: 31.01.2020**

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

கவிதைக்கு பரிசு 1000/=

# நீயும் நானும்

பயணங்கள் வழியேயான
குதூகலப்பொழுதில்
நீ என்னை தொலையவிட்டிருந்தாய்
ஆயர்பாடிகள் இல்லாத கிராமங்களில்
மேய்ச்சல் நிலங்கள் பற்றைகளாயின.
உனது தொடுவானம் வரைக்கும்
பயணிக்கமுடியாதவனாய்
ஒவ்வொரு பொழுதிலும்
கடலில் விழுந்தவண்ணம் இருக்கிறேன்.
இன்னுமின்னும்
விடியாத இரவுகளையே
சேமித்து வைத்திருக்கிறேன்.
உனக்கான பயணக் கப்பல்களை
பரிசளிக்கமுடியாது.
என்னிடம் ஓடங்கள் மட்டுமே உள்ளன.
நீ எறிந்து விடுகின்ற
ஒவ்வொரு நினைவுகளிலும்
நான் வாழ்ந்திருக்கிறேன்.
உனது வாவியின் அழகையும்
எனது பனங்கூடல் அழகையும்
இரசிக்க முடியாதவனே
எம்மை பிரித்திருக்கிறான்
மீண்டும் மீண்டும்
எமது இணைவு
சாத்தியமில்லாமலே போகிறது.
இப்போது உனது வாவியில் மீன்கள்
பாடல்களை மறந்தன.
எனது பனங்கூடலுக்குள்
நரிகள் ஊழையிடுகின்றன.
நான் வடக்கு
நீ கிழக்கு என்ற அடையாளங்கள்
மறந்து போவோம்.
நாம் தமிழர் என்ற
ஒரு புள்ளியில்
எல்லோரும் இணைவோம்.

கு.ரஜீவன்

# ஈகத்தின் நாள்

– குறிஞ்சி

காவியங்கள் எழுதிவிட்டு
கல்லறைக்குள் உறங்குகின்றார்

கல்லறை வரிசைகளில்
தீபங்கள் எரிகையில்–
இங்கு ஈகம் வாழ்கிறது

சந்ததியைக் காக்க
வெந்தணலில் வேகி– இங்கு
வித்துடலாய் ஆனவரே
கருவிலே புலியான காவியங்களே
கல்லறையின் வழியே கொஞ்சம் பேசுங்களேன்
கல்லறையின் மடியினில் – கார்த்திகை
தீபங்கள் எரிகையில்

விண்ணும் மண்ணும் இங்கு
அசைய மறுக்கும்
வானவில் எல்லாம் –அழகாய்
பூக்க மறுக்கும்
பூக்கள் எல்லாம் இங்கு உதிர மறுத்து
கல்லறைக்கு வழிகள் தேடும்
தலைவனின் வார்த்தையை
அன்றுதான் உலகம் கேட்கும்

மேகங்கள் வாழ்த்தும்
ஈகங்கள் நீங்கள் தான்
தெய்வங்கள் வாழ்த்தும்
தெய்வீகம் நீங்கள் தான்.





# ஒளியிழந்த வாழ்வின் பாடல்

எமக்கான சொற்கள் களவாடப்பட்ட வெளியில்
அர்த்தமிழந்து தவிக்கிறது வாழ்வு
நேற்றைய காலங்கள் நினைவு மாலைகளாக
இன்றைய தரிசனங்களில் ஒளியிழுந்து தவிக்கிறது.

எமக்கான வானம் காலமரக் கொத்தியிடம்
சிக்கிச் சின்னபின்னமாகிப்போன
எம் வாழ்வை மீட்கும் எந்த மந்திரச் சொற்களும்
எம்மிடம் இல்லை இப்போ...

சிதறிப்போன தேங்காய்களில் இருந்து மீண்டும்
தேங்காயை உருவாக்கும் கனவுகளுடன்
மாங்காய் தேசமதில் நாம்...

புலோலியூர் வேல்நந்தன்



# முடியாத தொடர் கதைகள்

யுகம் பல கடந்து வந்தும் முடியாத தொடர்கதையாய்
மீண்டும் அதே புள்ளியில் எம் வாழ்வு
வரங்களை எதிர் பார்த்தே எமக்கான
கோயிலையும் தொலைத்துவிட்டு
நடுத்தெருவில் நிற்கின்றோம் நாம்.


அகலிகையின் கல் மனமாய் எம் மனங்கள் யார் திருவார்
எமக்கான சாப விமோசனத்தைப் பாண்டவரே
சூதாடும் இந்த விளையாட்டில் பார்த்திருக்க மட்டுமே
சபிக்கப்பட்டு இருக்கிறோம் நாம்.

# பணியில் எழுக சஞ்சீவியே !

சஞ்சீவி என்றால் உயிர் தரும் மருந்து !
சஞ்சீவி எனவே திகழ்ந்திட வருக !
அஞ்சாமை என்பது உந்தன் அழகு !
எஞ்ஞான்றும் எங்கள் பணியில் எழுக !

அரசியல் பண்பாடு அறிவியல் ஆன்மீகம்
அருங்கலை கலாசாரம் கல்வி கமமுடன்
பொருளியல் நன்னெறி எனும் பல துறைகளில்
பெரும் பணி ஆற்றிட மலர்க சஞ்சீவி நீ !

*நாயன்மார் கட்டு ப. மகேந்திரதாசன்*





சஞ்சீவி

## மாணவர் கழகம்

1. முழுப்பெயர்: ..............................
2. முகவரி: ..............................
..............................
3. பிறந்த திகதி: ..............................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................
6. தொலைபேசி இலக்கம்: ..............................

.............................. ..............................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி பாஸ்போட் அளவுப் புகைப்படத்துடன் அனுப்பி வைப்பதன் மூலம் எமது உதயன் சஞ்சீவி மாணவர் கழகத்தின் அங்கத்தவர்களாக நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

# பனிக்கால பராமரிப்பு!



- குளிர்காலத்தில் சவர்க்காரம் பயன்படுத்தக் கூடாது. கடலைப்பருப்பு, பயத்தம்பருப்பு, தோடம் பழத்தோல் மூன்றையும் சம அளவு எடுத்து உலரவைத்து அரைத்துக்கொள்ளவும். குளிக்கும்போதும், முகம் கழுவும் போதும் சவர்க்காரத்துக்குப் பதிலாக இந்தப் பொடியை மட்டுமே உபயோகிக்கவும்.
- இதே பொடியை சாதம் வடித்த கஞ்சியில் குழைத்து மறுபடி அடுப்பில் வைத்து லேசாகச் சூடாக்கி வெது வெதுப்பான சூட்டில் தலைக்குத் தேய்த்து அலசலாம்.
- ஒலிவ் ஒயிலில் முட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்து அடித்து முகம் மற்றும் கழுத்தில் தடவி 15 நிமிடங்கள் ஊறியதும், வெதுவெதுப்பான நீரில் கடலை மாவுக் கலவையை உபயோகித்துக் கழுவவும்.
- தேன், நெய், தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய், மஞ்சள் தூள் ஆகியவற்றைக் கலந்து பாத வெடிப்புகளில் தடவி வந்தால் பனிக்கால பாத வெடிப்பு மறையும்.
- உதடுகளுக்கு பாலாடை அல்லது கிளிசரினும் பன்னீரும் கலந்த கலவை அல்லது வெண்ணெய் இந்த மூன்றில் ஒன்றைத் தினமும் தடவி மென்மையாக மசாஜ் செய்து வரலாம். உதடுகளின் வறட்சியும் வெடிப்பும் மறையும்.
- கிளிசரினும் பன்னீரும் கலந்த கலவையை இரவில் கால் விரல்களுக்கு இடையே தடவிக்கொண்டு படுத்தால் பனிக்காலத்தில் வரும் சேற்றுப்புண் குணமாகும்.

# பெண்மை போற்றுவோம்



தாயின் கருவின் தங்கப் புதையல்
தரணியில் பிறந்த பெண்மகள்.

பள்ளிப்பாதையில் பை சுமந்த மெய் ஆவி.
பயின்ற நன் அறிவு மேதாவி.


கால ஓட்டத்தில் கரை தேடிய காகிதக் கப்பல்.
அவள் கடமை என அடுப்பங்கரை விம்மல்.

கண் இமைக்கும் நேரத்தில் கல்யாணம்.
களவு போனது அவள் கற்பனை உயர் ஞானம்.

நிலைக்காத கனவுடனும் நினைக்காத வாழ்வுடனும்
தினம் தினம் அவள் மனதில் சதிராட்டம்.

பெண்மை பொக்கிஷங்களின்
வாழ்வும் வயதும் வலுவற்றுக் கிடக்கின்றது
தொன்மை மறந்த சமுதாயத்திடம்
உண்மை உணர மறுக்கிறது உலகம்

# தர்ஜினி: சாதனைகளால் உயர்ந்தவள்




ஞா.பிரகாஸ்

உலகின் மூத்த வலைப்பந்து வீராங்கனையாகவும் இலங்கை தேசிய வலைப்பந்து அணியின் நட்சத்திர வீராங்கனையாகவும் இருப்பவர் "உலகின் சிறந்த சூட்டர்" எனும் பெருமையுடைய யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தைச் சேர்ந்த தர்ஜினி சிவலிங்கம். இவர் ஆசியாவின் உயரமான வலைப்பந்து வீராங்கனையாகவும் வலம் வந்து கொண்டிருப்பவர். இப்போது 40 வயதை எட்டிப்பிடித்திருக்கும் தர்ஜினி, பல்வேறுபட்ட சாதனைகளுக்குச் சொந்தக்காரியும் கூட. கடந்த ஆண்டு இடம்பெற்ற வலைப்பந்து உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வுபெறக்காத்திருந்த தர்ஜினிக்கு இம்முறை தென்கொரியாவில் இடம்பெறவிருக்கும் வலைப்பந்து ஆசியக் கிண்ணத் தொடரில் வாய்ப்பு வழங்கப்பட்டு 20 பேர் கொண்ட இலங்கை அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

15 ஆண்டுகளாக வலைப்பந்து உலகில் ஜொலித்துவரும் தர்ஜினி, 2005ம் ஆண்டு இலங்கை தேசிய அணியில் இடம்பிடித்து, அதே ஆண்டு இடம்பெற்ற வலைப்பந்து ஆசியக் கிண்ணத் தொடரில் அறிமுகமானார். இந்த ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி 3ம் இடத்தை பிடித்திருந்தது. அதனைத் தொடர்ந்து 2009ம் ஆண்டு இடம்பெற்ற வலைப்பந்து ஆசியக் கிண்ணத் தொடரில் சம்பியன் வென்ற இலங்கை அணியில் இடம்பிடித்து தனது திறமையை நிரூபித்தார்.

தனது திறமையால் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்ட தர்ஜினி, 2011ம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரில் பங்குபற்றி தனது உச்சபட்சத் திறமையைக் காண்பித்து 290 கோல்களை போட்டு வலைப்பந்து ரகசிகர்களை தன்வசப்படுத்தினார். இந்தத் திறமையின் அடிப்படையில் உலக அளவில் சிறந்த கோல்போடுபவராகத் (வேர்ல்ட் பெஸ்ட் சூட்டர்) தெரிவாகி, இலங்கைக்குப் பெருமை சேர்த்திருந்தார். 2012ம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை வலைப்பந்து அணிக்கு தலைவராகவும் அவர் நியமிக்கப் பட்டார். அவர் தலைவராக இருந்த போது இலங்கை அணி பங்குபற்றிய ஆசியக் கிண்ணத் தொடரில் 2 ஆம் இடத்தைப் பெற்றிருந்தது. இப்படிப் பல திறமைகளை கொண்ட தர்ஜினி 2014ம் ஆண்டு இடம்பெற்ற ஆசியக் கிண்ணத் தொடரை தொடர்ந்து அணியில் இருந்து புறக்கணிக்கப்பட் டார். இவ்வாறான நிலையில் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தேசிய அணியில் இடம்பிடிக்கும் வாய்ப்பு அவரைத் தேடி வந்தது. 2018ம் ஆண்டு தர்ஜினியின் மீள் வருகையுடன் அதே ஆண்டு நடைபெற்ற ஆசியக் கிண்ணத்தை ஒன்பது ஆண்டுகளின் பின்னர் இலங்கை அணி கைப்பற்றி அசத்தியது.

இதனைத் தொடர்ந்து உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட வரலாற்றில் கூடிய வயதில் களம் காணும் முதல் வீராங்கனை என்ற பெருமையுடன் 2019ம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் பங்குபற்றிய தர்ஜினி, இலங்கை அணி சார்பில் உலக சாதனை ஒன்று உட்பட மேலும் சில சாதனைகளை நிகழ்த்தி இலங்கைக்கும் தமிழ் மக்களுக்கும் பெருமை தேடிக் கொடுத்தார். அவர் இந்த உலகக் கிண்ணத் தொடரின் போட்டி ஒன்றில் தனி நபர் சாதனையாக 77 கோல்களை போட்டுச் சிறப்பித்தார். இது வலைப்பந்தாட்டத்தில் அவரால் பெறப்பட்ட உச்சபட்ச தனி நபர் சாதனையாகும். அது மட்டுமல்லாது வலைப்பந்தாட்ட வரலாற்றில் உலக் கிண்ணத் தொடர் ஒன்றில் அதிக கோல்களை போட்ட வீராங்கனையாக 348 கோல்களை எடுத்த உலக சாதனையும் அவர் வசமுண்டு. இதற்கு முன்னர் இந்த உலக சாதனை ஜமேக்காவை சேர்ந்த ஜானியல் பொவ்லர் (304 கோல்கள்) வசமிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டில் திறமைக்கு வயது ஒரு தடை இல்லை என்பதை உலகக் கிண்ணத்தில் 40 வயதுடைய வீராங்கனையாகப் பங்குப்பற்றி நிரூபித்துக் காட்டிய தர்ஜினி இலங்கை சார்பில் இதுவரை 100 சர்வதேசப்போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இலங்கை அணிக்காக அதிக போட்டிகளில் விளையாடிய மூன்றாவது வீரராகவும் தர்ஜினி உள்ளார். இந்த நிலையில் தான் இந்த ஆண்டு இடம்பெறும் ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றும் நோக்கில் தர்ஜினிக்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது. தர்ஜினியின் ஓய்வுத் தொடராக இந்த ஆசியக் கிண்ணப் போட்டி அமையலாம்.

01



கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டுவருகின்றது

# கிராமத்து மனிதர்கள்...

இராகன்

காலம் தப்பிய மழை வரும் காலங்களிலெல்லாம் 'பெண்டுகள் கந்தியானை'த்தான் நினைவுகளில் மீட்டுக்கொள்வார்கள் எம் ஊரவர்கள்.

வயல்கள் விளைந்து நிறைமாதக் கர்ப்பிணியாய் கொத்துக்கொத்தான கதிர்களைத் தாங்கிச்சுமந்து அசைந்து நிற்கும்போது எப்போதாவது எதிர்பாராத விதமாக காலந்தப்பிய மழை மேகம் வழிப்பறிக் கொள்ளையர்போல திடீரென வந்து சூழும் தருணங்களில் 'பெண்டுகள் கந்தியான்' வயல் வெளிக்கு வந்துவிடுவார்கள். பரந்துகிடக்கும் வயலின் நாலாபுறமும் புதிதாய் வரவழைத்த பக்குவத்தோடு நடப்பார். கையில் ஒரு தேங்காய் அதன்மேல் ஏற்றிவைக்கப்பட்ட சூடம். வலது கையில் சூடமேற்றிய தேங்காயைத் தாங்கி இடது கரத்தினால் எரிந்து கொண்டிருக்கும் சூடத்தின் சுவாலை காற்றில் அணைந்துவிடாது அணைத்துப் பிடித்த வாறு பச்சைக் கம்பள வயலில் குறுக்கு மறுக்காகக் கிடக்கும் கிளித்தட்டுக் கோடுகளான வரம்புகளில் பக்திபூர்வமாக பவ்வியமாய் நடப்பார். எப்போதும் பரவச நிலையில் இருக்கும் கந்தியானை அந்த வேளைகளில் காண்பவர்கள் தங்கள் கண்களை நம்பமுடியாமல் ஒரு முறை கசக்கிவிட்டுக்கொள்வார்கள். அவ்வளவு பவ்வியமான பக்தி. வரம்புகள் யாவற்றிலும் நடந்து முடிந்ததும் சூடமேற்றிய தேங்காயை இரண்டுகைகளாலும் தாங்கி தலைக்குமேல் உயர்த்தி வானத்தை அண்ணாந்து பார்த்து வாயில் ஏதோ முணுமுணுப்பார். பின்னர் செல்வச் சந்நிதியான் இருக்கும் திசையைப் பார்த்து வேண்டுதல் செய்தபடி எரிந்து கொண்டிருக்கும் சூடம் அணைந்துவிடும்படி தேங்காயைச் சிதற அடிப்பார். அடித்துத் தலை நிமிரும்போது அவரது கண்கள் கசிந்திருக்கும். கண்ணூறுகள் போய்விட்டதாக பெருமூச்சு வெளிப்படுத்துவார்.

சூல்கொண்டு வந்த மேகம் சல்லடையாய் சூரியக் கதிர்களை பச்சை வயல்மீது வடியவிடும். கர்ப்பிணிக் கதிர்கள் காற்றில் மெல்ல அசையும். வயற்கரைக் குளத்தில் பட்டையில் தண்ணீர் மொண்டு தலையில் ஊற்றிக் கொண்டு கந்தியான் செல்வச் சந்நிதி நோக்கி நடக்கத் தொடங்குவார். இவ்வளவுக்கும் அந்தப் பரந்து கிடக்கும் பச்சை வயலின் ஒரு குழி நிலந்தன்னும் கந்தியானுக்குச் சொந்தமில்லை. அத்தனை வேண்டுதலும் பிறர் நலத்துக்கானது. சுயநலம் எதுவுமில்லா மனிதர்கள் அவர்கள். விதைப்பவன், விளைவிப்பவன், அறுப்பவன், உண்பவன் என்று அனைவரின் வாழ்வுக்குமான வேண்டுதல் அது.

கந்தவனம், பெண்டுகள் கந்தியான் என்ற பட்டம் பெற்றது சுவாரசியமானது. எப்போதும் மடியில் கனக்கும் வெற்றிலைச் சரை அவரைச் சபைகளில் மையத்தில் திகழவைத்தது. வெற்றிலை போடும் பெண்கள் மத்தியில் அவர் ஒரு விநியோக மையம். தாம்பூலம் தரித்துவிட்டால் போதும் வார்த்தைகளில் ஒரு நளினம். பேச்சிலே ஒரு குழைவு. நடையிலே ஓர் அசைவு. ஊரில் நடக்கும் சபை சந்தியில் சமையல் பகுதியில் கந்தவனம் இல்லாத சபையே இல்லை எனலாம். சோற்றுக்கிடாரத்தின் அருகில் நிற்றல், தேங்காய் துருவுதல், அடுப்பு வைத்தல் என்று சபைகளில் ஆண்களுக்கு எத்தனையோ வேலைகள் காத்துக்கிடக்க மரக்கறி வெட்டுதல், அரிசி கிளைதல், தேங்காய்ப்பால் புளிதல் என்று நீளும் அவரது ஆர்வங்கள் யாவும் நீண்ட காலத்துக் கணிப்பில் அவரை பெண்டுகள் கந்தியானான் என்று ஆக்கிவிட்டது.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அது அந்தப் பிரதேசத்து உற்பத்தி முறைகளுடன் சம்பந்தப்பட்டது என்று அறிவுஜீவித்தனமாகக் கூறிவிட லாம். வயலில் அறுவடைக்காலம் வந்துவிட்டால் கந்தவனத்தார்தான் அதிகாரி. வயல் சொந்தக்காரன்கூட இரண்டாம் பட்சம்தான். இன்றைய பரிபாசையில் அவுட் சோசிங்" என்பார்களே! அவரும் ஓர் 'அவுட் சோசிங்' கொம்பனிதான். அறுவடை செய்யவும், அறுத்தவற்றை ஒழுங்காக அடுக்கவும், அடுக்கியவற்றை அள்ளிக் கூட்டிக்கட்டி நெல்லடியல் செய்யும் இடத்துக்குத் தலையில் காவி நடக்கவும், அடித்த நெல்லைத் தூற்றவும், பொலிந்த நெல்லை அளந்து மூடை கட்டவும் கூலிக்காக வரும் பெண் தொழிலாளர்களுக்கு தலைச்சன் அவர்தான். தான் எப்போதுமே நெல்லடிப்பவர் என்ற பிரதான பதவியைத் தக்கவைத்துக்கொள்வார்.

பெண்களால் கொண்டுவந்து குவிக்கப்படும் அறுவடை செய்த உப்பட்டிகளை"(அறுவடை செய்த நெல்மணிகளோடு கூடியதாறு) தனியொருவராய் கடமானால்"(தும்பினால் அல்லது வைக்கோலால் திரித்த கயிறு) சுற்றி இறுக்கி விசுக்கி அடிக்கும் போது பொலியும் நெல்லில் ஒரு மணிதானும் விரிக்கப்பட்ட தறப்பாளிலிருந்து"(சாக்குகளால் பொருத்தித் தைக்கப்பட்ட நிலவிரிப்பு) விலகிப்போகாது பார்த்து கொண்டு "பொலியை"(பொலிந்துவரும் நெற்குவியல்) பேணுவதும் அவ்வப்போது கூலிப் பெண்கள் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டித் தட்டிக்கேட்பதும், அந்தப் பெண்களின் மத்தியில் அவரைத் தன்னிகரில்லாத் தலைவனாக்கியிருந்தது. அவருக்குத் தொழில் ஒழுக்கக் குலைவால் உண்டாகும் விசுவாமித்திரக் கோபத்துக்கு ஆளாகாது தப்பித்துக்கொள்ள கூலிப்பெண்கள் யாவரும் எடுக்கும் பிரயத்தனங்கள் பல. கோபம் மிகுந்துவிட்டால் அவர் பிரயோகிக்கும் தூசணை அஸ்திரங்கள் மராமரம் ஏள்துழைக்கும்.

வயல் அறுவடையோடு தொடர்புடைய உப தொழில்கள் பலவற்றில் பெண்டுகள் கந்தியான் தன் வாழ்வையே இணைத்திருந்தார். குல்லம்(நெல் தூற்றும் சுளகு) இழைத்தல், தட்டுப்பெட்டி(அறுவடைப் படையல் செய்யும் தட்டையான அகலமான பனையோலைப் பெட்டி), தட்டுவம்(வயலில் படையலுக்காகவும் குழைசோறு சாப்பிடவும் பயன்படுத்தும் தட்டையான ஓலைப் பெட்டி) இழைத்தல், கடமான் பின்னுதல், படங்குப்பாய் பின்னுதல் முதலான வேலைகளைத் தனது வீட்டில்வைத்தே பின்னிச் சேகரித்து அறுவடைக்காலத்தில் விற்று, அதனால்வரும் சிறிய வருமானத்தைத் தன் பிழைப்பு ஊதியத்துக்காக சிறுகச் சிறுகச் சேர்த்துவைப்பார். தன்னோடு வயலில் வேலை செய்யும் பெண்களின் அவசியமான குடும்பத் தேவைகளுக்கு கடன் கொடுத்தும் உதவி செய்வார்.

கந்தவனத்தார் தன்னுடைய தோற்பையுடன் புறப்பட்டுத் திரும்பிவரும்போது வாங்கிவரும் வாடிக்கையான இரண்டு போத்தல்கள் உள்ளே போனதன் பின்னர் அவர் ஆம்பிளைக் கந்தியானாக உருவெடுக்கும் முதன்மையான தருணங்களில் ஒன்று. சின்னண்ணன் வீட்டுக் கள்ளு....." என்ற காத்தவராயன் கூத்துப் பாடலைப் பாடத்தொடங்கிவிட்டால் கந்தியானுக்குள் ஆண் புகுந்துவிட்டதைப் புரிந்து விடலாம். ஆனால், வயலில் நெல்லடியலில் ஈடுபடும் நாட்களில் அன்றைய நாள் முழுவதிலும் தோற்பையைத் தூக்காமலேயே அவருள் ஆண் புகுந்துவிடுவான். அவ்வளவு தொழில் கரிசனை விசுவாசம்.

என்னதான் 'பெண்டுகள் கந்தியான்' என்று பட்டப்பெயர் சொன்னாலும் கந்தவனத்தாரைப் பெருமைப்படுத்தியே ஊர் பேசியது. நாளாந்த வாழ்க்கையைச் சரியாக நடத்துவதில் சிரமப்படும் பெண்களின் குடும்பங்களுக்காக வருமானம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வைப்பதற்காக வயல் தொழிலில் தனக்குள்ள அனுபவத்தையும் அதிகாரத்தையும் அவர் பயன்படுத்துவதை எல்லோருமே வியந்து பேசி வந்தார்கள். பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வாதாரம் குறித்து வியக்கவைக்கும் திட்டங்கள் தீட்டப்படும் இன்றைய காலத்துக்கு கந்தவனத்தார் ஒரு படிப்பினையைத் தருகிறார் என்பதை என் அறிவு ஒத்துக்கொள்ளத் தயாராகிவிட்டது.

# யாழ் .மாநகர சபையின் வரலாறு

(1906 - 1949)



ந.பரமேஸ்வரன்



யாழ்ப்பாணம் இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாகவும், தமிழர்களின் தலைநகரமாகவும் இருந்த போதிலும். இலங்கையில் மாநகராட்சிமன்றங்கள் செயற்படத் தொடங்கி எண்பத்துமூன்று வருடங்களின் பின்னரே யாழ்ப்பாணத்துக்கு மாநகர அந்தஸ்து கிடைத்தது. கொழும்பு,கண்டி மாநகரசபைகள் 1866 ஆம் ஆண்டே செயற்படத்தொடங்கி விட்டன.

காலிக்கு 1867 ஆம் ஆண்டு மாநகர அந்தஸ்துக் கிடைத்தது. யாழ்ப்பாணத்தில் 1907 ஆம் ஆண்டு தான் உள்ளூராட்சிச்சபை உருவாக்கப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே 1949 ஆம் ஆண்டு தான் யாழ்ப்பாணத்துக்கு மாநகர அந்தஸ்துக் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி நிர்வாகம் நடைபெறுவதை அப்போது யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த சேர்.உவில்லியம் துவைனம் (Sir.William Twynam) விரும்பவில்லை.

1896ஆம் ஆண்டுவரை அரசாங்க அதிபராகப் பதவி வகித்த இவர் தனது பதவிக்காலம் முடிவடையும் வரை யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி நிர்வாகத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தார். 1903 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபராகப் பதவியேற்ற ஜே.பி.லூயிஸ் (J.P.Louis) 1.2.1904 இல் யாழ்ப்பாணத்துக்கு உள்ளூராட்சிச்சபை தேவையெனச் சிபாரிசு செய்தார். இதனையடுத்து 1898 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட உள்ளூராட்சிச்சட்டத்தின் கீழ் 1905 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச்சபை அமைப்பதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியது.



**10.11.1905**

10.11.1905 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச்சபை அமைப்பது தொடர்பான அறிக்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

**1906**

1906 ஆம் ஆண்டு அப்போது அரசாங்க அதிபராக இருந்த எப்.எச். பிறைஸ் (F.H.Price) முதல் தடவையாக யாழ்ப்பாண உள்ளூராட்சிச்சபைத் தலைவராக நியமிக்கப் பட்டார். யாழ்ப்பாண நகரசபைக்கு மாநகர அந்தஸ்து கிடைக்கும் வரை அரசாங்க அதிபரே உள்ளூராட்சிச்சபைக்கும் தலைவராக விளங்கினார். இந்தக்காலப்பகுதியில் யாழ்ப்பாண உள்ளூராட்சி நிர்வாகம் உள்ளூராட்சிச்சபை (Local Board) எனவும், நகரசபை (Urban Council) எனவும் அழைக்கப்பட்டு வந்தது.

**14.12.1907**

14.12.1907 அன்று யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக உள்ளூராட்சித்தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் எஸ்.தம்பையாபிள்ளை, ஆறுமுகம். கதிரவேலு, அரியரத்தினம்.சபாபதி (Sam Sabapathy) ஆகியோர் 1908,1909 ஆகிய இரண்டாண்டு காலப்பகுதிக்கு உத்தியோகப்பற்றற்ற (Un Official Members) அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக விளங்கிய அரசாங்க அதிபர் (Official Member) உத்தியோகபூர்வ அங்கத்தவராயிருந்தார்.

(இன்னு:ம் வரும்)



# தமிழ் மக்களுக்கு இப்பொழுது தேவை உபதேசங்களோ போதனைகளோ அல்ல முன்னுதாரணங்களே

நிலாந்தன்

இந்து மதத்தில் ஒரு சமூகச் செயற்பாட்டு கோட்பாடு உண்டு. அதை 'சுதர்மா' என்று அழைப்பார்கள். அதாவது சுய தர்மம். அந்தக் கோட்பாட்டின்படி ஒருவர் தன் தொழிலையே வழிபாடாகச் செய்யலாம். தன் தொழிலையே ஒரு தவமாகச் செய்யலாம். ஒரு தியானமாகச் செய்யலாம். ஒரு தொண்டாகச் செய்யலாம். ஒவ்வொருவரும் அவரவருக்குரிய தொழில்சார் கடமைகளை ஆகக் கூடிய பட்சம் அர்ப்பணிப்போடு செய்ய வேண்டும். அதைத் தொழிலாகவும் செய்யலாம் அதேசமயம் குறிப்பிடத்தக்க அளவு விகிதம் அதைத் தொண்டாகவும் செய்ய வேண்டும்.

அவ்வாறு ஒருவர் தனக்குரிய தொழில்சார் சமூகக் கடமையைத் தொண்டாகச் செய்தால் அதுதான் அவருடைய தியானம். அதுதான் அவருக்குத் தவம். அது தான் அவருடைய வழிபாடு. அது தான் அவருடைய சுதர்மா.

எந்த ஒரு சமூக செயற்பாட்டைச் செய்யும் பொழுது உனக்கு தெரியாமலேயே சக்தி பெருகி வருகிறதோ அது தான் உனக்குரிய சுதர்மா. எது ஒன்றைச் செய்யும் பொழுது புதிது புதிதாக உனக்குள் படைப்புச் சக்தி வற்றாமல் ஊற்றெடுக்கிறதோ அதுதான் உனக்குரிய சுதர்மா. எது ஒன்றைச் செய்யும் பொழுது ஊணின்றி உறக்கமின்றி செய்யக் கூடியதாக இருக்கிறதோ, எது ஒன்றைச் செய்யும் பொழுது உனக்குக் களைப்பு வருவதில்லையோ, அதுதான் உனக்குரிய சுதர்மா. எது ஒன்றை செய்யும் பொழுது உன்னைத் தேடி புதிது புதிதாக நல்ல நண்பர்கள் வருகிறார்களோ அதுதான் உனக்குரிய சுதர்மா. எது ஒன்றைச் செய்யும் பொழுது உன்னோடு உள்ள கெட்டவர்கள் விலகி ஓடுகிறார்களோ அது தான் உனக்குரிய சுதர்மா. இவ்வாறு சுதர்மா கோட்பாட்டில் கூறப்படுகிறது.

இதன்படி ஒரு மருத்துவரை எடுத்துக் கொண்டால். அவர் அதைத் தொழிலாகச் செய்யட்டும். ஆனால் வாரத்தில் ஒரு நாளையாவது அதைத் தொண்டாகச் செய்வதற்கு ஒதுக்க வேண்டும். மருத்துவ உதவிகள் கிடைக்காத கிராமங்களுக்குச் சென்று அதை அவர் செய்யலாம். பெரிய செலவில் மருத்துவ ஆலோசனைகளை பெறுவதற்கு முடியாதிருக்கும் ஏழைகளை நோக்கி அவர் போகலாம். அவர் மருத்துவத்தை ஒரு தொண்டாக செய்யும் போது அந்த இடத்தில் நோயாளர்கள் மத்தியில் அவர் ஒரு முன்னுதாரணமாக மாறுவார். ஒரு தலைவராக மாறுவார். அவர் எந்த அரசியலைப் பின்பற்றுகிறாரோ அந்த அரசியலை அவரை மதித்துப் போற்றும் மக்களும் பின்பற்றுவார்கள்.

ஒரு வழக்கறிஞரை எடுத்துக் கொள்வோம். அவர் அதைத் தொழிலாக செய்யட்டும். அதேசமயம் தொண்டாகவும்செய்ய வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் நிறைய வழக்கறிஞர்கள் உண்டு. அவர்களில் அநேகமானவர்கள் நிறைய உழைக்கிறார்கள். ஆனால் அதன் மூலம் அவர்கள் பெற்ற பணத்தையும் பிரபல்யத்தையும் அவர்கள் அரசியலில் முதலீடு செய்ய முயல்கிறார்கள். மாறாக தமது தொழிலை ஒரு தொண்டாகச் செய்யும் ஒரு வழக்கறிஞரை அவரால் பயனடையும் மக்கள் போற்றுவார்கள். அவர்களைப் பொறுத்தவரை அந்த வழக்கறிஞர் ஒரு முன்னுதாரணம். அவர் பின்பற்றும் அரசியலை அந்த மக்களும் பின்பற்றக் கூடும்.

ஆசிரியராக இருக்கும் ஒருவர் அதை தொழிலாகச் செய்யும் அதேசமயம் அதை ஒரு தொண்டாகவும் செய்ய வேண்டும். தொழிலாகவும் தொண்டாகவும் செய்யும்போது இரண்டுக்குமிடையே ஒரு சமநிலை பேணப்பட வேண்டும்

அதைத் தொண்டாகச் செய்யும்போது அதில் இயன்ற அளவுக்கு அர்ப்பணிப்போடும் விசுவாசத்தோடும் தியாக சிந்தையோடும் அவர் இருக்க வேண்டும். அவ்வாறு முன்னுதாரண மாக திகழும் ஓர் ஆசிரியர் மாணவர்களுக்கு தாயாகவும் தகப்பனாகவும் இருப்பார். அவர் சொல்வதை பிள்ளைகள் கேட்பர். பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர் ஒரு முன்னுதாரணம் மட்டுமல்ல வழிகாட்டி மட்டுமல்ல அவர் ஒரு தலைவரும் ஆவார். ஓர் ஆசிரியர் எப்படி முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்பதற்கு ஒரு கதை கூறப்படுவதுண்டு. ஒரு தகப்பன் தனது மகன் சாப்பிடும் பொழுது சோறு சிந்துவதைத் தடுப்பதற்கு முயற்சித்தார். ஆலோசனைகளின் மூலமோ அல்லது பயப்படுத்தியோ அவனைத் திருத்த முடியவில்லை. எனவே பள்ளிக்கூடத்தில் மிகவும் மதிக்கப்படும் ஓர் ஆசிரியரிடம் சென்று மகனைத் திருத்துமாறு வேண்டினார். இது நடந்து சில நாட்கள்



ஆகிவிட்டன. மகன் திருந்தவில்லை. சில கிழமைகள் ஆகிவிட்டன மகன் திருந்தவில்லை. ஒருநாள் தகப்பன் மகனிடம் கேட்டார் "உன்னுடைய ஆசிரியர் உனக்கு ஏதாவது சொன்னாரா?" "இல்லையே எதுவும் சொல்லவில்லை. நீங்கள் ஏதாவது அவரிடம் சொன்னீர்களா?'' என்று மகன் கேட்டான். "இல்லை இல்லை" என்று தகப்பன் சமாளித்து விட்டார்.

ஆனால் மகனோ தொடர்ந்தும் சாப்பிடும் பொழுது உணவை சிந்திக் கொண்டே இருந்தான். தகப்பனும்பொறுத்திருந்து பார்த்தார். சில மாதங்கள் ஆகிவிட்டன. மகன் திருந்தவில்லை. தான் வீடு தேடிச் சென்று கேட்டுக் கொண்ட பின்னரும் அந்த ஆசிரியர் மகனைத் திருத்தவில்லையே என்று தகப்பன் கவலைப்பட்டார். மேலும் சில கிழமைகள் கழிந்தன.

ஒரு நாள் திடீரென்று மகன் சாப்பிடும் போது சோறு சிந்துவதை நிறுத்தினான். தகப்பனுக்கு ஆச்சரியம் எப்படித் திடீரென்று நிறுத்தினாய்? என்று கேட்டார். "சேர் சொல்லித் தந்தவர்" என்று மகன் சொன்னான். "அப்படி என்றால் உன்னுடைய ஆசிரியர் உனக்கு இப்பொழுதுதான் இதைக் கேட்டவரா இதற்கு முன் இதுபற்றி எதுவும் சொல்லவில்லையா?" என்று தகப்பன் கேட்டார். "இல்லை" என்று மகன் சொன்னான். தகப்பன் உடனே கிளம்பி ஆசிரியரிடம் சென்றார். மகனைத் திருத்தும்படி உங்களை நான் கேட்டுச் சில மாதங்கள் ஆகிவிட்டன. இன்றைக்கு தான் அவனுக்கு அதைக் கற்பித்திருக்கிறீர்கள் ஏன் இவ்வளவு காலம் எடுத்தீர்கள்?

அதுக்கு ஆசிரியர் சொன்னார் "சோறு சிந்தாமல் சாப்பிடு என்று அவனுக்குப் படிப்பதற்கு முதலில் நான் சோறு சிந்தாமல் சாப்பிட்டுப் பழக வேண்டும். நான் வாழாத ஒரு பழக்கத்தை மற்றவர்களுக்குக் கற்பிக்க முடியாது. மற்றவர்களுக்கு கற்பிக்கப்படும் எதுவும் அவ்வாறு கற்பிப்பவரால் வாழ்ந்து காட்டப்பட வேண்டும். நானும் சோறு சிந்திச் சாப்பிடுபவன் தான். எனவே சிந்தாமல் சாப்பிடுவது எப்படி என்று கற்பதற்கு எனக்கு இவ்வளவு காலமும் எடுத்தது. நான் வாழ்ந்து கற்ற ஒன்றை உங்களுடைய மகனுக்குச் சொல்லிக்கொடுத்தேன். அந்த போதனையில் ஒரு வாழ்க்கை இருந்தது. செய்முறை இருந்தது. முன்னுதாரணம் இருந்தது. எனவே அதற்கு ஒரு சக்தி இருந்தது. அது உங்கள் மகனையும் பற்றிக் கொண்டது" என்று.


இதுதான் முன்னுதாரணம். இதுதான் விழுமிய உருவாக்கம். மற்றவர்களுக்கு கற்பிக்க முயலும் எவரும் முதலில் தமது வாழ்க்கையை ஒரு பாடமாக வாழ்ந்து காட்ட வேண்டும். இதுதான் சுதர்மா. செய்யும் தொழிலே தெய்வம் எனப்படுவதும் இதுதான்.

எனவே ஒவ்வொருவரும் தனக்குரிய தொழில்சார் சமூகக் கடமையை ஒரு தொண்டாக செய்யும் பொழுது அவருக்கான அந்த சமூகத் தளத்தில் அவர் ஒரு முன்னுதாரணமாக மாறுவார். ஒரு விழுமிய உருவாக்கியாக மாறுவார். ஒரு தலைவராக மாறுவார்.

இப்படித்தான் உள்ளூர்த் தலைவர்களை உருவாக்க வேண்டும். இவ்வாறு கிராம மட்டத்தில் உருவாக்கப்படும் தலைவர்கள் பின்னர் நகரத்துக்கும் மாவட்டத்துக்கும் மாகாணத்திற்கும் முடிவில் தேசிய மட்டத்துக்கு அதற்கும் அப்பால் சர்வதேச மட்டத்திற்கும் மேலெழுந்து விடுவார்கள்.

எனவே தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்யும் தலைவர்கள் வேண்டும். தொழிலை ஒரு சமூகச் செயற்பாடாகச் செய்யும் முன்னுதாரண மாணவர்கள் வேண்டும். அவ்வாறு தன் தொழில்சார் தளத்தில் செயற்பாட்டாளராகவும் தொண்டராகவும் இருப்பவரே மெய்யான தலைவர். தமிழ் மக்களுக்கு இப்பொழுது தேவை உபதேசங்களோ போதனைகளோ அல்ல. முன்னுதாரணங்களே.

**ஒவ்வொருவரும் தனக்குரிய தொழில்சார் சமூகக் கடமையை ஒரு தொண்டாக செய்யும் பொழுது அவருக்கான அந்த சமூக தளத்தில் அவர் ஒரு முன்னுதாரணமாக மாறுவார். ஒரு விழுமிய உருவாக்கியாக மாறுவார். ஒரு தலைவராக மாறுவார். இப்படித்தான் உள்ளூர்த் தலைவர்களை உருவாக்க வேண்டும்.**





தில்லைநாதன் கோபிநாத்

**க**டந்த 15 ஆண்டுகளாக ஈழத்தின் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளில் நூலக நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. அதன் தன்னார்வ இயக்குநர்களில் ஒருவரான தில்லைநாதன் கோபிநாத் சஞ்சீவிக்கு வழங்கிய நேர்காணலின் முதற்பகுதி இதுவாகும்.

# எமது வரலாற்றை நாங்கள்தான் ஆவணப்படுத்த வேண்டும்

நேர்கண்டவர்: நிரோஷா தீரன்

**கேள்வி: கடந்த பதினைந்து ஆண்டுகளாக நூலக நிறுவனம் ஈழத்தின் ஆவணக் காப்பகமாகச் செயற் பட்டு வருகிறது. நூலக நிறுவனத்தின் வளர்ச்சி பற்றிக் கூறமுடியுமா?**

**பதில்**: நாம் அதுவரை பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் ஒரு தன்னார்வக் கூட்டுச் செயற்பாடாக ஈழத்து நூல்களை இணையமேற்றும் நோக்கத்துடன் 2005 தையில் நூலக நிறுவனத்தைத் தொடங்கினோம். அப்போது நூலகத் திட்டம் என்ற பெயரில் இருந்தது. ஆரம்பத்தில் தட்டெழுதியே நூல்களை இணைத்தோம். 2006இல் மின்வருடி (ஸ்கான்) ஆவணங்களை இணைக்கத் தொடங்கியதால் சஞ்சிகைகள், பிரசுரங்கள், பத்திரிகைகள், மலர்களையும் ஆவணப்படுத்த முடிந்தது. ஆரம்பத்தில் தன்னார்வமாகவே எல்லாப் பங்களிப்புக்களும் அமைந்தன. 2006இல் நிதியைப் பயன்படுத்தியும் செயற்றிட்டங்கள் தொடங்கின. 2007இல் முதற் தடவையாக நிதிச் சேகரிப்பு நடந்தது; அலுவலகம் அமைத்தோம். 2008இல் நிறுவனமாகச் செயற்படலானோம். 2009இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஆவணப்படுத்தல் தொடங்கியது. 2010இல் நூலக நிறுவனம் பதிவுசெய்யப்பட்டது.

2011இல் நிறுவனத்துக்கான வியூகத் திட்டமிடல் நடந்தது. நிறுவனத்தில் அடுத்த பத்து ஆண்டுகளில் நடந்த பாய்ச்சலுக்கான அடிப்படையாக அந்தத் திட்டமிடல் அமைந்தது. 2011இல் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் ஆவணப்படுத்தல் தொடங்கியது. 2012இல் பள்ளிக்கூடம் செயற்றிட்டம் ஆரம்பமானது. 2013இல் முதலாவது தமிழ் ஆவண மாநாடு பெருவெற்றி பெற்றது. 2013இல் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் அமைக்கப்பட்டது; வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொடங்கப்பட்டது. 2014இல் மலையகத்தில் ஆவணப்படுத்தல் தொடங்கியது. இவை முதற் பத்து ஆண்டுகளில் நூலகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்.

**கே: அதன் பின்னர் நூலகம் எப்படிச் செயற்பட்டு வருகிறது?**

**ப**: 2016இலிருந்து யாழ்ப்பாணத்தை நடுவமாகக் கொண்டு செயற்படத் தொடங்கினோம். யாழ்ப்பாணப் பத்திரிகைகளை ஆவணப்படுத்தும் பெரிய செயற்றிட்டம் தொடங்கப்பட்டது. பல்லூடக ஆவணப்படுத்தலுக்கான பணிகளும் தொடங்கின. 2017இல் ஆவண அக வலைத்தளம் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து நூலக நிறுவனம் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியது.

அதாவது எழுத்து ஆவணங்களைத் தாண்டி ஒலிப் பதிவுகள், காணொளிகள், புகைப்படங்கள், எண்ணிம ஆவணங்கள் எனச் சகலவகையான பல்லூடக ஆவணங்களையும் இணைக்கக்கூடிய முழுமையான ஆவணக் காப்பகமாக நூலக நிறுவனம் மாறியது. தனித் தனியாகச் சொல்வதானால் அது மிக நீண்டுவிடும். குறிப்பாக வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் தொடங்கப்பட்டமை, பிரித்தானிய நூலகத்தின் ஆதரவுடன் ஏட்டுச் சுவடிகளை ஆவணப்படுத்தும் மற்றுமொரு பெரிய செயற்றிட்டம் தொடங்கப்பட்டமை, தொழிற் கலைகளை ஆவணப்படுத்தும் செயற்றிட்டம் விக்கிப்பீடியாவுடன் இணைந்து தொடங்கப்பட்டமை, ஆய்வுப் பொருட் சேகரங்கள் தொடங்கப்பட்டமை ஆகியவற்றைச் சொல்லலாம். 2017இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலும் ஆவணப்படுத்தத் தொடங்கினோம்.

2018இல் யாழ்ப்பாணப் பாடசாலைகளை ஆவணப்படுத்தினோம். 2019இல் திறந்த கல்வி வளங்கள் செயற்றிட்டம் தொடங்கப்பட்டது. மட்டக்களப்பில் நிரந்தர அலுவலகம் அமைக்கப்பட்டது. 2019 இறுதியில் அதாவது 15 ஆண்டுகளில் 73,000 எழுத்து ஆவணங்கள் (25 இலட்சம் பக்கங்கள்) மற்றும் 11,000 பல்லூடக ஆவணங்கள் என 84,000 ஆவணங்களை எட்டியுள்ளோம்.

**கே: நூலக நிறுவனச் செயற்பாடுகளில் உங்கள் பங்களிப்புக்கள் பற்றியும் கூறுங்கள்?**

**ப**: என்னுடைய பங்களிப்பு என்றால் நூலக நிறுவனம் தொடங்கப்பட்ட காலம் முதல் வியூகத் திட்டமிடல், சேகர முகாமைத்துவம், வளர் சேகரிப்பு, தகவற் கட்டமைப்பு, செயற்றிட்டத் திட்டமிடல், களப்பணி ஒருங்கிணைப்பு, பாதீடு, கணக்கியல், தொடர்பாடல் போன்றவை சார்ந்து பங்களித்து வருகிறேன். வாழ்க்கை வரலாற்றுக் கலைக்களஞ்சியம், ஓலைச்சுவடிகள் செயற்றிட்டம், யாழ்ப்பாணப் பத்திரிகைகள் செயற்றிட்டம், வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் ஆகியவை நான் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்த செயற்றிட்டங்களாக உள்ளன. ஆவணப்படுத்தலை கள ஆய்வுப் பயணங்களின் அடிப்படையில் விரிவுபடுத்துவதில் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளேன். வாய்மொழி வரலாற்றை ஓர் ஆவணப்படுத்தும் வழிமுறையாக அறிமுகப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளேன் என நம்புகிறேன்.

**கே: வாய்மொழி வரலாறுகளை ஏன் அறிமுகப்படுத்த வேண்டி இருந்தது? அதன் முக்கியத்துவம் பற்றிக் கூற முடியுமா?**

**ப**: வரலாறு எனும்போது மன்னர்களே நினைவுக்கு வருகிறார்கள். அல்லது அரசியல் தலைவர்கள். அந்த அளவுக்கு தலைவர்களின் அதிலும் குறிப்பாக வெற்றி பெற்றவர்களின் வரலாறுகளே எமது சூழலின் வரலாற்று எழுத்தியலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இலக்கிய வரலாறுகளும் ஓரளவு உள்ளன. அரசு, அரசியல், இலக்கியத்துக்கு வெளியே கலை, சமூக, பண்பாட்டுத் தளங்களில் வரலாற்று ஆய்வுகளோ எழுத்துக்களோ அரிது. அவற்றுக்கான தரவுகள் மிக அரிது.

ஆனால் ஒவ்வொரு குடும்பத்துக்கும், நிறுவனத்துக்கும், ஊருக்கும் வரலாறுகள் இருக்கிறது. அவர்களது நம்பிக்கைகளுக்கும், சடங்குகளுக்கும் வரலாறுகள் இருக்கின்றன. இசை, நடனம், ஓவியம், நாடகம் என ஒவ்வொரு கலைக்கும் வரலாறு இருக்கிறது. இங்கே நான் குறிப்பிடுவது பொதுவான வரலாறுகளை அல்ல. ஒவ்வொரு பிரதேசத்துக்குமான தனித்துவமான கலை வரலாறுகளைக் குறிப்பிடுகிறேன். இது போலவே பொருளாதார வரலாறு, விளையாட்டு வரலாறு, சமய வரலாறு, சூழலியல் வரலாறு, உணவு வரலாறு என்று சொல்லிக் கொண்டே போகலாம். கொத்து ரொட்டி இப்போது



தமிழர் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது. அதன் வரலாறு பற்றி ஏதும் நூல்களைக் கண்டிருக்கிறீர்களா? ஆனால் பீட்சா போன்ற உணவுகள் பற்றி ஆங்கிலத்தில் வரலாற்று நூல்கள் பல உள்ளன.

ஆனால் திடீரெனப் புறப்பட்டுப் பலநூறு தலைப்புக்களில் வரலாற்று நூல்களை எழுதிவிட முடியாது. அதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான தரவுகளோ, வளங்களோ, ஆளணியோ எமது சமூகத்தில் இல்லை. விரிவான தரவுகளைச் சற்று இலகுவாகத் திரட்டிக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாக வாய்மொழி வரலாறுகள் இருக்கின்றன. சாதாரணமாக ஒருவருக்கு நூறு பக்கங்களில் ஒரு நூலை எழுதுவதற்கு மாதக் கணக்கில் நேரம் தேவைப்படும். அத்துடன் எல்லோருக்கும் நூல்களாகத் தமது அனுபவங்களை எழுதும் திறமையோ வாய்ப்போ இருப்பதில்லை. ஆனால் வரலாற்றுணர்வுள்ள ஓர் வாய்மொழி வரலாற்று ஆய்வாளரால் சில மணிநேரங்களில் ஒருவரது வாழ்வின் அனுபவங்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளமுடியும். அது ஒரு நூலுக்குச் சமனான தகவல்களை உள்ளடக்கும்.

வாய்மொழி வரலாறு என்பது அதன் பெயர் குறிப்பிடுவதுபோல வாய்மொழிமூலம் சொல்லப்படும் வரலாறுதான். வாய்மொழி வரலாறுகள் நேர்காணல் மூலம் செய்யப்படுகின்றன. ஆனால் நேர்காணல்கள் எல்லாம் வாய்மொழி வரலாறுகள் அல்ல. வரலாற்றுப் பதிவு செய்கிறோம் என்ற உணர்வுடன் அதற்கான முறைமைகளைப் பின்பற்றி வாய்மொழி வரலாறுகள் பதிவு செய்யப்பட வேண்டும். அதாவது ஆய்வு பூர்வமாகத் திட்டமிட்டு மனிதர்களின் அனுபவத்தையும் அறிவையும் வரலாற்றையும் பதிவுசெய்து கொள்ளுதல்.

வாய்மொழி வரலாறுகள் மூலம் தனிநபர் வாழ்க்கை வரலாறுகளைப் பதிவு செய்யலாம். அல்லது ஒரு விடயப்பரப்பினை எடுத்து அது தொடர்பான வரலாறுகளைப் பதிவு செய்யலாம். விடயப்பரப்பு எனும் போது குடும்ப வரலாறுகள், பிரதேச வரலாறுகள், பாடசாலைகள் உள்ளிட்ட நிறுவன வரலாறுகள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. அல்லது ஏனைய கலை, சமூக, பண்பாட்டு வரலாறுகளாகவும் இருக்கலாம். அல்லது குறிப்பிட்ட காலப்பகுதிகள் தொடர்பான அரசியல் வரலாறுகளாகவும் கூட இருக்கலாம்.

வரலாறு என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தது மட்டுமல்ல. இன்றைய நிகழ்வுகள் நாளை வரலாறு தான். சமகால வரலாற்றைப் பதிவுசெய்வது தொடர்பான அவசரமான விழிப்புணர்வு தேவைப்படுகிறது. சமகால வரலாற்றைப் பதிவு செய்வதில் வாய்மொழி வரலாறுகள் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. எமது வரலாற்றை நாம் தான் ஆவணப்படுத்த வேண்டும்.

**கே: நூலக நிறுவனம் இதுவரை எப்படிப்பட்ட வாய்மொழி வரலாறுகளை ஆவணப்படுத்தியுள்ளது?**

**ப**: வாய்மொழி வரலாறுகளைப் பதிவு செய்வது தொடர்பான எனது தேடல் 2011இல் தொடங்கியது. ஆவண அகம் வலைத்தளம் உருவாக்கப்பட்ட பின்னரே அதனை ஒரு செயற்றிட்டமாக முன்னெடுக்க முடிந்தது. நூலக நிறுவனத்தில் வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் என்ற செயற்றிட்டத்தைத் தொடங்கினோம். தமிழில் இது ஒரு முன்னோடி முயற்சியாக அமைந்தது.

இதுவரை 400க்குக் அதிகமான வாய்மொழி வரலாறுகளைப் பதிவு செய்துள்ளோம். இவற்றில் பெரும்பாலானவை வாழ்க்கை வரலாறுகள். 10 நிமிடப் பதிவுகள் முதல் 10 மணித்தியாலங்களைத் தாண்டிய மிக நீண்ட பதிவுகள் வரை இவற்றில் உள்ளடங்குகின்றன. பத்து மணிநேரப் பதிவு எனக்கூறும்போது அவை பல நாட்களில் எடுக்கப்பட்டவை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இவை தவிர, குறித்த விடயம் சார்ந்த வாய்மொழி வரலாறுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சஞ்சிகை ஆசிரியர்கள் சஞ்சிகை வெளியிட்ட அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டன. நாடகக் கலைஞர்களின் அனுபவங்கள் பதிவாகியுள்ளன. கோயில்களின் தல வரலாறுகள் வாய்மொழி மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். வாழ்க்கை வரலாறுகள் பதிவு செய்யப்படுகையில் எம்மையறியாமல் துறைசார் வரலாறுகளும் பதிவாகின்றன. எடுத்துக் காட்டாக வவுனியாவில் பல் வாழ்க்கை வரலாறுகள் பதிவு செய்யப்பட்டன. அந்த வரலாறுகளை அடுத்தடுத்துக் கேட்ட போது வயலில் சூடடித்தல் தொடர்பான விரிவான சித்திரத்தினைப் பெற முடிந்தது. ஒரு நாவல் வாசிப்பது போலிருந்தது. நூல்கள் போன்றவையாக எழுதும்போது விடுபட்டுப் போகின்ற எவ்வளவோ தரவுகள் வாய்மொழி வரலாறுகளில் விரிவாகக் கிடைக்கின்றன.

வாய்மொழி வரலாறுகளின் இன்னொரு முக்கியத்துவம் என்னவென்றால் ஆளுமைகளை வாழும்போதே ஆவணம் செய்வதும் கொண்டாடுவதுமாகும். அண்மையில் காலமான குமாரதேவன், சிதம்பர திருச்செந்திநாதன், சாமிஜி போன்ற பலரை வாழும் காலத்திலேயே ஆவணப்படுத்தினோம். ஒருவர் காலமாகிய பிறகு முகநூலில் புகைப்படங்கள் தரவேற்றுவதாலும் அவர் வல்லவர், நல்லவர் என எழுதுவதாலும் என்ன பயன்? அவர்கள் வாழும்போதே ஆவணப்படுத்தி அவர்களைக் கொண்டாடும் வாய்ப்பை வாய்மொழி வரலாறுகள் தருகின்றன. ஒவ்வொரு குடும்பமும், நிறுவனமும், ஊரும் ஊக்குவித்துச் செய்ய வேண்டிய பணியாக இது உள்ளது.



# உயர்தரத்துக்கு பின்னரான உயர் கல்வி

## கவனத்துடன் அணுகவேண்டியது காலக் கடமை

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப் படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளிவரவுள்ளது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.

இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அறிமுகம்

உயர்ந்த கனவுகளுடனும் இலச்சியங்களுடனும் ஆரம்பமாகும் ஒரு பிள்ளையின் கல்வி வாழ்க்கையின் தொடக்க நிலையான பாலர் கல்வியில் விதைக்கப்படும் கல்வி விதைகளின் விளைச்சலை அறுவடை செய்யும் கல்வி முறைமையாக அல்லது களமாகக் கருதத்தக்கது உயர்தரத் துக்குப் பின்னரான உயர் கல்வி என்பது குறிப்பிடத்தக்கது. மேம்பட்ட நிலையிலான இலட்சிய நோக்கங்களைத் தவிர்த்து ஒரு சாதாரண மனிதனின் கல்வியின் பிரதான நோக்கமாகவிருப்பது, எதிர்காலத்தில் பொருளாதார நெருக்கடியற்ற வாழ்க்கையொன்றை அமைத்துக் கொள்வதே என்பதை மறுப்பதற்கில்லை. இத்தகைய பொருளாதார நெருக்கடியற்ற வாழ்க்கையைத் தீர்மானிப்பது ஒருவரது தொழில் வாழ்க்கையே. தொழில் வாழ்க்கையைப் பிரதானமாகத் தீர்மானிப்பது ஒருவர் பெற்றுக்கொள்ளும் உயர்கல்வியே ஆகும்.

தனக்குப் பொருத்தமான உயர்கல்வி வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளத் தவறும் ஒருவர், தனது தொழில் வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்வது உட்பட பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய வராகின்றார். பொதுவாகவே உயர்தரத்தைத் தாண்டும் வரை கல்வி முறைமைகள் பாடசாலைக் கல்வி மற்றும் இலவசக் கல்வி முறைகளுக்குட்பட்டதான பொதுமைப்பட்ட நிலையில் இருந்தபோதும், உயர்தரத்துக்குப் பின்னரான கல்வி அவ்வாறானதொரு பொதுமைப்பட்ட நிலையை தன் பல பரிமாணங்களில் கொண்டிருப்பதில்லை. அத்துடன் கற்றல் வாய்ப்புக்களை உரிய முறையில் தெரிவு செய்வது தொடர்பான நெருக்கடிகளும் ஒப்பீட்டளவில் உயர்தரத்துக்கு முன்பாகக் குறைவாகவே காணப்படுகின்றது. தொகுதிப்பாடத்தெரிவுகளுக்குள் தனக்குரியதைத் தெரிவு செய்யும் மட்டுப்பட்ட தெரிவு நெருக்கடியே உயர் தரத்துக்கு முன்னர் இருப்பதுடன் அந்தத் தெரிவுகள் கனதியான செல்வாக்கை மாணவரின் எதிர்காலம் குறித்து செலுத்து வதுமில்லை. இருந்தபோதும் உயர்தரக் கல்வித் தெரிவும் உயர்தரத்துக்குப் பின்னரான உயர் கல்வித் தெரிவும் மிகவும் கவனமாக அணுகப்பட வேண்டியவை. அவற்றுள்ளும் உயர்கல்விப் பாதை என்பது மிகவும் கவனமாகத் தெரிவு செய்யப்பட்டாலேயே வாழ்க்கைப் பயணம் இடர் அற்றதாக அமையும்.

### உயர்கல்வி வாய்ப்பைத் தீர்மானிக்கும் காரணிகள்

அறிவு திறன் மனப்பாங்கு அடிப்படையில் மாணவர்களின் பல்வகைத் தன்மை, மாணவர்களின் பொருளாதார பலம், உயர்தரத்தில் அவர்கள் பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் என்பவற்றின் அடிப்படையில் உயர்தரத்துக்கு பின்னரான அவர்களின் கல்வியின் செல்நெறி தீர்மானிக்கப்படுகின்றது. குறிப்பாக, இலங்கையைப் பொறுத்தவரையில் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி எனும்போது உயர்தரப் பேறு பேறுகளின் அடிப்படையிலான பல்கலைக்கழக கல்வியே முக்கியத்துவம் பெறுகின்றது. இருந்தபோதும் பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்பு என்பது அனைவருக்கும் கிடைப்பதில்லை. க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் பத்துச் சதவீதத்தை அண்மித்த எண்ணிக்கையானவர்களுக்கே அரச பல்கலைக்கழகங்களில் இலவசக் கல்வி மூலம் உயர்கல்வியைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கிடைக்கின்றது.

பல்கலைக்கழகக் கல்வியைத் தவறவிட்ட அல்லது தவிர்த்த குறித்த ஒரு தொகுதியினர் ஆசிரியத் தொழில் வாழ்க்கைக் கனவுடன் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்குள் உட்புகுவதும் இலங்கையில் ஒரு பொதுவான நடைமுறையாக உள்ளது. இவர்களது எண்ணிக்கையும் ஒப்பீட்டளவில் குறைவானதே. இத்தகைய நிலையில் பெரும்பாலான மாணவர்கள் உயர்தரத்துக்குப் பின்னர் என்ன செய்வது எத்தகைய கல்வி முறைமைக்குள் தம்மை உட்படுத்திக் கொள்வது என்பது குறித்துப் பூரண தெளிவற்றவர்களாகவேயுள்ளனர். இருந்தபோதிலும் அனைவருக்கும் இலவசக் கல்வி மூலமான பல்கலைக்கழக கல்வியை பெறமுடியாத நிலையுள்ள போதும் பல்கலைக்கழக கல்விக்கு ஒத்த தன்மையுடைய அல்லது அதற்கும் மேலான பல்வேறுபட்ட கற்றல் வாய்ப்புகள் தற்போதைய திறந்த கல்வி உலகச் சூழலில் அதுவும் குறிப்பாக இலங்கையில் நாம் வாழும் பிரதேசங்களை அண்மித்தே இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும் போதிய விழிப்புணர்வு இன்மையாலும் உரிய தகவல்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வதில் உள்ள நெருக்கடிகளாலும் பலமாண வர்கள் இத்தகைய வாய்ப் புகளைத் தவற விடுகிறார்கள்.

குறிப்பாக பெற்றோர்களின் கல்வியறிவு மட்டம், உயர்கல்வி தொடர்பான அவர்களின் விழிப்புணர்வு, பெற்றோர்களின் பொருளாதார பலம் என்பனவும் பல்கலைக்கழக கல்வி தவிர்ந்த உயர்கல்வியை பிள்ளைகள் பெற்றுக்கொள்வதையும் அவற்றை நோக்கி வழிப்படுத்தப்படுவதையும் தீர்மானிக்கும் காரணிகளாக உள்ளன. அத்துடன் தமிழர் பிரதேசங்களில் கல்வி வழிகாட்டலுக்கான சேவை மனப்பாங்குடன் கூடிய நிலையங்களுக்கான தட்டுப்பாடுகளும் பிராந்தியத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் கல்வியியலாளர்கள் இவ் விடயம் குறித்து எடுக்கும் அக்கறையின் மட்டம் குறைவாகவி ருப்பதும் எமது பிரதேச மாணவர்கள் தமக்குப் பொருத்தமான உயர்கல்வி வாய்ப்புக்களைத் தவற விடுவதற்கான இதர காரணங்களாக அமைகின்றன.

> பெற்றோர்களின் கல்வியறிவு மட்டம், உயர்கல்வி தொடர்பான அவர்களின் விழிப்பு ணர்வு, பெற்றோர்களின் பொருளாதார பலம் என்பனவும் பல்கலைக்கழக கல்வி தவிர்ந்த உயர்கல்வியை பிள்ளைகள் பெற்றுக்கொள்வதையும் அவற்றை நோக்கி வழிப்படுத்தப்படுவதையும் தீர்மானிக்கும் காரணிகளாக உள்ளன.



அத்துடன் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவுடன் பாடசாலைக்கும் மாணவர்களுக்குமான தொடர்புகள் அறுந்து போதிலும் பொருத்தமான வகையில் தொடர்புகளைப் பேணுவதற்கு ஏற்ற பொறிமுறைகளைப் பாடசாலைகள் கொண்டிராமையும் மாணவர்களுக்கான உயர்கல்வி குறித்த வழிகாட்டுதல்களை வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்வதில் பலவீனங்களைத் தோற்றுவிப்பனவாக உள்ளன. இத்தகைய அடிமட்டப் பலவீனங்களைக் களைவது என்பது மிகவும் அவசியமானது.

அத்துடன் சில உயர்கல்வித் துறைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பான தப்பான அபிப்பிராயங்களும் எமது பிரதேச மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பைத் தவறவிடுவதற்கான காரணங்களாக அமைகின்றன. வடக்கு மாகாணத்தை குறிப்பாக யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி அரசாங்கத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவிலேனும் தொடர்புபட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் தற்போது ற் பாட்டு நிலையிலுள்ளன. அதனை விட அரச அங்கீகாரம் பெற்ற தனியார் உயர்கல்வி நிறுவனங்களும் கணிசமான அளவிலே உள்ளன. இருந்தும் எமது வடபகுதி மாணவர்கள் எவ்வளவு தூரம் இவற்றை பயன்கொள்கின்றனர் என்பது கேள்விக்குரியதே.

### பொருத்தமான உயர்கல்வியின் அவசியம்

வடக்கை மையப்படுத்தி இளையோர் வேலை வாய்ப்பின்மை பெரும் சவாலாக இருப்பதற்கான பிரதான காரணிகளுள் ஒன்றாகவும் உயர்கல்வி வாய்ப்புக்களைத் தவறவிடுகின்றமை அல்லது பயன்படுத்தாமையைக் குறிப்பிட முடியும். அத்துடன் பொருத்தமற்ற அல்லது தொழில்கொள்வோரின் தேவைகளுக்கு ஏற்ற பொருத்தமான உயர்கல்வியைப் பெற்றுக்கொள்ளாமையும் வேலையற்ற பிரச்சினைக்கான மற்றுமொரு காரணியாகவுள்ளது. குறிப்பாக பல்கலைக்கழகங்களில் இருந்தும் உயர் தொழில்நுட்ப கற்கை நிறுவனங்களிலிருந்தும் வெளியேறிய பட்டதாரிகள் வேலையற்று இருப்பதற்கான காரணமாக இதனைக் குறிப்பிட முடியும்.

மேலும், எதிர்காலத்தில் தேசிய அபிவிருத்தியில் ஒரு முக்கிய கேந்திரநிலை யமாக யாழ்ப்பாணம் அல்லது இலங்கையின் வட பகுதி அபிவிருத்தி பெறும் வாய்ப்பு நிலைகள் உள்ளன.

அத்தகைய அபிவிருத்தி முயற்சிகளின் ஊடாகக் கிடைக்கும் வேலைவாய்ப்புக்களை எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பெற்றுக் கொள்ளல் அவசியமானது. இதற்குத் தக்கவிதத்தில் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி குறித்துப் பொருத்தமான வகையில் வழி காட்டுதல் அவசியமானது.

குறிப்பாகத் தகுதிப்பாடுடைய உயர்கல்வி நிறுவனங்கள் குறித்தும் அவற்றின் கற்கைநெறிகள் குறித்தும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படைத் தகைமைகள் மற்றும் நுட்பங்கள், உத்திகள் குறித்தும் எமது பிராந்தியத்தின் இளையவர்கள் விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டும். இத்தகைய விழிப்புணர்வு பல வழிகளில் செய்யப்பட வேண்டியதாகவுள்ளது.

போருக்குப் பின்னராக மீண்டெழும் ஒரு சமூகம் என்ற அடிப்படையில் துரிதமான மீள்எழுச்சிக்கும் அத்துடன் சமூகக் கட்டுமான விருத்திக்கும் ஏற்ற விதத்தில் எமது அடுத்த தலைமுறையின் உயர்கல்வி வாய்ப்புக்கள் அமையவேண்டும். இவை குறித்தான பல் பக்க பரிமாணம் கொண்ட விடயங்களை தொடர்ந்து வரும் வாரங்களில் ஆராய்வோம்.

(தொடரும்)

# 2009 யுத்தம்: 2019 அரசியல்

## தோற்றுப்போன தமிழர்

ஓய்வு பெற்ற பேராசிரியர்
சுமணசிறி லியனகே,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தமிழாக்கம்: ந.பரமேஸ்வரன்

**2015** இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் ஒரு ஜனநாயகப் பரிசோதனை: 2019இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் ஒரு பின்னோக்கிய பரிசோதனை என்று சொல்லலாம். 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் ஒரு புரட்சி என்று சொன்னால், 2019 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் ஒரு பதில் புரட்சி.

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு அறிமுகம் செய்யப்பட்ட போது கொழும்புத் தமிழர்கள் (புத்திஜீவிகள்) "இந்த அரசியல் யாப்பு சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பானது" என்று சொன்னார்கள். அப்போது நான் சொன்னேன் "இந்த அரசியல் யாப்பினால் சிறுபான்மையினருக்கு பாதுகாப்புஇல்லை" என்று. இந்த அரசியல் யாப்பினால் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இல்லையென்று நான் அப்போது சொன்ன கருத்து இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

2019 இல் நடைபெற்ற தேர்தலில் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்கள் ஓரணியாக நின்று சஜித் பிரேமதாசாவுக்கு வாக்களித்துள்ளனர். மறுபுறத்தில் சிங்கள பௌத்தர்கள், பிக்குமாரின் ஆதரவுடன் கோத்தாபய ராஜபக்சவுக்கு ஒன்று திரண்டு வாக்களித்துள்ளனர்.

எனது முச்சக்கரவண்டிச் சாரதி அறிவுபூர்வமான ஒரு ஆள். பொதுவாக தேசியம் கதைக்கும் அரசியல்வாதிகளைப்பற்றி வக்கிரமான ஜோக்குகளைச் சொல்லிக்கொண்டிருப்பார். அவரிடம் 2019 தேர்தல் முடிவுகள் பற்றிக் கேட்டேன். அவர் சொன்னார் "சேர், 2009 ஆம் ஆண்டு கோத்தபாய யுத்தகளத்தில் தமிழர்களைத் தோற்கடித்தார். சரியாக 10 ஆண்டுகளின் பின்னர் தமிழர்களை அரசியல் ரீதியாக அதே கோத்தாபய தோற்கடித்துள்ளார்; இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியம் முறியடிக்கப்பட்டுள்ளது " என்றார்.


*(2019 ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக 'சிலோன் ருடே' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கிய வடிவம் இது)*



வரலாற்றுப்படை 1

தில்லைநாதன் கோபிநாத்

# யார் இந்தச் சிதம்பரப்பிள்ளை?



இற்றைக்கு 132 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள். 1888 ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி; புதன்கிழமை; மாலை நேரம்.

வட்டுக்கோட்டையில் ஒரு வீடு. அது ஓர் அதிபரின் வீடு. அந்த வீட்டிற்குள் மேள தாளங்களுடன் பெருவாரியான மக்கள் நுழைகின்றனர். அவர்கள் ஆசிரியரும் அதிபருமான அப்பெரியவரின் முன்னாள், இந்நாள் மாணவர்களும் அபிமானிகளுமே ஆவர். குதிரை வண்டில்களும் மாட்டு வண்டில்களும் வீட்டின் வெளியே அணிவகுத்து நிற்கின்றன. வீட்டினுள் நுழைந்த மக்கள் அவர்களைப் புன்முறுவலுடன் எதிர்கொண்ட அவர்களது ஆசானுக்கு மங்கல உபசாரங்கள் செய்து வண்டிலொன்றில் ஏற்றிக் கொள்கின்றனர்.

பரிவாரங்கள் புடைசூழ வண்டில்கள் யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்லத் தொடங்குகின்றன. இடையில் நவாலியில் அழகான பந்தலொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே அந்த ஊர்வலம் சற்றுத் தங்கி நிற்கிறது. அங்கே கூடியிருந்தோர் அவரை வரவேற்று மலர் மாலைகள் அணிவித்தும், பன்னீர் தெளித்தும், தாம்பூலம் வழங்கியும் மரியாதை செலுத்துகின்றனர்.

வாண வேடிக்கைகள் முழங்க, மக்கள் புடைசூழ மாட்டு வண்டில்களும் குதிரை வண்டில்களும் மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி நகரத் தொடங்குகின்றன. ஓட்டுமடத்தருகே இன்னொரு அலங்காரப் பந்தல். அங்கும் ஆசானை வரவேற்று மதிப்பளிக்கின்றனர். அங்கே பாராட்டுப் பத்திரங்கள் வாசிக்கப்படுகின்றன. ஆசான் மனமகிழ்ந்து சிறந்த மொழி நடையில் நற்சொற்களைக் கூறுகிறார். மக்கள் மென்மேலும் திரள, மீண்டும் ஊர்வலம் யாழ்ப்பாணம் பாடசாலையொன்றுக்குச் செல்கிறது. அந்தப் பாடசாலை அந்த ஆசான் உருவாக்கி அதிபராய்த் திகழும் பாடசாலை. இரவாகி விட்டதால் ஆசான் அப்பாடசாலையிலேயே அன்றிரவு தங்கிக்கொள்ள, மக்கள் சிலரும் அங்கேயே தங்க ஏனையோர் பிரிய மனமின்றி வீடு செல்கின்றனர்.

மறுநாட்காலையில் மீண்டும் பாடசாலையில் மக்கள் கூட்டம் திரளுகிறது. திருவாங்கூரிலே நீதியரசராக இருந்த செல்லப்பாபிள்ளையின் தலைமையில் காலையிலும் மாலையிலுமாய் கூட்டம் நடக்கிறது. ஆசானை வாழ்த்திப் பாராட்டுப் பத்திரங்கள் வாசிக்கப்படுகின்றன. அவற்றுக்கு அவர் மனமகிழ்ந்து பதிலுரைகளை வழங்குகிறார். மிக்க விமர்சையாகக் கூட்டம் நடந்து முடிகிறது.

ஊரெல்லாம் திரண்டு பெரும் திருவிழாவாக, அதுவும் இரண்டு நாள்கள் கொண்டாடித் தீர்த்த அந்த ஆசான் யார்? ஏன் அவருக்கு அத்தனை பெரிய விழா? அந்தப் பாடசாலை இப்போது எங்குள்ளது? அதனை அறிய நாம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகள் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இற்றைக்குச் சரியாக 201 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள்...

ஈழவளநாட்டின் யாழ்ப்பாணத்தின் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த முத்துக்குமாரபிள்ளை படகேறிக் கடல்கடந்து தமிழகத்தின் சிதம்பரத்தில் நடராசர் முன் மனமுருகி நின்றிருந்தார். குடும்பத்தில் ஆண்வாரிசு மிக அவசியம் என்று கருதப்பட்ட காலகட்டம் அது. முத்துக்குமாரருக்கோ ஏற்கனவே நான்கு பெண் பிள்ளைகள். ஐந்தாவதாகவேனும் ஆண்பிள்ளை அருள்க என்ற வேண்டுதலுடன் நடராச தரிசனத்துக்குக்காகக் காத்திருந்தார் முத்துக்குமாரபிள்ளை.

முத்துக்குமாரரின் வேண்டுதல் பலித்தது போலவே 1820இல் அவருக்கு ஆண்மகவொன்று கிடைத்தது. சிதம்பரம் சென்றுவந்த பின்னர் கிடைத்த பிள்ளையல்லவா? ஆதலால் சிதம்பரப்பிள்ளை யென்றே தனது மகனுக்குப் பெயரிட்டார் முத்துக்குமாரர்.

முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை! வில்லியம் நெவின்ஸ் என்ற பெயராலும் அறியப்படும் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை (1820-1889) பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தின் கல்வியில் மிக முக்கிய செல்வாக்குச் செலுத்திய ஆளுமை. தமிழ், ஆங்கிலம், வடமொழியென மும்மொழிகளிலும் பெரும் புலமை மிக்கவர். கணிதப்புலியென அழைக்கப்படுமளவு சிறந்த கணித அறிஞர்.

**சிதம்பரப்பிள்ளை இல்லையேல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற ஒன்றே இல்லை. ஆனால் இப்போதைய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு அவரை யாரென்றே தெரியாது.**

தாமோதரம்பிள்ளைக்கும் நாவலருக்கும் முன்னரே சுவடிகளிலிருந்து நூல்களைப் பதிப்பித்த முன்னோடி. பெரிய புராணத்தையும் கந்தபுராணத்தையும் திருக்குறளையும் இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் தமிழ் மாணவருக்குப் பாடசாலையில் அறிமுகம் செய்தவர்,

தர்க்கவியலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து சிவஞானசித்தியாரோடு ஒப்பிட்டு நூலாக்கிய தர்க்கவியலாளர். தமிழில் வைத்தியக் கல்வியை அறிமுகப்படுத்திய வைத்தியர் கிறீனின் முயற்சிகளுக்கு முக்கிய பங்களித்தவர். அவ்வகையில் முக்கிய மொழிபெயர்ப்பாளர்.

மாணவருக்கான ஆங்கில தமிழ் அகராதியை உருவாக்கி வழங்கிய அகராதியியலாளர். அத்துடன் அமெரிக்க மிசனரிமாரின் பல்வேறு அகராதி முயற்சிகளுக்குப் பங்களித்தவர். தமிழின் வசன இலக்கணத்துக்கு இலக்கணநூல் யாத்த இலக்கணவியலாளர்.

அமெரிக்க மிசனரியினரால் 1842இல் வெளியிடப்பட்ட மிக முக்கியமான தமிழ் அகராதிக்கு இருபத்துநான்கு சீர்காழி நெடிலடி ஆசிரிய விருத்தம் எழுதியபோது சிதம்பரப்பிள்ளைக்கு வயது 22 மட்டுமே. அந்த வகையில் அவர் ஒரு தமிழ்ப் புலவரும் ஆவார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கால் நூற்றாண்டுக்கு மேல் (1861-1886) தலைமையாசிரியராய் இருந்து யாழ்ப்பாணச் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு ஆற்றியவர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நிறுவுனரும் அதன் முதலாவது அதிபரும் இவரே. இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே நடந்தது. அது சிதம்பரப்பிள்ளை ஆசிரியப் பணியில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்ததற்கான விழாவாக அமைந்திருந்தது.

இத்தனை சிறப்புக்கள் மிக்க இந்தப் பேராளுமைமிக்கவர் குறித்து இன்றைய காலத்தில் பலருக்கும் தெரிவதில்லை. அதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. தனது வாழ் நாளில் பெரும்பகுதி கிறித்தவராகவே அறியப்பட்ட அவர், தான் நீண்டகாலம் தலைமை ஆசிரியராக இருந்த மத்திய கல்லூரியின் மாணவர் குழாமிலிருந்து பலரையும் பிரித்துத் தனிப் பாடசாலையாக்கி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தோற்றத்துக்குக் காரணமானார். அந்தப் பாடசாலையைச் சைவர்களிடம் ஒப்படைத்தார். இதனால் கிறித்தவர்கள் பார்வையில் அவர் சைவராக இருந்தார்.

ஆனால் தமது வாழ்நாள் முழுதும் கிறித்தவராக இருந்த வில்லியம் நெவின்ஸ் சைவர்களுக்குக் கிறித்தவராகவே தெரிந்தார். இதனால் இருபகுதி வரலாற்றாசிரியர்களும் இவரது கல்விப் புலப் பங்களிப்பினைச் சரிவரப் பதிவு செய்யத் தவறினர். கால ஓட்டத்தில் இவரது பெயர் மங்கியது.

சிதம்பரப்பிள்ளை இல்லையேல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற ஒன்றே இல்லை. ஆனால் இப்போதைய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு அவரை யாரென்றே தெரியாது. அவரது பிறப்பின் 200ஆவது ஆண்டைக் கோலாகலமாகக் கொண்டாட வேண்டிய கல்லூரியில் சிதம்பரப்பிள்ளையின் ஒரு புகைப்படம் கூட இல்லை.

சிதம்பரப்பிள்ளையின் வரலாற்றை மறைக்கும் முயற்சிகளால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்ப வரலாறே இன்று தெளிவற்றுக்கிடக்கிறது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சமூகத்துக்குக் கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டு கூட இப்பொழுது சரிவரத் தெரியாது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஏன், எப்படி, எப்போது உருவானது என அடுத்த வாரம் தொடர்வோம்.




# கருக்கப்பட்ட காஞ்சனா!!

## பண்ணைக் கொலைப் பயங்கரத்தின் பின்னணி என்ன?



ஓரேயொரு கொலை, ஒட்டுமொத்த இலங்கையையும் உலுக்கி விட்டிருக்கிறது. பேருவளையில் இருந்து மருத்துவராகும் கனவோடு , யாழ்ப்பாணத்தில் கால் பதித்த ரொஷானி காஞ் சனா , அவரது கணவரால் பட்டப்பகலில், யாழ்ப்பாணம் ,பண்ணைக் கடற்கரையில் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்டார். கொலையைச் செய்துவிட்டு சாவகாசமாக தப்பிச் செல்ல நினைத்த அவரது கணவர் ,பிடிக்கப்பட்டு இப்போது பெப்ரவரி 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அந்தக் கொலைக்கான பின்னணி என்ன? என்பது குறித்து சஞ்சீவியின் 'தடயத்தை தேடி' குழு களத்தில் இறங்கியது. பொலிஸ் தரப்பில் இருந்தும், ஏனைய சில சாட்சியங்கள், தகவல்கள் வாக்குமூலங்களை வைத்தும் பெறப்பட்டவற்றை இங்கு மூன்று தரப்பு தகவல்களைத் தந்துள்ளோம். எனினும் இவை எல்லாம் முடிந்த முடிவுகளோ, தீர்ப்புகளோ கிடையாது. இந்தத் தகவல்களை வைத்து வாசகர்களாகிய நீங்கள் உண்மையைத் தீர்மா னித்துக்கொள்ளுங்கள்.

## "என் தேவதையை நானே கொன்றேன்!"

**சந்தேக நபரின் வாக்குமூலம்**

(லான்ஸ் கோப்ரல் மத்துமகே டோன் தரங்க உதித் குமார, 662 ஆவது படையணி, பரந்தன் இராணுவ முகாம் )



நான் காஞ்சனாவை 2015 இல் தான் முதல்முதலில் அவள் ரியூசனுக்குப் போகும் போது கண்டேன். விடுமுறையில் நான் பேருவளைக்குச் சென்றபோது காஞ்சனாவுக்கும் எனக்கும் பழக்கம் உண்டானது. நாளடைவில் இருவரும் மனதாரக் காதலித்தோம். அவளுக்கு மருத்துவபீட அனுமதி கிடைத்து யாழ்ப்பாணம் வந்த பின்னும் எங்கள் காதல் தொடர்ந்தது.

2017இல் இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டோம். தனியாக வீடொன்றும் வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தோம். பல்கலைக் கழக விடுமுறையின் போது, நானும் விடுப்பு எடுத்து பேருவளைக்கு வருவேன். அது என் வாழ்வின் இன்பமான காலம். இந்தத் தருணத்தில்தான் எங்கள் வாழ்வில் அதிஉச்ச மகிழ்ச்சியும் அதிஉச்ச ஏமாற்றமும் ஏககாலத்தில் நடந்தது.

**உடைந்த மகிழ்வு**

நாம் இருவரும் மகிழ்வாக இருந்ததன் சாட்சியமாக காஞ்சனா கருத்தரித்தாள். எனக்கு எல்லையில்லாத பூரிப்பு. ஆனால் காஞ்சனாவுக்கு இதில் உடன்பாடு இல்லை என்பது போகப்போக புரிந்தது. என்றாலும் மருத்துவப் பரிசோதனைக்கு தவறாது வருவாள். காஞ்சனாவின் கருவில் இரட்டைக் குழந்தைகள் உருவானதை அறிந்து என் மகிழ்ச்சியும் இரட்டிப்பானது. ஆனால் அந்த மகிழ்ச்சிக்கு ஆயுள் அதிகம் இருக்கவில்லை. ஒருநாள் தாய் வீட்டுக்கு போவதாக சொல்லிச் சென்ற காஞ்சனா சில நாள்களாக என்னோடு தொடர்புகொள்ளவில்லை. பலமுறை தொலைபேசியில் அழைப்பெடுத்தும் பதில் இல்லை. என்னாயிற்றோ என்ற பதற்றத்தோடு, அவள் வீட்டுக்கு ஓடிப்போனேன். அங்கே ஒரு பூனைக்குட்டி போல காஞ்சனா சுருண்டு போய் படுத்திருந்தாள். என்ன நடந்தது என்று ஒரு கணம் புரியவில்லை. அவள் தாயார்தான் என்னை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று "இப்போது குழந்தை பெற்றுக்கொள்வதை காஞ்சனா விரும்பவில்லை. அவளது மருத்துவப் படிப்புக்கு அது இடையூறாக இருக்கும் என்று நினைக்கிறாள். அதனால் எங்களுக்குத் தெரிந்த ஓரிடத்தில் அவளுக்குக் கருக் கலைப்புச் செய்துவிட்டோம்" என்று அவர் சொன்னதும் எனக்கு உலகமே இருண்டது போல் இருந்தது.

**விரிசல் பெரிதானது**

அன்று தொடங்கிய விரிசல் மெல்லமெல்ல பெரிதானது. எதற்காக எனக்குக் கூட ஒரு வார்த்தை சொல்லாமல் எனது குழந்தைகளைக் கொன்றாய் என்று அவளைப் பலமுறை கேட்டும் பதில் சொல்லவில்லை. என்னை அலட்சியப்படுத்துவதுபோல நடக்கத்தொடங்கினாள். யாழ்ப்பாணத்திலும் சந்திக்க அழைத்தபோது முன்பெல்லாம் அடிக்கடி தேடிவரும் அவள் இப்போது ஏதேதோ சாட்டுகளைச் சொல்லித் தவிர்த்தாள்.

நான் விடுமுறை எடுத்து வீடு செல்லும் போதெல்லாம் தானும் பேருவளைக்கு வருவதை தவிர்த்துக்கொண்ட காஞ்சனா, எனக்கு எப்போதெல்லாம் லீவு கிடைக்க கடினம் என்று சொல்கிறேனோ அப்போதெல்லாம் தேவையில்லாமல் லீவு எடுத்துக்கொண்டு அவள் ஊருக்குப் போவாள். நான் இல்லாத சந்தர்ப்பத்தில் எதற்காக அவள் ஊருக்குப் போகவேண்டும்? ஒரு முறை எனக்கு லீவு கிடைக்காது என்று சொல்லி விட்டு அவளுக்குத் தெரியாமல் பேருவளைக்குப் போனேன்.

காஞ்சனா எங்கள் ஊரில் உள்ள இன்னொரு இளைஞனை விரும்பத் தொடங்கியிருந்தாள். இது அவளது பெற்றோருக்கும் தெரியும். ஆனால் எல்லோருமாக என்னிடம் மறைத்து விட்டார்கள். நான் காஞ்சனாவை இழக்கத் தயாராக இல்லை. அவனை விட்டுவிட்டு என்னிடம் வருமாறு காஞ்சனாவிடம் காலில் விழாத குறையாகக் கெஞ்சினேன். ஆனால் அவள் மறுத்துவிட்டாள். அவள் பெற்றோரிடம் போய் நியாயம் கேட்டேன்.

**அந்தஸ்தற்றவன்**

"அறியாத வயதில் உன்னை காதலித்து விட்டாள். இனிமேல் அவள் ஒரு மருத்துவர். நீயோ சாதாரண சிப்பாய். இருவருக்கும் ஒத்துவராது. ஒதுங்கிக் கொள்" என்று காஞ்சனாவின் தாய் முகத்தில் அடித்ததுபோல் சொல்லி விட்டார். என்னால் தாங்க முடியவில்லை. பரந்தன் இராணுவமுகாமில் இருந்தாலும் பணியில் கவனம் போகவில்லை. எப்போதும் காஞ்சனாவை நினைத்து அழுதுகொண்டிருப்பேன். ஒரு கட்டத்தில் பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது. எனது துயரை இன்னும் அதிகமாக்குவது போல அடுத்த சம்பவம் நடந்தது.

காஞ்சனா என்னிடம் இருந்து விவாகரத்துக்கோரி வழக்குத்தொடர்ந்திருந்தாள். எப்படியும் என்னோடு மீண்டும் காஞ்சனா சேர்ந்துவிடுவாள் என்று மீதமிருந்த நம்பிக்கையும் தகர்ந்து போனது. கடைசி மட்டும் அவள் என்னோடு சேரப்போவதில்லை என்பதை இந்த விவகாரத்து வழக்கு எனக்கு உறுதியாகச் சொன்னது. வழக்கின் முதலாம் தவணைக்கு நீதிமன்றம் சென்று விட்டு வந்ததிலிருந்து பெரும் குழப்பத்தில் இருந்தேன். காஞ்சனாவின் பிரிவுக்குப் பின் இந்த உலகமே வெறுத்துப்போனது. என் கோபத்தை அதிகப்படுத்துவது போக காஞ்சனா ஒரு காரியம் செய்தாள். தன் புதிய காதலனோடு அவள் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை எனது நண்பர் ஒருவரின் தொலைபேசியில் நான் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. கோபம் தலைக்கேறியது.


**22.01.2020 அதிகாலை.**

காஞ்சனாவுக்கு போன் எடுத்தேன். "முக்கியமான ஒரு விடயம் கதைக்க வேண்டும் பண்ணைக் கடற்கரைக்கு வரமுடியுமா?" என்று கேட்டேன். "ஏன்? என்றாள்" விவகாரத்துப் பற்றி உன்னோடு கதைக்க வேண்டும்" என்றேன். சில நிமிடம் நேரத்தின் பின் சம்மதித்தாள்.

(மறுபக்கம் பார்க்க)




# பொலிஸுக்கு உள்ள சந்தேகங்கள்



1. சந்தேக நபர் தற்செயலாகவே கொலை செய்தார் எனில், எப்படி சில நாட்களுக்கு முன்னரே கத்தியை வாங்கி, கொண்டு வந்திருக்க முடியும்?
2. விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ள போது, சந்தேக நபர் அழைத்த போது, காஞ்சனா எப்படி உடனடியாக வரச் சம்மதித்தார்? சந்தேக நபர் அவரை ஏதோ ஒன்றைச் சொல்லி மிரட்டியே வரச் செய்தாரா?
3. தற்செயலாகக் கொலை செய்தார் எனில், அப்படியே கத்தியோடு வந்து மிக அருகில் இருந்த யாழ். பொலிஸ் நிலையத்தில் ஏன் சந்தேகநபர் சரணடையவில்லை?
4. சந்தேக நபர் எங்கு தப்பிச் செல்ல முயன்றார்?
5. காஞ்சனாவுக்கும் இன்னொரு இளைஞருக்கும் தொடர்பிருப்பதாக சந்தேகநபர் சொல்கிறாரே தவிர அதற்குரிய ஆதாரங்கள் அவரிடம் இல்லை. குறிப்பாக காஞ்சனா இன்னொரு இளைஞரோடு நெருக்கமாக இருக்கும் படத்தைப் பார்த்ததால் தான் கோபம் கூடியதாகக் கூறுகிறார். அந்தப் படம் கூட அவரிடம் இருக்கவில்லையே.ஏன்?

**“அறியாத வயதில் உன்னை காதலித்து விட்டாள். இனிமேல் அவள் ஒரு மருத்துவர். நீயோ சாதாரண சிப்பாய். இருவருக்கும் ஒத்துவராது. ஒதுங்கிக் கொள்” என்று காஞ்சனாவில் தாய் முகத்தில் அடித்ததுபோல் சொல்லி விட்டார். என்னால் தாங்க முடியவில்லை”**



## கொலை நாள்

அரைநாள் லீவை முகாம் பொறுப்பதிகாரியிடம் கெஞ்சிக் கூத்தாடிப் பெற்றுக்கொண்டு உடனேயே பரந்தனிலிருந்து பண்ணைக்குப் பஸ் ஏறினேன்.

நான் வருமுன்னே காஞ்சனாவும் வந்திருந்தாள். பண்ணைக் கடற்கரையில் ஓரமாக அமர்ந்தபடி விவாதிக்கத் தொடங்கினோம். காலை 9 மணிக்குத் தொடங்கிய உரையாடல் 2 மணியாகியும் தொடர்ந்தது. ஆனால் நான் உருகி வழிந்து என் அன்பை காஞ்சனாவுக்கு சொன்ன போதும் அவள் தனது புதிய காதலனை விட்டு என்னோடு வர ஒத்துக்கொள்ளவில்லை. தன் முடிவில் அவள் பிடிவாதமாக இருந்தாள். அந்தப் பிடிவாதம் எனக்குள் கோபத்தை அதிகரிக்கச் செய்தது. ஒரு கட்டத்தில் கோபம் தலைக்கேற நான் கொண்டுவந்த பையினுள் கையை விட்டேன்.

சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் வாங்கி பதுக்கி வைத்திருந்த கத்தியை சரேலென வெளியில் எடுத்தேன். காஞ்சனா என்ன நடக்கிறது என்பதை உணர்வதற்கிடையில் கழுத்தை என் கோபம் அனைத்தையும் ஒன்று திரட்டி ஓங்கிக் குத்தினேன். இரத்தம் .தெறித்தது. அப்படியே கத்தியை இழுத்தெடுத்து காஞ்சனாவின் மார்பிலும் கழுத்திலும் பலம் கொண்ட மட்டும் ஒரே இழுவையாக வெட்டினேன். கத்தி உடைந்து போனது: நிலமெங்கும் இரத்தம் வழிய காஞ்சனா கீழே விழுந்தாள். அப்போதும் என் ஆத்திரம் அடங்கவில்லை. அவள் காலைப் பிடித்து தூக்கி கீழே தள்ளிவிட்டேன். குருதி கொப்பளிக்க கடலுக்குள் போய் விழுந்தாள்.

எல்லாமே என்னையும் மீறி தற்செயலாக நடந்து விட்டன. மெதுவாக என்னை ஆசுவாசப்படுத்தினேன். எதுவுமே நடக்காததுபோல என் முகத்தைக் கழுவி தண்ணீரை அருந்தி விட்டு நடக்கத் தொடங்கினேன். இங்கிருப்பவர்கள் எவருக்கும் என்னைத் தெரியாது. நான் கொலை செய்ததை கண்டிருந்தாலும் பஸ் ஏறிவிட்டால் எங்காவது சென்று தப்பி விடலாம் என நினைத்தேன். ஆனால் பஸ் நிலையத்தில் சுற்றி வளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டேன். என் ரிசேர்ட்டில் தெறித்திருந்த காஞ்சனாவின் குருதி என்னை இலகுவாகக் காட்டிக்கொடுத்திருந்தது.

## “ அவன் ஒரு சைக்கோ!”

(காஞ்சனாவோடு கல்வி பயிலும் மருத்துவபீட மாணவர்கள் சிலரின் கருத்துக்களை வைத்து...)

“ காஞ்சனா படிப்பில் சாதிக்க வேண்டும் என்ற சிந்தனையோடுதான் எப்போதுமிருப்பாள். முதலில் அவள் திருமணமான விடயத்தை எங்களிடம் சொல்லவில்லை. போகப் போக அவள் சோகமாக இருக்கும் போது , அதற்கான காரணத்தைக் கேட்ட போதே, அவள் தன் வாழ்வின் துயரங்களை நண்பர்களோடு பகிர்ந்து கொண்டாள். ஊடகங்களில் வருவது போல, அவளுக்கும் இன்னொருவருக்கும் புதிய காதல் எதுவுமிருப்பதாக நாம் அறியவில்லை. அப்படிப்பட்ட பெண்ணும் அல்ல அவள். அவளின் கணவன் ஒரு சைக்கோ என்று சொல்லி காஞ்சனா அழுவாள். அவளின் உணர்வுகளை அவன் மதிப்பதில்லை. அத்தோடு காஞ்சனா மருத்துவர் ஆகிவிடுவாள் என்பதால், கணவனிடம் ஒரு தாழ்வுச் சிக்கல் உருவாகி இருந்தது. அதுவே வீணான சந்தேகவாதியாக அவர் மாறக் காரணம் என்றும் காஞ்சனா சொல்லி இருக்கிறாள். அவள் கருத்தரித்திருந்தாள் என்பதும், கருக்கலைப்புச் செய்தாள் என்பதும் கூட அவனின் கற்பனையாகத்தான் இருக்க வேண்டும். எங்களுக்குத் தெரிந்து அப்படி எதுவும் நடக்கவில்லை. காஞ்சனாவின் நடத்தையில் களங்கத்தைக் கற்பிக்க அந்தக் கயவன் நினைக்கிறான் போலும், காஞ்சனாவைக் கொல்வதற்கு எந்தக் காரணமும் தெரியாததால், இப்படி ஒரு கதையை அவன் சொல்லக் கூடும். ஆனால் எங்கள் காஞ்சனா எந்த அப்பழுக்குமற்ற தேவதை”

## அவளை எப்போதோ கொன்றுவிட்டார்கள்!

காஞ்சனாவிடமிருந்து எமக்கு கடைசியாக வந்த செய்தி “கோல் மீ ” என்பதுதான். நண்பர்கள் அங்கு போவதற்கு முன்னரேயே எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. அந்த இடத்தில் நடந்தவைகளை மறக்க முயல்வோம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது இலகுவான காரியமல்ல.

ஆனால் இது தொடர்பில் பொது மக்களினதும் , ஊடகங்களினதும் நடவடிக்கைகளைத்தான் எங்களால் தாங்க முடியவில்லை. யாழில் உள்ள சில ஊடகங்கள் அவளுக்குப் பல்கலைக் கழகத்தில் ஒருவருடன் தொடர்பு இருந்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தன .மேலும் இந்த படுகொலைக்குப் பின்னர் அவரது உடல் நீரில் மூழ்கிய நிலையிலுள்ள படங்களையும் வெளியிட்டன.

அந்தப் பெண் இப்படித்தான் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஊடகங்கள் நினைப்பதையே இவை பிரதிபலித்தன. அதே வேளை இந்தக் கொலையையும் கண்டித்துள்ளதுடன் அந்தச் சூழலில் இருந்தவர்களையும் இவை குறை கூறியுள்ளன.

இப்படியொரு சம்பவம் இடம்பெறப் போவதை கஞ்சனா யூகித்து தனது நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளதுடன் விவாகரத்துக்கும் விண்ணப்பித்தி ருந்தாள்.

கடந்த இரண்டு வருடங்களாகவே அவளுடைய கணவனின் குடும்பத்தினர் அவளை ஒரு விலங்கைப் போலவே நடத்தி வந்துள்ளனர். கிட்டத்தட்ட அவளை அவர்கள் எப்போதோ மன ரீதியாகக் கொன்றுவிட்டார்கள். ஆனால் அவள் உண்மையில் மிகத் தைரியமானபெண். எந்த நேரமும் அவளது தாய் படும் கஷ்டங்களுக்கு ஒரு விடிவைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதே அவளது நோக்கமாக இருந்தது.

**காஞ்சனாவின் நண்பர் ஒருவரின் பதிவு**

## வித்துவான் பதில்கள்



ஹாய்... எல்லோருக்கும் வணக்கம். நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்களைச் சந்திக்கப் போகிறேன். இதுநாள் வரை நீங்கள் உங்கள் மனதுக்குள் அடக்கி வைத்திருந்த எல்லா கேள்விகளையும் எழுதி அனுப்புங்கள். சளைக்காமல் பதில் தரக் காத்திருக்கிறேன்.

உங்கள் அன்புள்ள
வித்தூஸ்....

அனுப்ப வேண்டிய முகவரி:

**‘வித்துவான் பதில்கள்’**
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com

## சிறுவர் சினிமா

### Finding Nemo



கண்ணாடித் தொட்டிகளுக்குள் துள்ளித் திரியும் அழகான வண்ண வண்ண மீன்களைப் பார்த்திருப்போம். அந்த மீன்கள் எம்மைப் போல் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனவா? எம்மைப் போல் சிரித்து விளையாடுகின்றவா? இந்த மாதிரியெல்லாம் எமக்குத் தோன்றியிருக்கும். அம்மா, அப்பாவிடம் கேட்டிருப்போம்.

அது போல பேசிச் சிரித்து விளையாடும் மீன்கள் கூட்டம் ஒன்று கடலுக்குள் இருக்கும் ஒரு பெரிய பாறையில் வசித்துவருகின்றன. அங்கு மர்லின், க்ளாரா என இரு ஜோடி மீன்கள் இருக்கின்றன. அவை இரண்டும் அப்பா, அம்மா ஆகப் போகும் காலம் அது. க்ளாரா நிறைய முட்டைகளை இட்டிருந்தது. அவற்றை க்ளாராவும், மர்லீனும் பாறை இடுக்கில் மறைத்துப் பாதுகாத்து வந்தன. ஒரு நாள் திடீரென அந்தப் பக்கம் ஒரு சீலா மீன் வந்துவிடுகிறது. முட்டைகளைப் பாதுகாப்பதற்காக மர்லின் முதலில் அதனுடன் சண்டை போடுகிறது. ஆனால் சீலா மீன் அதைத் தாக்க, அது மயங்கிக் கீழே விழுந்து விடுகிறது. கண் விழித்துப் பார்க்கும்போது அங்கு க்ளாராவும் இல்லை. முட்டைகளும் இல்லை. மர்லின் அழுதது. அப்போது ஒரே ஒரு முட்டை மட்டும் சிதறி ஒரு ஓரத்தில் கிடந்ததை அது கண்டது. அது க்ளாரா ஆசையுடன் பெயரிட்ட நீமோ. மர்லின், சந்தோஷத்துடன் நீமோவைச் செல்லம் கொடுத்துக் கொஞ்சி வளர்க்கிறது. அதே சமயத்தில் அது நிமோவைத் தனியாக எங்கும் விளையாட அனுப்பாது. நீமோவுக்கு இந்த அப்பா ஏன் இப்படி இருக்கார்? விளையாட எங்கும் அனுப்ப மாட்டாரா? என்ற வருத்தம். ஆனாலும் விளையாடக் கூட்டிப் போகச் சொல்லி அடம் பிடிக்கிறது. ஒரு நாள் மர்லினும் தன் மகன் நீமோவை வெளியே அழைத்துச் செல்கிறது. அப்போது மனிதர்கள் விரித்த வலைக்குள் நீமோ சிக்கிக் கொள்கிறது. நீமோ மீன் குஞ்சு எப்படித் தப்பித்தது? அப்பா மர்லினும் மகன் நீமோவும் சேர்ந்தார்களா? Finding Nemo படத்தைப் பாருங்கள்.



# வண்ணத்து பூச்சியின் கடைசி ஆசை!

அரச மரத்தடி ஒன்றில் எறும்புக் கூட்டம் ஒன்று வாழ்ந்து வந்தது. தங்களுக்குத் தேவையான உணவை மழைக்காலத்துக்கு முன்பாகவே சேர்த்து விடுவதற்காக சுறுசுறுப்பாக உழைத்துக் கொண்டிருந்தன எறும்புகள். அந்தப்பக்கம் வந்த வண்ணத்துப்பூச்சிக்கு எறும்புகளைக் கண்டதும் ஏனோ அவற்றை வம்புக்கு இழுக்க வேண்டும் என்று தோன்றியது. தன்னுடைய அழகான இறக்கைகளை வேகமாக அடித்துக்கொண்டு பறந்தது. திடீரென்று நிழல் படிவதையும் வேகமாகக் காற்று வீசுவதையும் கண்ட எறும்புகள் என்னவோ ஏதோ வென்று நிமிர்ந்து பார்த்தன. அட! வண்ணத்துப் பூச்சியா? நான் ஏதோ பெரிய கழுகு என்றல்லவா பயந்தேன் என்றது ஒரு எறும்பு.

எறும்புகள் தன்னைக் கண்டுகொள்ளாமல் வேலையில் மூழ்கியிருந்ததைக் கண்ட வண்ணத்துப்பூச்சி அந்த எறும்புகளுக்குத் தான் யார் என்று காட்ட வேண்டும் என்று நினைத்தது. இன்னும் கொஞ்சம் வேகமாகத் தனது இறக்கைகளை அசைத்தபடி எறும்புக் கூட்டத்துக்கு வெகு அருகில் சென்றது. வண்ணத்துப்பூச்சியின் வேகமான சிறகசைப்பு, எறும்புகளுக்குப் புயற் காற்றைப் போலிருந்தது. எறும்புகள் நிலை தடுமாறின. கையிலிருந்த உணவுப் பொருள்களைக் கைவிட்டன. வரிசை கலைந்தது. பறந்து போய் விழுந்ததில் பல எறும்புகளுக்குக் காயம் ஏற்பட்டது. ராணி எறும்பு வண்ணத்துப்பூச்சிக்கு அருகில் வந்தது. அழகான வண்ணத்துப்பூச்சியே. எங்களை வேலை செய்யவிடாமல் ஏன் தொந்தரவு செய்கிறாய்? என்று அமைதியாகக் கேட்டது. ஏய்! அற்ப எறும்பே! நான் என்பாட்டில் பறந்து செல்கிறேன். இதில் உங்களுக்கு என்ன கஷ்டம்? என்றது வண்ணத்துப்பூச்சி.

நீ அருகில் வந்து வேகமாக உனது இறக்கைகளை அசைப்பதால் எங்களால் சரியாக நடக்க முடியவில்லை. அதனால் நீ சற்றுத் தள்ளி உன் விருப்பம் போல வேகமாகப் பறந்து செல்லலாமே என்றது ராணி எறும்பு. என்ன? எனக்கு நீ ஆணையிடுகிறாயா? நான் இங்கே தான் பறப்பேன். உன்னால் முடிந்ததைச் செய் என்றது வண்ணத்துப்பூச்சி. எறும்புகள் அனைத்தும் புற்றுக்குள் சென்றன.

பயந்துகொண்டு ஓடிவிட்டன எறும்புகள் அனைத்தும் என்று சத்தமாகக் கூறிக் கொண்டே வேகமாகப் பறந்து சென்றது வண்ணத்துப்பூச்சி. அப்போது இரையைக் குறிபார்த்து வேகமாக வந்துகொண்டி ருந்த பெரிய வண்டு ஒன்று, வண்ணத்துப்பூச்சி மீது மோதிவிட்டது. எதிர்பாராமல் நிகழ்ந்த இந்த விபத்தில் வண்ணத்துப்பூச்சி தன் இறக்கைகளை இழந்து, பொத்தென்று எறும்புப் புற்றுக்கு அருகில் விழுந்தது. வலியுடன் வண்ணத்துப்பூச்சி பறக்க முயன்றது. ஆனால், பறக்க முடியவில்லை. தொடர் முயற்சியால் சோர்வுற்றது. பாதி மயங்கிய நிலையில் அப்படியே வெயிலில் கிடந்தது. ஏதாவது செய்து அந்த வண்ணத்துப்பூச்சியைக் காப்பாற்றுங்கள் என்று ஆணையிட்டது ராணி எறும்பு. எறும்பு கள் உதவி செய்யத் துடிப்பதைக் கண்ட வண்ணத்துப்புச்சி, தான் செய்த செய லுக்கு வருந்தியது. எறும்புகளே, நான் உங்களைத் துன்புறுத்தினேன். ஆனாலும் என்னைக் காப்பாற்றத் துடிக்கிறீர்கள். எனது தவறை உணர்ந்து விட்டேன். எம்மைப் போன்ற புச்சி இணங்கள் இறந்துவிட்டால் நீங்கள் தான் தூக்கிச் சென்று அடக்கம் செய்ய வேண்டும் என்பதே எனது கடைசி ஆசை என்றது வண்ண்த்துப்பூச்சி. அப்படியே ஆகட்டும் என்றது ராணி எறும்பு. அன்றிலிருந்து சகப்பூச்சிகள் இறந்தால் எறும்புகள் எல்லாம் சேர்ந்து, தூக்கிச் செல்வது வாடிக்கையாகிவிட்டது.




## பிரபஞ்ச ரகசியங்கள்

- சூரிய ஒளி பூமியை வந்தடைய 8 நிமிடங்களும், 20 விநாடிகள் ஆகின்றன.
- சூரியனைப் பூமி சுற்றும் வேகம், துப்பாக்கியிலிருந்து வெளியேறும் குண்டின் வேகத்தைப் போல் எட்டு மடங்காகும்.
- சந்திரன் பூமியை நோக்கி, ஒவ்வொரு ஆண்டும் அரை அங்குலம் நகர்ந்து வருகிறது.
- செவ்வாய்க் கோளின் வர்ணம் செம்மஞ்சள் நிறத்தில் உள்ளது.
- வியாழன் கோளின் ஒரு சந்திரனின் பெயர், அயோ
- விண்வெளிக்குச் சென்ற முதல் உயிரினம், லைகா என்கிற நாய். அந்த நாய் 1957 ஆம் ஆண்டு, ரஷ்ய விண்கலத்தில் பரிசோதனை முறையில் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.



## பிஞ்சு தூரிகை



**சிறுவர் சுடர்** வாசகர்கள் என்றால் சும்மாவா? உங்கள் திறமைக்கு சவால் விட பல போட்டிகளை நடத்த உள்ளோம். இந்தப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறும் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும். அனைத்து குட்டீஸ்க்கும் வாழ்த்துகள். தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்று அசத்துங்கள்.

**சஞ்சீவி சிறுவர் சுடர்** வாசகர்களுக்கான ஓவியப்போட்டி ஒவ்வொரு பிரிவுக்கும் வேறுபட்ட தொனிப் பொருளில் நடத்தப்படவுள்ளது.

3 முதல் 6 வயதுவரையுள்ள பிரிவுக்கு **'வண்ணக் கனவுகள்'** என்ற தொனிப்பொருளிலும்,

7 முதல் 12 வயதுவரையுள்ள பிரிவுக்கு **'வாழ்வின் மகிழ்ச்சி'** என்ற தொனிப்பொருளிலும்,

13 முதல் 15 வயது வரையுள்ள பிரிவுக்கு **'இனியொரு விதி செய்வோம்'** என்ற தொனிப் பொருளிலும் ஓவியப் போட்டி இடம்பெறும்.

போட்டியாளர்கள் வெள்ளை A4 தாளில் வரைந்து அனுப்ப முடியும். மூன்று பிரிவுகளிலும் தேர்ந்தெடுக்கப்படும் வெற்றியாளர்களுக்கு பல பரிசுகள் காத்திருக்கின்றன.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
உதயன் சஞ்சீவி
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*



## மழையே மா மழையே!

மழையும் நன்றாயப் பொழிகிறது
மனதோ அழகில் நனைகிறது
அழைக்கும் அழகில் அலைகிறது
அசையும் இலைகள் செழிக்கிறது
வெள்ளம் தெருவில் பாய்கிறது
தவளை நின்று பாடுகிறது
உள்ளம் புதிதாய்த் துள்ளுகிறது
உலகே நமக்காய் பிறக்கிறது

–அஜந்தகுமார் தருமராசா

